# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 24 ஜுன் 1993 விலை 7/=





# இனப்பிரச்சினைக்குத் தீர்வு:

## மீண்டும் இந்தியா?

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக மீண்டும் இந்தியாவை சேர்த்துக் கொள்ளும் முயற்சியில் இலங்கையின் அரசியல் கட்சிகளும், பிரமுகர்களும் ஈடுபட்டு வருவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. இதுவரை காலமும் இனப்பிரச்சினைக்கான தீர்வில் இந்தியாவின் பங்களிப்பை தொடர்ந்து மறுத்து வந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவுக்குப் பின் தோன்றியுள்ள அரசியல் சூழலில், இதற்கான வாய்ப்புகள் கனிந்துள்ளதாக இப்பிரமுகர்கள் கருதுவதாகத் தெரியவருகிறது.

அண்மையில் புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது பேச்சொன்றின் போது இனப்பிரச்சினை தொடர்பாக அரசு தீர்வொன்றை முன்வைக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார். இதுவரை காலமும் நடந்த பாராளுமன்ற தெரிவுக்குழுவில் நம்பத்தக்க தீர்வெதனையும் முன்வைக்காத அரசு இப்போது தீர்வை முன்வைக்கப் போவதாகக் கூறுவதும் ஜனாதிபதி இனப்பிரச்சினையே இல்லை என அறிவித்துள்ளதும் சேர்த்து நோக்கப்படும் போது, இத்தீர்வு எத்தகையதாக அமையப்போகிறது என்கிற சந்தேகம் எழுவதில் வியப்பில்லை. அரசினால் முன்வைக்கப்படவுள்ள தீர்வை நடைமுறைப்படுத்த இந்திய-இலங்கை கூட்டுப் படை நடவடிக்கைக்கு வாய்ப்பு இருக்கிறதென்றும், 1987 போலல்லாது இது இலங்கை கூட்டுப்படை தலைமையகத்தின் தலைமையின் கீழ் நடக்குமெனவும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

எவ்வாறாயினும் நாட்டின் பிரச்சினை தீர்ந்தால் சரி என்று கனவு காணும் அரசியல் பிரமுகர்களின் இம் முயற்சி இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்கப் போகிறதோ இல்லையோ நாட்டில் மேலும் நெருக்கடியை உண்டு பண்ணும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஆயினும் இது தொடர்பாக தமிழ்க் கட்சிகளின் அபிப்பிராயத்தை சரிநிகர் கேட்டபோது யாரும் கருத்துக் கூற மறுத்து விட்டனர்.


### ஒரு மகிழ்ச்சியான செய்தி

எங்களுடைய சக்திக்கு அப்பாற்பட்ட காரணங்களால் சரிநிகர் மே மாத இதழைக் கொண்டு வர முடியவில்லை மே, ஜுன் இரண்டையும் சேர்ந்து இந்த இதழ் 16 பக்கங்களாக வெளிவருகிறது.

வாசர்களுக்கும், சரிநிகர் ஆர்வலர்களுக்கும் ஒரு மகிழ்ச்சியான செய்தி; உங்களது வேண்டுகோளுக்கிணங்க இந்த இதழிலிருந்து இரண்டு வாரத்திற்கொரு முறை சரிநிகர் வெளிவரும்.

ஆனால் ஒன்று.இதுவரை ஐந்து ரூபாவாக இருந்த சரிநிகரின் விலையை ஏழு ரூபாவாக உயர்த்த வேண்டிய நிர்ப்பந்தம் எங்களுக்கு. பத்திரிகைத் தாளின் விலையேற்றம், வரி அதிகரிப்பு என்று எம்மை நிர்ப்பந்தித்த காரணிகள் ஏராளம்.

இதனைப் பொருட்படுத்தாது உங்கள் ஆதரவை தொடர்ந்தும் வழங்குவீர்கள் என எதிர்பார்க்கிறோம் ஆ-ர்.




## "எல்லாம் தருவோம்"

## "எதுவும் தரோம்"

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா கொல்லப்பட்ட சிலமணி நேரங்களுக்கெல்லாம், முன்னால் பிரதமர் டி.பி.விஜேதுங்க அவர்கள் ஜனாதிபதியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

தலைவரின் கொலையை அடுத்து ஏற்படக் கூடிய குழப்பங்கள் எதுவும் இல்லாத முறையில் மிகவும் எளிமையான முறையில், அரசு மிகவும் ஸ்திரமாகவே உள்ளது எனக் காட்டும் வகையில் அவரது பதவியேற்பு நிகழ்ந்தது என்று பத்திரிகைகள் எழுதின.

எல்லாம் தருவோம் என்ற ஜனாதிபதி பிரேமதாசா எதுவும் தராமலே போய்விட்டார். புதிய ஜனாதிபதி, பாராளுமன்றத்தில் வைத்து பத்திரிகையாளர்கட்கு அளித்த அவரது முதலாவது பேட்டியிலேயே, மறைந்த அவரது தலைவரது 'எல்லாம்' என்பதன் அர்த்தம் என்ன என்பதை தெளிவுபடுத்தி விட்டார்.

'' வடக்கு கிழக்கில் நிலவுவது இனப்பிரச்சினை அல்ல. அங்கு பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது '' என்பது அவரது அறிவிப்பு.

நாட்டில் நடப்பது என்ன என்பது பற்றிய '' மிகத் தெளிவான சிந்தனையுடனும் ஜனாதிபதி பதவிக்குள்ள பொறுப்புகள், அதிகாரங்கள் என்பன பற்றிய பூரண அறிவுடனும் '' பதவியேற்றதான ஜனாதிபதியின் முதலாவது அறிவிப்பு இது.

ஆக இறுதியில் புதிய, யூ.என்.பியினதும் அரசினதும் தலைவர் என்ற முறையில் அவர்களது நிலைப்பாட்டை மிகத் தெளிவாக அவர் முன் வைத்துள்ளார்.

ஜனாதிபதி பிரேமதாசா போலவன்றி உண்மையை உரைத்ததற்காக அவருக்கு தமிழ் மக்கள் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளார்கள்.

இனப் பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்குப் பதில் யுத்தத்தை தொடர்வதற்கான ஒரு தெரிவுக் குழுவை அவர் நியமிக்க வேண்டியதுதான் பாக்கி.

பேசிப் பேசியே தீர்க்க முடியும் என்று பேசிப் பேசியே காலத்தைக், கடத்துவதில் அவருக்கு நம்பிக்கை இல்லை.

யுத்தத்தை நடத்துவதன் மூலம் எல்லாவற்றையும் தீர்த்துக் கட்டிவிட முடியும் என்று அவர் வெளிப்படையாகக் கூறியதற்காக அவருக்கு சரிநிகரின் நன்றிகள்.

ஆனால், ஒரு விடயம் ஜனாதிபதி அவர்களே! அங்கு இருப்பது உண்மையில் பயங்கரவாதப் பிரச்சினைதான் என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை.

ஆனால் அது உங்கள் தலைமையின் கீழ் இயங்கும் அரச(படைகளின்) பயங்கரவாதம் தான் என்பதைத்தான் நீங்கள் புரிந்து கொண்டிருக்கிறீர்களா என்பதுதான் எமக்கு சந்தேகமாக உள்ளது!

கூடவே ஒரு சந்தேகம். உங்கள் சகாக்களுக்கு இதுவரை புரியாத ஒரு விடயம் இருக்கிறது. அதை அவர்களுக்குப் புரிய வைத்தீர்களோ என்பது எமக்குத் தெரியவில்லை!

புரியாவிட்டால் சொல்லி வையுங்கள்:


பிரச்சினையை பயங்கரவாதப் பிரச்சினையாக அணுகினால் தீர்வு இப்படித்தான் அமையும்.

நீங்கள் நினைப்பதற்கு ஒரு நேரெதிரான தீர்வாக அது இருக்கும்.

ஒரு தனிநாடு

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் முளைக்கும்.

அவ்வளவுதான்!




சரிநிகர்

18/2 அலோ சாலை

கொழும்பு-3.

## இந்த மீள்வருகை எதன் குறியீடு?

ஜேர்மனியில் ஒன்பதுவருட வாழ்க்கைக்குப் பிறகு திரும்பி வந்தார் ஒரு பெண்மணி.
இரண்டு பெண் குழந்தைகள். ஜேர்மனியில் பிறந்து வளர்ந்த வர்கள்.
எனது வீட்டிலிருந்து போகும் போது எனது மகள் 'டட்டா' காட்டுகையில் அவர்கள் சொன்ன வார்த்தை 'ச்சூஸ்'.
இனித் தனது வாழ்க்கையை இலங்கையிலேயே அமைத்துக் கொள்வதென்ற தீர்மானத்துடன் திரும்பி வந்திருப்பவர் அவர்.

கணவன் இன்னும் ஜேர்மனியிலிருந்து வரவில்லை. அவர் வர இன்னும் சில காலம் ஆகலாம். கணவனை அங்கு விட்டு விட்டு குழந்தைகளுடன் கொழும்பு வந்து சேர்ந்துள்ள அவர் சொன்ன தகவல்கள் மிகவும் முக்கியமானவை.
அவர் திரும்பி வந்ததற்கான பிரதான காரணம் பிள்ளைகளின் கல்வி. பாடசாலைக்குச் செல்ல வேண்டிய வயதை எட்டி விட்ட அவர்களுக்கு தமக்குத் தெரியாத 'டொச்' மொழியில் படிக்கவைத்தால் தங்களால் எப்படி அவர்களது எதிர்காலத் திற்கு வழிகாட்ட முடியும் என்று தாம் பயப்பட்டதாக அவர் கூறினார். குளிர் தேசத்தில், சகல வசதிகளும் கொண்ட வீட்டில் வாழ்ந்த குழந்தைகள் இங்கு வந்து $30^{0}c$ வெப்பத்தையும் குந்தி யிருக்கும் கக்கூசையும் சுவரில் ஓடித் திரியும் பல்லிகளையும், கரப்பொத்தான்கள் திரியும் வீட்டு மூலைகளையும், ' சிலோன்காறர்கள் மட்டுமே திரிகிற ' றோட்டுகளையும் பழக்கப் படுத்திக்கொள்ள நிறையக் கஷ்டப்படுகிறார்கள் என்பது உண்மைதான். ஏன் இங்குள்ள றோட்டெல்லாம் குப்பையாக இருக்கிறது, ஏன் இந்த பஸ் எல்லாம் நெரிசலாகப் போகிறது என்று அவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள்; அவஸ்தைப்படுகிறார்கள் என்பதும் உண்மைதான்.
ஆனால், இவை எல்லாவற்றையும் விட அவர்களது கல்வி முக்கியம் என்கிறார் இந்தப் பெண்மணி.
ஜேர்மனியிலுள்ள இவர் போன்ற பல குடும்பத்தவர்கள் கனடா வுக்குப் போகிறார்களாம். அங்கென்றால் ஆங்கிலத்தில் குழந் தையைப் படிக்க வைக்க முடியுமாம்.
ஆனால் கனடாவும் சரி, ஜேர்மனியும் சரி எப்போது தமிழர்க ளைத் திருப்பி அனுப்ப என பார்த்துக் கொண்டிருக்கிறது.
கனடா திருப்பி அனுப்பாது, அது ஜேர்மனி போலல்ல என்று சிலர் சொல்கிறார்கள்.
ஜேர்மனியில் அரசாங்கமே புது நாஜிகளை உருவாக்கி வளர்த்து வருகிறது.
எங்காவது ஒரு நாட்டில் ஏதாவது ஒரு பிரச்சினையில் கொல் லப்படுவதை விட கொழும்பில் சாவது மேல்.
தப்பித் தவறிப் பிள்ளைகள் தப்பினால் அவர்களைப் பார்க்க யாராவது இருப்பார்கள்.
அப் பெண்மணி கூறிக் கொண்டே போனார்.
எனக்கு ஒவ்வொரு நாளும் ஏஜன்சிகளிடம் லட்சக் கணக்கில் காசு கட்டிக் கொண்டிருக்கும் நம்மவர் நினைவு வந்தது.
இந்த மீள் வருகை எதன் குறியீடு ?

## அரை நூற்றாண்டு கால பாராளுமன்ற ஜனநாயகம்.


டக்கு கிழக்கில் தமிழ் மக்கள் நடாத்திய உரிமைப் போரின் விளைவாக, தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காகவென்று அறிமுகப்படுத்தப்பட்டதுதான் மாகாண சபை முறைமை.
வடக்கு கிழக்கு இணைந்த முதல் மாகாண சபை, தமிழீழப் பிரகடனத்துடன் கலைந்து போயிற்று.
கலைந்து போன சபையை ஜனாதிபதி கலைத்து வைத்தார்- உத்தியோக பூர்வமாக.
இப்போது மே 17இல் நடக்கவுள்ள தேர்தலில் வடக்கு கிழக்கு சேர்க்கப்படவில்லை.
நெல்லுக்கிறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கு மாங்கே பொசியுமாப்போல், உருவானவைதான் மற்றைய ஏழு மாகாண சபைகளும், இப்போது அவற்றுக்கு தேர்தல் நடக்கப்போகிறது.
வடக்கு கிழக்கில் 'அமைதியும் ஒழுங்கும்' இல்லை என்று கூறி தேர்தல் நடாத்தப்படவில்லை.
அங்கு 'அமைதியும் ஒழுங்கும்' இல்லாததற்கு யார் காரணம் அல்லது எது காரணம் என்பதைப் பற்றி மற்றைய மாகாணங்க ளில் தேர்தலை நடாத்தும் அரசோ போட்டியிடும் கட்சிகளோ எவையும் அக்கறைப்படவில்லை.
தமிழ்க் கட்சிகளுக்கும் அதில் அக்கறையில்லை.- ஒருவரைத் தவிர குமார் பொன்னம்பலம்.
அவர் மட்டும்தான் இதைப் பற்றி ஓரளவுக்காவது கதைக்கிறார்; எதிர் வாக்குப் போடும்படி கேட்கிறார்.
தமிழ் மக்களின் தலைவிதி இப்படி இருக்கிறது.
வாக்களிப்பதும் வாக்களிக்காமல் விடுவதும் எல்லாமே தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒன்றுதான்.
வாக்களித்தும் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்ப டுவதில்லை; அல்லது தெரிவு செய்யப்பட்டவர்கள் தமிழ் மக்க ளின் பிரதிநிதிகளாக இருந்ததில்லை.
தமிழ் மக்களின் கடந்த கால வரலாற்றில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளை விட தெரிவு செய்யப்படாதவர்களே தமிழ் மக்க ளுக்காகக் குரலாவது கொடுத்திருக்கிறார்கள்.
தேர்தல்கள் சபைகளுக்கும் அங்குள்ள கதிரைகட்கும் ஆள் நிரப்ப நடத்தப்படுகின்றதாகவே அன்றி மக்களின் பிரதிநிதிக ளுக்காகவல்ல என்பதுதான் கடந்த அரை நூற்றாண்டுகால 'சுதந்திர இலங்கையின்' பாராளுமன்ற ஜனநாயகம் போதித்த பாடம்!
மக்கள் ஒரே பாடத்தை எவ்வளவு காலம்தான் அலுப்பில்லா மல் படிக்கப் போகிறார்களோ?

## எல்லாத் தமிழினே

## லலித் கொலையும் தமிழர் விவகாரமும்.

• யு.என்.எ.ஃப் தலைவர் லலித் அத்துலத் முதலி கொல்லப்பட்டு விட்டார்.
தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிக் கொண்டிருக்கும் போது அவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.
தமிழ் - குறிப்பாக யாழ்-பத்திரிகைகளில் 'அச்சுலக்கையார்' என அறியப்பட்ட அத்துலத்முதலிஜே.ஆர் அரசில் ஒரு 'அச்சு லக்கையாக' செயற்பட்டவர் என்பதில் ஐயமில்லை.
வடக்கு கிழக்கில் குடிகொண்டிருந்த இராணுவத்தை, ஒரு போரிடும் இராணுவமாக மாற்றிய பெருமை சிங்கள பேரின வாதிகள் மத்தியில் அவருக்கு உண்டு.
வடமராட்சி ஒப்பிரேசன் லிபரேசன் அவரது தலைமையின் கீழ் நடந்தது.
எல்லாப் பேரினவாதக் கட்சிகளின் அரசியல்வாதிகளையும் போலவே அவர் தமிழ் மக்களின் உரிமைக் குரலை வெறும் வாய்ப்புகளுக்கான போராட்டமாக தப்புக் கணக்குப் போட்ட வர்.
அரசியல் லாபங்களுக்காக இனவாத கருத்துக்களை சொல்ல வும் தயங்காதவர்.
அண்மையில் அவர், யூ.என்.பிக்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் வடக்கு கிழக்கு இணைப்புக்கு அளிக்கப்படும் வாக்கு என்றும், வடக்கு கிழக்கு இணைப்பைப் பகிரங்கமாக ஆதரிக் கும் தொண்டமானை இன்னமும் அமைச்சராக இருக்க விட்டு வைத்திருக்கிறது யூ.என்.பி என்றும், புலிகளுக்காக, ராஜீவ் கொலை வழக்கில் பேசத் தயாராக இருந்த மோதிலால் நேரு வுக்கு யூ.என்.பி வேட்பாளர் பட்டியலில் இடம் கொடுத்துள் ளது என்றும் கூறி தனது தமிழின எதிர்ப்பு நிலையை வெளிக் காட்டிக் கொண்டவர்.
அரசை எதிர்க்க, இனவாதத்தை துணைக்கு சேர்த்துக் கொள் ளத் தயாராக இருந்தவர்.
ஆயினும் இந் கொலை கண்டிக்கப்பட வேண்டியது.
இலங்கை அரசு வாயோயாமால் பீற்றும் பாராளுமன்ற ஜனநா யகத்தினைப் பயன்படுத்தி அதிகாரத்துக்கு வர நினைத்த அவர் மீது நடாத்தப்பட்ட இந்தத் தாக்குதல் வெறும் லலித்தின் மீது ஏவப்பட்ட ஒன்றல்ல; இது ஜனநாயகத்தின் மீது ஜனநாயக சக்திகள் அனைவரின் மீதும் தொடுக்கப்பட்ட தாக்குதல்.
இந்த இடத்தில் இவையெல்லாவற்றையும் விட எமது அக்க றைக்குரிய விவகாரம் அப்பையா பாலகிருஷ்ணன் விவகாரம்.
எந்த முக்கியஸ்தர் இறந்தாலும், அவர் இறந்த இடத்தில் ஒரு தமிழ்ப் பெயர் கொண்ட அடையாள அட்டையுடன் ஒரு சட லம் கண்டெடுக்கப்படுவதும், அவற்றை பத்திரிகைகள் குறிப் பாக ஏரிக்கரைப் பத்திரிகைகள் முக்கியத்துவப்படுத்தி பிரசுரிப் பதும் இப்போது சாதாரணமானதாகி விட்டது.
கடற்படைத் தளபதி கிளான்சி பெர்னாண்டோவின் கொலையி லும் காலிமுகத் திடலில் இப்படி ஒரு அடையாள அட்டை சிக்கியது.
பிறகு அதற்கு என்ன நடந்ததோ தெரியவில்லை.
இப்போது அப்பையா பாலகிருஷ்ணன்.
எதிர்க் கட்சிகள் எதிர்த்ததாலோ என்னவோ இப்போது, அடை யாள அட்டை உண்மையில் கொலையாளி எனச் சந்தேகிக்கப் படுபவருடையதல்லவாக இருக்கலாம் என்கிறார் டி.ஐ.ஜி.
தமிழர் என்று வந்துவிட்டால் எப்படி வேண்டுமானாலும் பொறுப்பற்று எழுதிவிடலாம் என்று கருதுகிறது போலும் அர சின் ஐந்து நட்சத்திர,மணிக்கூட்டு ஜனநாயகம்!

## இளவேனிற் காலம் 1991



அன்றைக்கு மாலை
நானும் ரூபனும் கடலுக்குப் போனோம்
அவன் வீடு போகும் குறுக்கு வழியில்தான்
அவனைச் சந்தித்தேன்
யுத்தம் நடந்து கொண்டிருந்த காலம்

வீதியை விட்டு மணலுள் புகுந்தோம்
எருக்கலையருகில் கடலைப் பார்த்தோம்
கனத்த உப்பங்காற்று வீசுகிறது
என்முகமெல்லாம் நெய்ச்சுரப்பான மசமசப்பு
ஊட்டிச் செல்கிறது

நாங்கள் எதைப் பற்றிப் பேசினோம்
பரீட்சை நடக்கவில்லை
ஒரு பருவகாலம் முழுவதுமே
mood குழம்பிக் கொண்டிருக்கிறது
கன நண்பர்கள் இயக்கத்துக்கு போய்விட்டார்கள்
போவதற்கு முன்
இந்தக் கடற்கரையில் இப்போ
நாங்கள் ஸ்பரிசிக்கின்ற சோகத்தை
முகர்ந்து கொண்டுதான் போனார்கள்
பரந்த கடலில் நமது சோகம் ஒரு அலையேனும்
- ஆகாவிட்டாலும்
இப்படிச் சொல்லச் சிரமமாயிருந்தாலும்
யுத்தத்தில் நாங்கள் வெல்லத்தானே வேணும்

மனச்சாட்சி உறுத்துகிறது
அலைமுறியும் கடற்காற்றில் பருத்தமணல்கள்
- கண்களில் விழுகிறது
மம்மல் உரசிக் கொண்டு போகிறது
இருட்டில் தார் றோட்டில்
அலாதுபட்டு சைக்கிளோட்டி வீட்டுக்குப் போனோம்.

நட்சத்திரன் செவ்விந்தியன்

# சூரிய தீபனின் 'சரிநிகர்' மீதான மிரட்டல் எந்தவகையான ஜனநாயகம்?

பத்திரிகைகளும் பத்திரிகையாளர்களும் தாக்கப்படுவது, மிரட்டப்படுவது, பத்திரிகைக் காரியாலயங்கள் நொருக்கப்படுவது போன்ற நடவடிக்கைகள் இலங்கை மக்களுக்கு ஒன்றும் புதியவை அல்ல.

கடந்த அரை நூற்றாண்டுகட்டு மேலாக அவர்கள் அனுபவித்து வருகின்ற மகத்தான ஜனநாயகப் பண்பாட்டின் மூலம் அவர்களுக்கு கிடைத்துள்ள வெகுமதிகள் இவை. 'சோசலிச ஜனநாயகம்' போய் 'ஜனநாயக சோசலிசம்' வந்த பின்னும் அந்த 'ஜனநாயக சோசலிசம்' அறிமுகப்படுத்திய ஐந்து நட்சத்திர ஜனநாயகப் பண்பாட்டில் பத்திரிகைகளும் பத்திரிகையாளர்களும் அனுபவித்து வரும் 'சுகங்களுக்கு' அளவு கணக்கு இல்லை.

வடக்கு கிழக்கிலோ, கடந்த பத்தாண்டு காலமாக நிலவுகின்ற கருத்துச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம் என்பவற்றிற்கான வாய்ப்புக்களால் பத்திரிகை அலுவலகங்கள் நொருக்கப்பட்டன; அல்லது விழுங்கப்பட்டன; அல்லது தடை செய்யப்பட்டன. பத்திரிகையாளர்கள் மிரட்டப்பட்டார்கள்; துப்பாக்கி முனையில்/ அல்லது அதன் பிடியின் முனையில் வென்றெடுக்கப்பட்டார்கள் அல்லது கொல்லப்பட்டார்கள்.

இலங்கை அரசும் சரி, இடையில் பலவந்தமாக தமது ஆட்சியைத் தமிழ் மக்கள் மீது திணித்த இந்தியாவும் சரி, இன்றைய புலி மறவர்களும் சரி அல்லது இவர்களுடன் தோளோடு தோள் நின்று செயற்பட்ட/படும் பிற தமிழ் அரசியற் குழுக்களும் சரி தமிழ்ப் பத்திரிகையாளர்களுக்கு ஒரேயொரு உண்மையைத்தான் உணர்த்தி வந்திருக்கின்றார்கள்.

அதாவது, '' பத்திரிகைச் சுதந்திரம் என்பது எங்களில் யாராவது ஒருவரால் இடப்படும் பிச்சையே அன்றி அது பத்திரிகையாளர்களது சுதந்திரம் அல்ல '' என்பதாகும்.

அதாவது கருத்துச் சுதந்திரம் என்பதை தனது சொந்தக் கருத்தை - மக்கள், தேசம் என்பவற்றின் நலன் தொடர்பான கருத்தை - எந்தத் தனி மனிதனும் சொல்ல, எழுத, அதற்காகச் செயற்பட உள்ள அடிப்படை மனித உரிமையை இவர்களின் அபிப்பிராயத்திற்கு அப்பாற்பட்டு நடைமுறைப்படுத்த முடியாது

இதில் வேடிக்கை என்னவென்றால், எந்த ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டதற்காக தாம் தேசிய விடுதலைப் போராட்டத்தில் குதித்ததாகக் கூறிக் கொண்டார்களோ, அந்த, அதே ஜனநாயக உரிமைகளை அவர்களே தாம் யாருக்காக போராடுவதாக கூறிக் கொண்டார்களோ அந்த மக்களுக்கே மறுத்தார்கள்.

தாம் கருதிய கருத்தை, தமது அபிப்பிராயத்தை தவிர வேறெதுவும் சரியானதல்ல என்று ஒவ்வொருவரும் கூறினார்கள். மாற்றுக் கருத்துக்களைப் பேசுபவர்களை எதிரிகளாக, துரோகிகளாக முத்திரை குத்தினார்கள். தமது கருத்துக்கள் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவை என்றும், அப்படி விமர்சனம் செய்பவர்கள் தண்டனைக்குரிய குற்றவாளிகள் என்றும் கருதினார்கள்.

குற்றத்தை சுமத்துவது, குற்றவாளியா இல்லையா என நீதி வழங்குவது, தண்டனை வழங்குவது சகலதையும் செய்யும் அதிகாரம் தமக்கே இருப்பதாக அவர்கள் கருதினார்கள்.

எந்த அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக எந்த விதத்திலெல்லாம் ஜனநாயகத்தை மறுத்துத் தானே குற்றம் சுமத்துவோனாய், நீதிபதியாய், தண்டனை வழங்குவோனாய் இருக்கிறது. என்பதற்காக அதை எதிர்த்துப் போராடக் கிளம்பினார்களோ, அதே அரசாங்கத்தின் அதே செயல்களை இன்று அதை விடத் தீவிரமாக, தமிழ் மக்களுக்காகத் தாம் போராட்டத்தில் குதித்தோம் என்ற ஒரே காரணத்திற்காக அவர்கள் மீது செய்யத் தகுதி வாய்ந்தவர்களாக இவர்கள் தம்மை நியமித்துக் கொண்டார்கள்.

தாமே குற்றங்களைச் சுமத்தினர்; நீதிபதியாக இருந்து தீர்ப்புக் கூறினர் பின் தண்டனையும் வழங்கினர்.

மக்களின் கருத்துச் சுதந்திரத்தை தாம் இடுகின்ற பிச்சையாகவே இவர்கள் மதித்தனர்; அதை மக்களின் உரிமையாகக் கருதியதே இல்லை. விளைவு.....?

தமிழ்ப் பத்திரிகை உலகம் ஒன்றில் வெறும் ஊதுகுழலாகிப் போனது அல்லது நிறுத்தப்பட்டது. மனச்சாட்சி உள்ள பத்திரிகையாளர்கள் மௌனியானார்கள்; மிரட்டலுக்கு அஞ்சி நாட்டைவிட்டு ஓடினார்கள்; அல்லது கொல்லப்பட்டார்கள்.

இன்று தமிழ்ப் பத்திரிகை உலகத்தை, அதன் மனச்சாட்சியைத் தரிசிக்க வேண்டுமென்றால், கடந்த பதினைந்து ஆண்டுகளாக விடுதலை யுத்தம் நடக்கும் பூமியிலல்ல, அந்நிய நாடுகளில் தான் போய்த் தரிசிக்க வேண்டியிருக்கிறது.

இதைவிட வேறெந்த அவமானமும் ஒரு இனத்திற்கு வேண்டியதில்லை; அதன் விடுதலைப் போராட்டத்துக்கு வேண்டிய தில்லை.

கருத்துக்கள் சரியா பிழையா எமக்கு சாதகமானவையா அல்லவா என்பது முக்கியமல்ல; அவை சமூகப் பொறுப்புணர்வுடன் தெரிவிக்கப்படுகின்றனவா அல்லவா என்பதே முக்கியமானது என்று தமிழ் விடுதலைப் போராட்டத்தின் தலைவர்கள் யாரும் நினைத்ததில்லை. சமூகப் பொறுப்புணர்வற்ற கருத்துக்கள் கூட அம்பலமாகி விடும்; அப்படி அம்பலமாக்கப்படும் போது மக்கள் கல்வியூட்டப்படுவார்கள் என்று அவர்கள் கருதியதில்லை:

கருத்துக்களை கருத்துக்களால் எதிர்கொள்ள அவர்கள் ஒருபோதும் விரும்பியதில்லை.

மக்களைத் துப்பாக்கி முனையில் திரட்டி விடுதலையை சாதித்து விட முடியும் என்று கருதிய தமிழ் மக்களின் விடுதலைக்கான 'ஜனநாயகப்' போராட்டம் கருத்துக்களை மட்டும் எப்படி எதிர்கொள்ள முடியும்?'


எல்லாவற்றிற்கும் இலகுவான வழி காண 'தெருச்சண்டித்தனம்' அதிகாரத்துக்கு வந்தது.

விடுதலை, சுதந்திரம், ஜனநாயகம் என்பவை எல்லாம் அதற்கு கைகட்டி சேவகம் செய்ய வேண்டி வந்துவிட்டது.

ஆனால், எப்படியோ இந்தத் தெருச்சண்டித்தனத்தினால் வெறும் உலைவாயைத்தான் மூட முடிந்தது; ஊர்வாயை மூட முடியவில்லை.

வடக்கு கிழக்கில் பத்திரிகைகள் ஊதுகுழல்களாக பலவந்தமாக வெளிவருமாறு செய்யப்பட்டன; சுதந்திரமான கருத்துக்குப் பச்சை மட்டை அடி முதல் புதைகுழிவரை பரிசளிக்கப்பட்டன.

பத்திரிகையாளர் சண் இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் ஒருவர். புலிகளால் கொல்லப்பட்ட இவரது கருத்துக்களை ஏற்காதவர்கள் கூட இக் கொலையை அங்கீகரிக்க இயலாது. கருத்துச் சுதந்திரம் மறுக்கப்பட்ட இப் பத்திரிகையாளனைக் கொன்றதன் மூலம் புலிகள் எதையும் சாதித்து விடவில்லை. புலிகளைப் பற்றிய சகல விமர்சனங்களும் எவ்வாறோ வெளிவந்து கொண்டுதான் இருக்கின்றன.



தம்மை விமர்சிக்க அனுமதிக்காத கட்சியோ விடுதலை இயக்கமோ ஏன் தனிநபரோ ஒரு போதும் திருந்த முடியாது.

தாம் எப்போதுமே சரியானவர்கள் என்று நினைப்பவர்கள் திருந்த வேண்டியதில்லை; ஆனால் வரலாறு அவர்களைக் கைவிட்டு விடும். அவர்களை விட அவர்களால் கருத்து மறுக்கப்பட்டவர்களின் கதையே வரலாற்றில் முக்கியமாகி விடும்.

தமிழ் மக்களின் போராட்டத்திற்கு தலைமை வகித்த இயக்கங்கள் அனைத்துக்கும் நடந்தது இதுதான். இது தமிழ் பத்திரிகை உலகின் விதி; தமிழ் மக்களின் விதி; அவர்களது ஜனநாயகக் கோரிக்கையின் விதி !

கோசமறுப்பான்

சரிநிகர் பத்திரிகை தொடர்பாகவும் அதில் தொடர் கட்டுரை ஒன்றை எழுதிவரும் எழுத்தாளர் ஒருவர் தொடர்பாகவும் தினகரன் வாரமலரின் ஏப்ரல் 11ம் 18ம் திகதிய இதழ்களில் 'புல்லட் பொக்ஸ்' பகுதியில் வெளிவந்த குறிப்புகளை மேற் கூறியவற்றின் பின்னணியில் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும். லேக்ஹவுஸ் பத்திரிகைகளுக்கோ அவற்றின் கருத்துகட்கோ, நிலைப்பாடுகட்கோ அறிமுகம் தேவையில்லை. 'புல்லட் பொக்ஸ்' தொடர்பத்தியை எழுதும் 'சூரிய தீபன்' என்பாரின் எழுத்துக்களுக்கும் அவ்வாறே.

ஆனால் சூரியதீபனின் இக் குறிப்புகள் இரண்டு தப்பபிப்பிராயங்களின் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ளன என்பதை மட்டும் குறிப்பிடுவது அவசியம். ஒன்று சரிநிகர் பத்திரிகை புலிகளுக்கு அபிமானியாக இருக்கின்றது என்பது. இன்னொன்று, அது 'பிழைத்துப் போகட்டுமென்று விட்டால், அதை பலவீனமாக சரிநிகர் கருதுகின்றது' என்பது.

முதலாவது விடயத்துக்கு பலமுறை சரிநிகர் பதிலளித்துவிட்டது. சரிநிகர் யாருடைய எத்தகைய அரசியல் நிலைப்பாட்டையும் நபர்களுக்காகவோ, கட்சிக்காகவோ ஏற்றுக் கொள்ளவோ எதிர்க்கவோ போவதில்லை. சூரியதீபன் 'சொட்டு நீலக் கட்சி பற்றியோ', 'புலிகள் பற்றியோ', 'கனவுக் கட்சி பற்றியோ' எதை வேண்டுமானாலும் சொல்லிவிட்டுப் போகலாம்; சூரியதீபன் மட்டுமல்ல, யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் சொல்லிவிட்டுப் போகலாம். அவை சரிநிகரின் அக்கறைக்குரிய விடயங்கள் அல்ல. ஆனால் தமிழ் மக்களின் நலன்கள் தொடர்பாக யாராவது ஏதாவது சொன்னால் அவை சரிநிகரின் அக்கறைக்குரிய விடயங்கள்; அவற்றை விமர்சிப்பதும், அவை தொடர்பாகக் கருத்துச் சொல்வதும் அதன் கடமையென அது கருதுகிறது. இது தொடர்பாக புலிகளுக்கு சார்பு என்பதற்காகவோ எதிர் என்பதற்காகவோ ஒரு கருத்தைச் சொல்ல சரிநிகர் ஒருபோதும் தயங்கியதில்லை. இது சரிநிகரை அக்கறையோடு படிப்பவர்களுக்குப் புரியும்.

இரண்டாவது, நான் மேற்சொன்னவர்களைப் போல அவர்கள் இடும் பிச்சையாகவே 'பத்திரிகை ஜனநாயகத்தை' சூரியதீபனும் கருதுவதில் இருந்து எழுதுகிறது. ஒரு பத்திரிகையாளரான சூரியதீபனே மாற்றுக் கருத்துக்களை எழுதுவது பற்றி இப்படிக் கருதுவது வேடிக்கை தான்.

பத்திரிகையாளன் பலம் பலவீனம் பார்த்து அடிப்பவனல்ல. அது யுத்தம் செய்யும் யுத்ததந்திரிகளின் வேலை; எதிரி பலவீனமானபோது தாக்குவதும் பலமான போது பதுங்கிக் கொள்வதும் கெரில்லா வீரர்களின் வேலை. பத்திரிகையாளனின் தர்மம் அதுவல்ல.

அவன், தான் சார்ந்துள்ள மக்களுக்கு எது சரியெனப்படுகிறதோ அதைச் சொல்கிறான்; எது பிழை எனப்படுகிறதோ அதை விமர்சிக்கின்றான். பலமானவர்களை விமர்சிக்காதிருப்பதும், பலவீனர்களை விமர்சிப்பதும் அவனது முறை அல்ல..

தவிரவும், அவன் தனது கருத்து வெளிப்பாட்டு உரிமையை யாரும் போடுகிற பிச்சையாக கருதுவதில்லை. அதை அவன் தனது பிறப்புரிமையாகக் கருதுகிறான். இந்தப் பிறப்புரிமை அவனுக்கு மறுக்கப்ப

→18

# யாழ்ப்பாணம் இன்று 2

**அருணா பரமேஸ்வரன்**

கொஞ்ச நாள் பின்னோக்கிப் போகலாம். 1990 யூனில் சண்டை தொடங்குகின்றது. அதற்கு முன்னர் - 1990 மார்ச் 25 இல் இந்தியாவின் கடைசி இராணுவமும் தமிழ்ப் பிரதேசத்தை விட்டுப் புறப்பட்டு விட்டது. யாழ்ப்பாணம் முழுமையாகப் புலிகளின் கையில்.

யாழ்ப்பாணத்து மக்கள் ஓரளவுக்கு நிம்மதியாக வாழத் தொடங்கினார்கள். நிம்மதி நிலைக்கவில்லை. மாற்று இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப் பட்டவர்கள் புலிகளின் வதை முகாம்களில் அடைக்கப்பட்டார்கள். தமிழ்த் தேசிய இராணுவத்திற்கு ( பிள்ளை பிடிகாரர் என அவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் பெயருண்டு. ) வலிந்து ஈபி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ் ஆல் அனுப்பப்பட்டவர்கள் புலிகளிடம் சரணடையுமாறு அறிவித்தல் விடப்பட்டது. சரணடைந்தவர்களும் வதைமுகாமில் அடைபட்டனர்.

ஆயினும் மக்களில் பெரும்பாலானோர் நிம்மதியான வாழ்வு என்று நம்பினர். '' பிரேமதாசா கண்ணியமானவர்; கருணை உள்ளம் படைத்தவர். அவர் காலத்தில் பிரச்சினைகள் தீரும்; அவர் கரங்களை நாங்கள் பலப்படுத்த வேண்டும். '' என்று யோகரத்தினம் யோகி அவர்கள் கொழும்பு ஹில்டன் ஹொட்டலில் ஜனாதிபதியுடனும், அமைச்சர்களுடனும், இராணுவ அதிகாரிகளுடனும் விருந்துண்ட கோழிக்கறியின் ஏப்பம் விட முன்னர் யாழ்ப்பாணத்தில் ஒரு கூட்டத்தில் பேசினார். சனங்களுக்குச் சந்தோஷமாக இருந்தது.

யாழ்ப்பாணத்தில் புலிகளினால் '' ஈழநாதம் '' எனும் தினசரிப் பத்திரிகை தொடங்கப்பட்டது. அதில் ஆசிரியர் தலையங்கத்தில் அடிக்கடி பிரேமதாசா புகழப்பட்டார். '' இத்தனை காலமும் ஆட்சி செய்த சிங்கள ஆட்சியாளர்களிடையே பிரேமதாசா வித்தியாசமானவர். தமிழர்களின் பிரச்சினைகளைப் புரிந்தவர். கருணை உள்ளம் படைத்தவர். அவர் பிரச்சினைகளைத் தீர்ப்பார். '' சனங்களுக்கு மிகமிகச் சந்தோஷமாக இருந்தது. இனித் தேனாறும் பாலாறும் ஓடும். தடத்தில் ரயில் ஓடும்.

கொழும்பில் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. எதைப் பற்றி? மக்களுக்கு ஒன்றும் தெரியாது. தெரிந்து கொள்ள அக்கறைப்படவுமில்லை. யாழ்ப்பாணத்துத் தினசரிகள் பேச்சுவார்த்தை வெற்றியில் முடிந்தன என அறிக்கைகள் விட்டன. '' பேச்சுவார்த்தை எதைப்பற்றி ? எதில் உடன்பாடு ? எதில் முரண்பாடு ? எதில் வெற்றி ? எதில் தோல்வி ? '' ஒன்றும் தெரியாது. பேச்சுவார்த்தை வெற்றி எனவே பத்திரிகைகள் அலறின. சனங்களுக்கு வலு சந்தோஷமாக இருந்தது.

ஏப்பிரல், மே மாதங்கள் இவ்வாறாகக் கழிந்தன. யாழ்ப்பாணத்துக் கோடை எல்லாரும் அறிந்தது. இவ்வாண்டு மிக நீண்ட கோடை. றோட்டில் தார் உருக தலையை வெயில் தகிக்க, இக் கடுங்கோடையை முழுமையாக அனுபவித்தார்கள். இனியோ பிரச்சினையில்லை. விமானம் வராது; குண்டு வீசாது. இராணுவம் எதிர்ப்படாது; எதிர்ப்படினும் கை குலுக்கி தன் பாட்டில் நகரும். சந்தோஷமே இனி முளை கொள்ளும்; சந்தோஷமே இனிப் பொழுதை நிறைக்கும்.

திருவிழாக்களில் தவிற்காரர் ஒரு படி அதிகம் முழக்கினார்கள். எல்லாமும் எல்லாரும் சந்தோஷமாக தாக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டது. (புலிகளின் கட்டுப்பாட்டை மீறினார்கள் என்பதற்காக) மட்டக்களப்பில் புலிகளினால் பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது.(ஒரு முஸ்லீம் குடிமகன் பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டதனைக் காரணம் காட்டி)

மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும், பலாலியிலும் விமானங்கள் அடிக்கடி பறந்தன. இரா

# பிரேமதாசா கண்ணியமானவர் கருணையுள்ளம் படைத்தவர்.



இருந்தன; இருந்தார்கள்.

பஸ்கள் வேகம் கொண்டு ஓடின. யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும், யாழ்ப்பாணத்துக்கும் மட்டக்களப்புக்கும், யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்கும், யாழ்ப்பாணத்துக்கும் வன்னேரிக்குளத்துக்கும், யாழ்ப்பாணத்துக்கும் உருத்திரபுரத்துக்கும் என வேகம் கொண்டு ஓடின. மினிபஸ்கள் கர்ப்பிணிப் பெண்ணைப் போல அசைய இயலாமல் புகையைக் கக்கி உறுமிக் கொண்டு திரிந்தன. கோயில்களில் ஆறுவேளைப் பூசை நடந்தது. தேவாலயத்தில் ஞாயிற்றுக் கிழமை பிரார்த்தனை அமைதியாக இருந்தது. பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமைத் தொழுகை சுதந்திரமாக நடந்தது.

கோடைக்குப் பனை நிறையக் கள்ளைப் பொழிந்தது. சோளகம் பெயராததனால் கள்ளு கலங்கவில்லை; இனிமையை அளித்தது. தவறணையில் சந்தோஷமாகப் பொழுதை கழிப்பவர்கள் சுருட்டுடன் நிறைந்தார்கள்.

சோளகம் பெயரத் தொடங்கியது. முதலில் மெதுவாகத்தான் வீசியது. யூன் மாதம் முதல் பத்து நாட்கள் ஒரு அசுகை தெரியவில்லை. மழைக்கு முன் வருமே ஒரு புழுக்கம். அப்படி ஒன்றும் தெரியவில்லை. எல்லாம் ஒழுங்காகத் தான் நடந்தேறின. சாதாரண நாட்களைப் போலவே அந்த நாட்களும் கழிந்தன. மற்றைய நாட்களைப் போலவே புலிகள் மிக விரைவாக ஹொண்டாவையும், பஜிரோவையும் ஓட்டினார்கள்.

யூன் பத்தாம் நாள் எங்கேயோ நெருப்புப் பொறி வைக்கப்பட்டது. வவுனியாவிலிருந்து முல்லைத்தீவுக்குச் சென்ற இராணுவ அணிணுவம், ஆயுதங்கள் இறக்கப்பட்டன.

புலிகளுக்கும் சிறீலங்கா அரசுக்குமிடையில் போர் மூண்டு விட்டது. சந்தோஷமாக இருந்த சனங்களின் முகம் கறுத்தது. ஏன் இந்தச் சண்டை ? புலிகள் தானே சொன்னார்கள் பிரேமதாசா பிரச்சினையைத் தீர்ப்பார் என்று. அதற்கிடையில் எதற்காகச் சண்டை ?

காத்திருந்தார்கள்; ஒரு வாரத்தில் ஓயும் எனக் காத்திருந்தார்கள். அமைச்சர் ஏ.சி.எஸ். ஹமீத் வந்தார். இரண்டு நாட்கள் யுத்த நிறுத்தம் எனப்பட்டது. பேச்சுவார்த்தை நடந்தது. மக்கள் இனிச் சண்டை இல்லை என்று நம்பினார்கள்.

ஹமீத்தை அழைத்து வரச் சென்ற புலிகளின் பாதுகாவலர் இராணுவத்தால் சுடப்பட்டார். மீண்டும் சண்டை உக்கிரமடைந்தது.

மக்களுக்குப் புரியவில்லை. புலிகள் கொழும்பில் அரசுடன் என்ன பேசினார்கள்? தெரியாது. இப்போது சண்டை இடுவதற்கு அடிப்படைக்காரணம் என்ன ? தெரியாது. பிரேமதாசா நல்லவர் என்றார்களே; இப்பொழுது அவருடன் ஏன் சண்டையிடுகிறார்கள் ? காரணம் தெரியவில்லை.

மக்கள் குழம்பிப் போனார்கள்.

புலிகளுக்கு இது நீண்ட கால யுத்தம் என்பது தெரிந்திருந்தது. '' இது நீண்ட கால யுத்தம். இதுதான் இறுதியான போர். இந்த யுத்தம் தமிழ் ஈழத்தைத் தரும் '' எனப் புலிகள் அறிக்கை விட்டார்கள். மக்கள் புலிகளை நம்பவில்லை; சண்டை முடியும் என்று நம்பினார்கள்.

யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகள் தடம் மாறின. 'ஈழநாதம்' பிரேமதாசாவை அரக்கன் என்றது.

...வரும்...

# [illegible] வார்த்தை எழுத விடு

## ஒரு அகதியின் பாடல்


வ.ஐ.ச.ஜெயபாலனின் 'உவமைகள் நிறைந்து வழிகிற' ஒரு தொகுப்பு இது எனக் கூற வந்தாலும் உவமை அலுப்பைத் தருகிறது. ஆனால் இத் தொகுப்பு பற்றிய என் பார்வை வேறு. ஒரு அகதியின் பாடல் எனும் தலைப்பினூடாக அனுதாபத்தைக் கிளற வைக்க விரும்புகிறார். ஆனால் அகதி வாழ்வை சொகுசான வாழ்வாக விரும்பி ஏற்றிருக்கிற போது இப் பாடல் எந்த அனுதாபத்தையும் சம்பாதிக்கவில்லை. '' என்னை முதலில் அகதியாக அரவணைத்த தமிழ் நாட்டு மக்களுக்கும் பின்னர் கைகொடுத்த நோர்வேஜிய மக்களுக்கும் '' எனக் கூறுவதனால் 'உல்லாசப் பயணம்' புறப்பட்ட கவிஞராக ஜெயபாலன் தென்படுகின்றார். (இனி அடுத்து எந்த நாடு அகதியாக அரவணைக்கப் போகின்றது?) அதனால் கவிதை வரிகளிலும் உல்லாசப் பயணத்தன்மை தெரிகின்றது. வெண்பனியும் இலைகள் உதிர்வதும், பைன், பேச் மரங்களும் சோங்ஸ்வன் ஏரியும், ஒஸ்லோவும், கார்ல் யோன் தெருவும், என உலகம் சுற்றுகிற தாடி வைத்த வாலிபனாக ஜெயபாலனைக் காண்கிறோம். ஆனால் முக்கியமான விடயம் கவிதையைக் காணவில்லை. தொகுப்பைப் படிப்பவர்களுக்கு இது புரியும். பின்வரும் வரிகளில் மாத்திரம் கொஞ்சம் கவிதை:

'' யாழ்நகரில் என் பையன்
கொழும்பில் என் பெண்டாட்டி.
(அது எப்படிச் சாத்தியம் என்று எனக்குப் புரியவில்லை)
தள்ளாத வயதினில்
தமிழ் நாட்டில் என் அம்மா
சுற்றம் பிராங்க்போட்டில்
ஒரு சகோதரியோ பிரான்ஸ் நாட்டில்.
பாட்டனார் பண்படுத்தி
பழமரங்கள் நாட்டி வைத்த
தோப்பை அழிய விட்டு
தொலை தேசம் வந்தவன் நான்.
என்னுடைய பேரனுக்காய்
எவன் வைப்பான் பழத் தோட்டம்?''

## மறுபடியும்...

1983இல் **மகேஷ்பட்** எனும் முக்கிய நெறியாளரால் உருவாக்கப்பட்டு, **ஸ்மிதாபட்டேல், ஷபனா ஆஸ்மி** ஆகியோர் நடித்திருக்க **'அர்த்'**எனும் இந்திப் படம் வெளிவந்திருக்கிறது. பத்து வருடங்களின் பின் அதே சினிமா **பாலு மகேந்திராவின்** இயக்கத்தில் **'மறுபடியும்'**ஆகியிருக்கிறது. சினிமா இயக்குனர் ஒருவர், மனைவி இருக்கிறபொழுதே நடிகை ஒருத்தியையும் மனைவியாக்கி உள்ளார். இதனை மனைவி அறிகிற போது- கணவனிடமிருந்து விலகுகிறாள். கணவன் திரும்பி (திருந்தி?) வருகிற போதும் அவள் ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழ்ச் சினிமாவில் இச் செய்தி மிக விலிமையானது. **ரேவதி**தன் நடிப்பில் இதனை அழுத்தமாக வெளிப்படுத்துகிறார். தமிழ்ச்சினிமாவில் **மறுபடியும்** குறிப்பிட வேண்டிய சினிமா. ஆனால் இதன் பெருமை பாலுமகேந்திராவிற்கு உரியது அல்ல. **'அர்த்'**சினிமாவின் கதையும், உரையாடலும், சம்பவங்களும் மாத்திரமல்ல; கமெராக் கோணங்கள் கூட அப்படியே இச்சினிமாவிலும் பதியப்பட்டுள்ளது. பாலுமகேந்திரா தமிழ்ப்படுத்தியிருக்கிறார். என்னவோ **'அர்த்'** தந்த முழுத்திருப்தியைக் கூட **'மறுபடியும்'** தரத் தவறிவிடுகிறது. கேள்வி இதுதான்; மறுபடியும் நல்ல சினிமாவா? பதில்: தமிழ்ச்சினிமாச் சூழலில் நல்ல சினிமா. 'அர்த்' எனும் சினிமாவுடன் ஒப்பிடுகிற போது நல்ல சினிமா என்று சொல்ல தயங்கவேண்டியதாகிறது.

# அரை நூற்றாண்டாய் வாக்களித்து கண்ட பயன் என்ன?




திட்டமிட்டபடி மே 17 இல் நடக்கவிருக்கும் மாகாணசபைத் தேர்தல் முன்னெப்போதையும் விட முக்கியத்துவமும், உணர்ச்சி வயப்பாடு மிக்கதுமான ஒன்றாக அமைகின்றது. தேர்தல் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு, தேர்தல் நடப்பதற்கு முன்பாக இரண்டு பெரும் தலைவர்களைப் பலி கொண்ட தேர்தலாகும் இது. திரு. லலித் அத்துலத் முதலி, ஜனாதிபதி பிரேமதாசா ஆகியோர் கொலையுடன் மிகத் தீவிரமாக இரண்டுபட்டிருக்கும் உணர்வலைகள் இத் தேர்தலின் முடிவுகளை தீர்மானிக்கவுள்ளன. திரு. லலித் அத்துலத் முதலி அவர்களின் கொலையின் அனுதாபங்களை வாக்கு வடிவில் திரட்டுவதற்கான வாய்ப்பு டி.யு.என்.எப் இற்கு இருந்ததை விட, யூ.என்.பிக்கு ஜனாதிபதியின் கொலை மூலம் திரட்டும் வாய்ப்பு அதிகளவில் இருந்தது என்ற உண்மையையும் இவ்விடத்தில் குறித்துக் கொள்வது அவசியம். ரூபவாஹினியினதும் வானொலியினதும் முழுமையான பயன்பாடு யூ.என்.பிக்கு வாய்ப்பாக இருந்தது என்பது ஒரு முக்கியமான உண்மையாகும்.

கிரிலப்பனைப் பொதுக் கூட்டத்தில் வைத்து திரு அத்துலத் முதலி அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது, யூ.என்.பியினரின் திட்டமிட்ட செயலாக இருக்கவே கூடிய வாய்ப்பு உண்டு என்று டி.யூ.என்.எப் கருதியது. அவ்வாறே மேதினக் கூட்டத்தில் ஜனாதிபதி கொல்லப்பட்டபோது அது, லலித்தின் கொலைக்கு பதிலாக வழங்கப்பட்ட பதிலடி என்பதே பொதுவான அபிப்பிராயமாக உள்ளது. லலித் அத்துலத் முதலி அவர்களின் இறுதிச் சடங்கின் போது கண்ணீர்ப் புகைக் குண்டுகள் வீசப்பட்டதும், பொலிஸ் தாக்குதல் இடம் பெற்றதும், கொலை செய்யப்பட்ட கிருலப்பனைக் கூட்டத்திற்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படாமையும் இக் கொலைக்கும் அரசுக்கும் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்தை மேலும் உறுதி செய்வதாக இருந்தன.

எப்படியோ இரண்டு பெரும் கொலைகள் இலங்கையின் தலைநகருக்குள்ளேயே மிகச் சாதாரணமாக நடந்து முடிந்து விட்டன. ஆயினும் தேர்தல்கள் நடத்தப்பட்டே ஆகவேண்டும் என்பதில் எதிர்க் கட்சிகள் மிகத் தீவிரமாக உள்ளன. பதில் ஜனாதிபதியாகவும், யூ.என்.பியின் புதிய ஜனாதிபதிக்கான வேட்பாளரும் ஆன டி.பி. விஜேதுங்காவைச் சந்தித்த திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தேர்தல் குறிப்பிட்ட தினத்தில் நடாத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

ஒரு நாட்டில் எத்தனை தடவைகள் தேர்தல்கள் நடாத்தப்படுகின்றன என்பது அந்த நாட்டின் ஜனநாயகத் தன்மைக்கு எடுத்துக்காட்டு என்று சொல்லப்படுகிறது. அண்மையில் டாக்காவில் நடந்த சார்க் மாநாட்டில் பேசுகையில் மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா, இலங்கை ஒரு வாழும் ஜனநாயகத்தைக் கொண்ட நாடு. அது சுதந்திரத்திற்குப் பின் இன்றுவரை பல தேர்தல்களைக் கண்டுள்ளது என்று அறிவித்திருந்தார். ஆனால் இலங்கையின் 'வாழும் ஜனநாயகம்' அவர் இவ்வாறு பேசி ஒருமாத காலத்துள் பண்டாரநாயக்கா, விஜய குமாரணதுங்க, லலித் அத்துலத் முதலி வரிசையில் அவரையும் சேர்த்துக் கொண்டது. இன்று இங்கே வாழும் ஜனநாயகத்தை - இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பு பொதுமக்களுக்கு வழங்கும் வாக்களிக்கும் உரிமையை - இலங்கை அரசு நடைமுறைப்படுத்தாமல் விட்டுவிடுமோ என்று எதிர்க் கட்சிகள் தவிக்கின்றன; அந்த ஜனநாயகத்தை தாம் கொலையுண்டால் கூடப் பரவாயில்லை - காப்பாற்றி விட வேண்டுமென்று தவிக்கின்றன.

உண்மையில் இந்த அரசியல் யாப்பு வழங்கும் ஜனநாயகம் தான் என்ன?

இலங்கையின் மக்களால் தெரிவு செய்யப்படும் ' அரசியல் அமைப்புகட்கு ' மக்களின் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கான உரிமை இலங்கைப் பிரஜைகளில் பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் உண்டென்பது தான் இதன் அடிப்படை. இப்படியான இவ்வமைப்புகட்கான தெரிவுகள், அரசியலமைப்புச் சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள கால எல்லைக்கு மேற்படாதவாறு நடாத்தப்படுவதும், தெரிவின் போது யாருடைய நிர்ப்பந்தமும் இல்லாமல் பிரதிநிதிகளை தெரிவு செய்யும் சுதந்திரம் மக்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்பதும் இந்த 'ஜனநாயக'த்தின் பிற முக்கிய அம்சங்களாகும். இவ்வாறு சுதந்திரமாக தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் ' மக்களுக்காக நடாத்தும் மக்களாட்சியே ' இந்த ஜனநாயகத்தின் மகுடமாகும்.

இதன் மூலம் ஜனநாயகம் செழித்தோங்குவதாகவும், மக்கள் தம்மைத் தாமே ஆளும் 'குடியாட்சி' நிலவுவதாகவும், மக்களே மன்னர்கள் என்றும் பலவிதமாகச் சிறப்பித்துக் கூறப்படும் 'ஜனநாயக பாரம்பரியம்' வாழ்வதற்கான அடிப்படை போடப்படுகிறது.

ஆனால், உண்மை இவ்வளவு மேலோட்டமானதாகவும் எளிமையானதாகவும் இல்லை. அது இப்படி வெளிப்படையாக சொல்லப்படுகின்ற ஒவ்வொன்றிற்கும் நேர் எதிரானதாக சிக்கல் நிறைந்ததாகவே உள்ளது.

மக்களுக்கான பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும் விதம், அதற்கு உபயோகிக்கப்படும் தந்திரங்கள், மக்களின் இந்த ஜனநாயக முறைமை தொடர்பான புரிதல், தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் மீது மக்களுக்குள்ள கட்டுப்பாடு போன்றவற்றால் சிக்கலுக்குள்ளாக்கப்படும் இந்த 'ஜனநாயக முறை' வெறும் போலித்தனமும், வஞ்சகமும் மிக்க ஒன்றென்பதை இப்போதெல்லாம் வெளிப்படையாகவே தெரிவிக்கின்றது.

இந்தப் 'புகழ் பூத்த' ஜனநாயக முறையின் நம்பகமற்ற தன்மைக்கான காரணங்களை சுருக்கி இப்படிக் கூறலாம்.

1. மக்களிற்கான பிரதிநிதிகள் (பூகோள ரீதியில் அமைந்த) தொகுதி வாரியாகத் தெரிவு செய்யப்படுகிறார்கள். பூகோள ரீதியில் பல்வேறு வர்க்கத் தட்டுக்களை சேர்ந்த மக்கள் இருப்பதை இம் முறைமை கணக்கெடுப்பதில்லை. இதனால் அனைவருக்கும் பொதுவான ஒரு பிரதிநிதி என்பது சாத்தியமில்லாத நிலை உள்ளதும் கணக்கெடுக்கப்படுவதில்லை. பெரும்பான்மையான - அல்லது பெரும்பான்மையை விலைக்கு வாங்கவோ ஏமாற்றவோ முடிந்த - பகுதியினரின் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படவே வாய்ப்பு உண்டு. பிரதிநிதிகள் எந்த வர்க்கத் தட்டை சேர்ந்தவர்கள் என்பது அந்தத் தொகுதியின் வர்க்கத் தன்மையால் தீர்மானிக்கப்படுவதற்குப் பதில் எது வசதியான வர்க்கம் என்பதால் தீர்மானிக்கப்படுகிறது.

2. பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவதற்கு நடாத்தப்படும் பிரச்சாரம் நவீன வசதிகள் அனைத்தையும் பயன்படுத்துவதாயும், பெரும் பொருட் செலவு செய்தும் நடாத்தப்படுவதாயும் உள்ளது. நவீன சந்தைப்படுத்தல் (Marketing) உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. மக்களின் நிதானமான தீர்மானிக்கும் சக்தி திட்டமிட்டுப் பறிக்கப்படுகிறது. இவற்றைச் செய்ய, பொருளாதார ரீதியில் வசதி பெற்றவர்களுக்கு மட்டுமே சாத்தியமாகின்றது.

3. மக்கள் இந்த ஜனநாயக முறைமையையும் அதன் முக்கியத்துவத்தையும் முழுமையாக உணர்ந்து கொள்ளும் விதத்தில் பயிற்றுவிக்கப் பட்டிருக்கவில்லை. பொய்யான வாக்குறுதிகளும், வஞ்சகத்தனமான ஏமாற்றுப் பேச்சுகளும் அவர்களை நிலைகுலையச் செய்கின்றன. பிரச்சார கூட்டப் பேச்சுகட்கு கட்டற்ற சுதந்திரமும், மக்களின் பிரச்சினைக்கு முற்றிலும் அப்பாற்பட்டவற்றைப் பேசும் வாய்ப்பும் இருக்கின்றன. தாம் போடும் வாக்கு, தமது நலன்களை அடிப்படையாகக் கொண்டு போடப்பட வேண்டியது என்ற உணர்வுடன் போடுவோர் வீதம் - இலங்கையின் கல்வி வீதம் மிக அதிகமாக இருந்த போதும் - சொற்பமே.

4. பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் மக்களுக்கு, அவர்களது பதவிக்காலத்துள் இப் பிரதிநிதிகளைக் கட்டுப்படுத்தும் எந்த நடைமுறை வாய்ப்புக்களும் இல்லை. இப் பிரதிநிதிகள் தம் மக்களுடைய நலன்களுக்கு மாறாகவோ, விரோதமாகவோ கூட முடிவு எடுக்க முடியும். அவர்களை மக்களால் திருப்பி அழைக்க முடியாது. இப் பிரதிநிதிகள் யாருக்கும் விலைபோகும் வாய்ப்பு உண்டு. கட்சி மாறல்கள் இதற்கு நல்ல உதாரணமாகும்.

5. பிரதிநிதிகள் மக்களுக்கு முன் வைத்த கொள்கைகள் தவிர்ந்த பிற தொடர்பாகவும் முடிவெடுக்க அதிகாரம் உள்ளவர்களாகிறார்கள்.

> எந்தத் தேர்தல்களும் பயனுள்ள முடிவைத் தரமுடியாது என்ற பின்னரே வடக்கு, கிழக்கில் ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகி... ... ஒரு தசாப்தத்தின் பின்னரும் இன்னொரு தடவை வாக்களிக்கத்தான் வேண்டுமா..?

உண்மையில் மக்களுக்கு முன் வைத்த கொள்கைகளை விட வைக்காதவற்றையே இப் பிரதிநிதிகளின் 'ஜனநாயக அரசு' நடைமுறைப்படுத்தி வருகிறது என்பது எமது கடந்த கால அனுபவம். உதாரணமாக 'மக்கள் மயமாக்கல்' என அழகாக அழைக்கப்படும் தனியார் மயமாக்கல் கொள்கை மக்களிடம் முன் வைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட கொள்கை அல்ல. கட்சித் தலைமைகளினால் பல திட்டங்கள் மக்கள் மீது திணிக்கப்படுவதே நடைமுறையில் உள்ளன. சமீபகால விலையேற்றங்கள் எவையும் பாராளுமன்ற பிரதிநிதிகளால் கூடத் தீர்மானிக்கப்படுவதில்லை..

6. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, மக்களின் பிரதிநிதிகள் எத்தகைய திட்டங்களை கொண்டு வந்த போதும் அவற்றை நடைமுறைப்படுத்தவென உள்ளது ஒரு நிரந்தரமான அதிகார அமைப்பு முறைமையே ஆகும். அதன் மீதான மக்களின் கட்டுப்பாடு இப் பிரதிநிதிகளூடாகவே அமைந்துள்ளது. பிரதிநிதிகள் பொருளாதார பலம் மிக்கவர்களுக்கு விலை போகும் வாய்ப்பு நிலவுவதாலும், நிரந்தர அதிகார அமைப்பு முறையும் இவர்களது செல்லப் பிள்ளையாக இயங்க வாய்ப்பிருப்பதாலும் மக்கள் ஆட்சி என்பது வெறும் பேச்சாகவே போய் விடுகிறது. உதாரணமாக தமிழ் மொழி உத்தியோகபூர்வ மொழி ஆக்கப்பட்ட பின்னும், நடைமுறையாவதைக் கண்காணிக்க ஒரு ஆணைக்குழு நியமிக்கப்பட்ட பின்னும் இந்த மாகாண சபைத் தேர்தலிற்கான தேர்தல் இடாப்புக்கள் தமிழில் இல்லாமல் இருந்ததைக் கூறலாம்.

இதை விடவும் முக்கியமான விடயம் என்னவென்றால், இம் முறைமையில் வாக்களிப்பில் மிகக் குறைந்தளவு வீதமான மக்கள் வாக்களித்தாலும்கூட அதிக வாக்குப் பெற்றவர் பிரதிநிதியாக வாய்ப்புண்டு. இதனால் தான் சிலநூறு வாக்குகளைப் பெற்றவர்கள் கூட கடந்த பாராளுமன்றத் தேர்தலில் எம்.பிக்களாக முடிந்தது.

ஆக, இந்த அமைப்பின் ஜனநாயகத் தன்மை எல்லா வகையிலும் போலியானது என்பது வெளிப்படையாகிறது.


உண்மையில் இந்தப் போலியான ஜனநாயகத் தன்மை கொண்ட தேர்தல்களில் கடந்த அரை நூற்றாண்டு காலமாக வாக்களித்து வாக்களித்து எமது மக்கள் கண்ட பயன் என்ன என்பதே இன்று ஒவ்வொருவர் முன்னிலுமுள்ள கேள்வியாகும். ஒருவர் மாறி ஒருவராக வாக்களித்து பிரதிநிதிகள் தமது தலை மீது ஏறிச் சவாரி விட தாமே அதிகாரத்தைக் கொடுத்ததுதான் கண்ட பயன் ! சவுக்கையும் கொடுத்து அடியை

—> 11

# இலங்கையில் அரசியற் படுகொலைகளும் ஜனநாயகத்தின் எதிர்காலமும்



சு. பாலகிருஷ்ணன்
செயலாளர்
(இனங்களுக்கிடையே நீதிக்கும், சமத்துவத்துக்குமான இயக்கம்)



**1993** ஏப்ரல் மாதம் 23ம் திகதிக்கும் மே மாதம் 1ம் திகதிக்கும் இடைப்பட்ட எட்டு நாட்களுக்குள் இலங்கையின் சமகால அரசியலில் மிகவும் பிரபல்யமான தலைவர்கள் கொழும்பில் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்களானது இலங்கையின் அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருப்பதோடு இதுவரை காலமும் நிலவிவரும் ஜனநாயக விரோத, வன்முறை அரசியலின் தன்மைகளை மிகத் தெளிவாகத் துகிலுரித்துக் காட்டியிருக்கின்றது.

## புலிகள் தென்னிலங்கை அரசியலை தீர்மானிக்கிறார்களா?

இத்தகைய ஜனநாயக விரோதப் படுகொலை அரசியல் நிலைமைகள் இலங்கையில் ஏற்படுவதற்கு 1977ம் ஆண்டுக்குப் பின் இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட அரசியலின் வளர்ச்சிப் போக்கே பிரதான காரணம் என்றால் தவறாகாது.

1977ம் ஆண்டுக்குப் பிந்திய அரசியல் நிலைமைகளில் பின்வரும் வளர்ச்சிப் போக்குகள் இத்தகைய வன்முறை அரசியலின் தோற்றத்திற்கு வழியமைத்த பிரதான காரணிகளாகும்.

1. 1978ம் ஆண்டு நடைமுறைப் படுத்தப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற வகையில் தனிமனித சர்வாதிகார ஜனாதிபதியின் கட்டுப்பாடற்ற நடவடிக்கைகளும், எதிரணியினரின் சவால்களை முறியடிப்பதற்காகவும், தனது ஆதிக்கத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் மேற்கொண்ட பல்வேறு ஜனநாயக விரோத நடவடிக்கைகளும்.

2. அரசியல் பிரச்சினையாக மேலெழுந்த இலங்கையின் இனவாத முரண்பாட்டுக்கு ஜனநாயக ரீதியான தீர்வைக் காணுவதற்குப் பதிலாக, அவசரகால விதிமுறைகள், பயங்கரவாத தடைச் சட்டம் போன்ற அடக்குமுறைச் சட்டங்களை அமுல் செய்து இப் பிரச்சினையைத் தீர்க்கும் பொறுப்பை முற்றாக இராணுவத்தினரிடம் ஒப்படைத்தன் மூலம் இலங்கையில் யுத்த நிலைமைகள் ஏற்பட வழிவகைகளை செய்தமையும் இதனால் ஜனநாயக சக்திகள் செயலிழந்து தீவிரமான இராணுவ அமைப்புகள் தமிழ் மக்கள் மத்தியில் தோன்றுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தியமை.

3. வடக்கு கிழக்கு யுத்த நிலைமைகளை தனது ஆட்சியதிகாரத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்காகப் பயன்படுத்தி, இலங்கையின் இராணுவ நிறுவனங்கள் உட்பட எல்லாத் துறைகளையும் பேரினவாதப் படுத்தியதோடு, வட-கிழக்கில் ஏற்படுத்தப்பட்ட யுத்த நிலைமைகளை சமாளிப்பதற்காக அமுல் செய்யப்பட்ட அடக்குமுறை நடவடிக்கைகளை தென்னிலங்கையில் அரசுக்கு எதிராக ஏற்பட்ட ஜனநாயக ரீதியான எதிர்ப்புகளை அடக்கப் பயன்படுத்தியதன் மூலம் தென்னிலங்கையில் இராணுவ அமைப்புகளும், வன்முறைச் சம்பவங்களும் ஏற்பட வழிவகுத்தமை.

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனாவின் இனவாத, சர்வாதிகாரத் தன்மையைக் கொண்ட இந்த அரசியல் வளர்ச்சிப் போக்கின் பிரதான பங்காளிகளில் இருவராக செயற்பட்டவர்களே லலித் அத்துலத் முதலியும், ஜனாதிபதி பிரேமதாசாவும் ஆவர்.

மிகவும் புத்திசாதுரியமான அரசியல்வாதி எனப் பெரும்பான்மையோரால் மதிக்கப்பட்ட லலித் அத்துலத் முதலி அவர்கள் ஜனாதிபதி பிரேமதாசவின் எதேச்சாதிகாரத் தன்மை கொண்ட தலைமையின் காரணமாகத் தனக்கேற்பட்ட பாதிப்புகளின் மூலம் இவ் வளர்ச்சிப் போக்கின் ஜனநாயக விரோத அபாயங்களை உணர்ந்ததன் காரணமாகவோ என்னவோ, ஜனநாயகத்திற்கான தனது போராட்டத்தை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் மூலம் ஆரம்பித்தார். இலங்கையின் ஏனைய அரசியல்வாதிகளை விட ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு சவாலாக விளங்கிய இவர் எதிர்காலத்தில் இலங்கையின் ஆட்சித் தலைவராக வருவதற்கான வாய்ப்பைக் கொண்டிருந்தவர். ஆனால் 1993ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23ம் நாள் இவர் கொழும்பில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் பேசிக் கொண்டிருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டார்.

1989ம் ஆண்டு ஜனவரி மாதம் ஜே.ஆர். ஜெயவர்தனவிடமிருந்து ஜனாதிபதிப் பதவியைப் பெற்றுக் கொண்ட ஆர். பிரேமதாசா தென்னிலங்கையில் தனக்குப் பெரும் சவாலாக விளங்கிய மக்கள் விடுதலை முன்னணியினரின் வன்முறைகளை இராணுவ ரீதியாக முறியடித்து தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டவர். பல்வேறு ஜனரஞ்சகமான வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி சாதாரண மக்கள் மத்தியில் பிரபல்யமான ஒருவராகப் பிரகாசித்தாலும், ஜே.ஆர். ஜயவர்தனாவை விட '' நான்தான் அரசாங்கம், அரசாங்கம் நான் தான் '' என்பதற்கு ஒப்பாக ஆட்சியதிகாரங்கள் அனைத்தையும் தன்வசப்படுத்திக் கொண்டு தனிமனித எதேச்சாதிகாரியாக நடந்து கொண்டார். இவர் 1993ம் ஆண்டு மே 1ம் திகதி கொழும்பு நகரில் மேதின ஊர்வலத்துடன் சென்று கொண்டிருக்கையில் குண்டு வெடிப்பிற்குப் பலியானார்.

இவர்களது கொலைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளே காரணமென அரசும் அதனது உளவுப் பிரிவினரும் கூறுகின்றனர். ஆனால் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆதாரங்கள் எவற்றையும் இன்னும் முன்வைக்கவில்லை. புலிகள் இயக்கம் அவற்றை நிராகரித்திருக்கின்றனர். இக் கொலைகள் தொடர்பாக மக்கள் மத்தியில் பல்வேறு ஊகங்கள் நிலவுவதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் இவ்விதமான படுகொலைகளை செய்வதில் கைதேர்ந்தவர்கள் என்பதில் சந்தேகமில்லை. எனினும், கொலையாளி யார் என்பதை உறுதியாகக் கண்டறியுமுன்பு இவ்வகையான வேண்டத்தகாத செயல்கள் நடைபெற்றால் அவற்றைத் தமிழர்கள் தான் செய்தார்கள் என்று தமிழர்கள் மேல் பழியை சுமத்தி திருப்திப்படுகின்ற பேரினவாதப் போக்கானது இலங்கை அரசுக்கு ஒன்றும் புதியதல்ல.

விடுதலைப் புலிகள் தான் இக்கொலைகளை செய்துள்ளார்கள் என்று எடுத்துக் கொண்டால் விடுதலைப் புலிகள் அமைப்பானது இந்நாட்டின் அரசியலை நிர்ணயிக்கக் கூடியளவிற்கு சக்தி வாய்ந்த அமைப்பு என்பதை யதார்த்த ரீதியாக ஏற்றுக்கொள்ளல் வேண்டும். தென்னிலங்கையின் அரசியல் தன்மையை மட்டுமல்ல யாரை ஆளவிட வேண்டும் என்பவற்றைக் கூட நிர்ணயித்து செயற்படக் கூடியளவிற்கு சக்திவாய்ந்த ஒரு அமைப்பாகவும், எவ்விதப் பேரழிவுகளையும் ஏற்படுத்தக் கூடியவர்களாகவும் அவர்கள் செயற்படும் தகுதியைப் பெற்றிருக்கின்றார்கள் என்பதை இந் நாட்டின் ஜனாதிபதியும், முப்படைகளின் பிரதம தளபதியுமான பிரேமதாசா அவர்களைக் கொலை செய்ததன் மூலம் நிரூபித்துள்ளார்கள் என்பதையும் ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

அப்படியானால் புலிகளுக்கு எதிராகப் பலகோடி ரூபாய்களையும், ஆயிரக் கணக்கான உயிர்களையும் இழந்து மேற்கொள்ளப்படும் இந்த இனவாத யுத்தத்தின் விளைவுகள் என்ன என்ற கேள்வி எழுகின்றது.

ஜே.ஆர்.ஜெயவர்தனவின் தலைமையிலான அரசானது 1979ம் ஆண்டு பயங்கரவாத தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி தமிழர்களுக்கெதிரான இனவாத யுத்தத்தை அரச அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத்த ஆரம்பித்ததிலிருந்து இன்று வரையான நிலைமைகளை அவதானத்தில் கொள்ளும் போது தமிழீழ விடுதலைப் புலிகள் இந்தளவு சக்திவாய்ந்த இராணுவ அமைப்பாக வளர்வதற்கு பின்வரும் இரு காரணிகள் மிகவும் பிரதானமானவைகளாகும்.

1. தமிழ் மக்களின் ஜனநாயக எதிர்பார்ப்புகளான சமத்துவத்துக்கும், சுயாட்சிக்குமான தமது உரிமைகளை அங்கீகரிக்கின்ற ஜனநாயகத் தீர்வை முன்வைக்கத் தவறியதனால் ஜனநாயக முறைகளின் மூலம் தமது பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்ட விரக்தி நிலை.

2. பேரினவாத சக்திகளின் எதிர்பார்ப்புகளான சிங்கள, பௌத்த ஆதிக்கத்தை இலங்கையின் அரசியல் அமைப்பில் பாதுகாப்பதையும், அதற்கெதிரான சவால்களை இராணுவ ரீதியில் முறியடிப்பதையும் நோக்கமாகக் கொண்டு மேற்

## படுகொலைகளும் இனப்பிரச்சினையும்.

கொள்ளப்பட்ட யுத்த நடவடிக்கைகளும் அதன் விளைவாக ஏற்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் படுகொலைகளும், பொருளாதார சீரழிவுகளும் ஒரு புறமாகவும் மறுபுறத்தில் தீர்வைக் காண வேண்டிய பொறுப்பு ஆயுதமேந்தியவர்களுக்குப் பாரப்படுத்தப்பட்டதனால் தமிழ் மக்கள் மத்தியிலும், ஏனைய பகுதிகளிலும் செயற்பட்ட ஜனநாயக சக்திகள் செயலிழக்க வேண்டிய நிலைமையும்.

இந்த நிலைமைகளினூடாக நாம் பார்க்கும் போது தமிழ் மக்களின் முரண்பாடுகளுக்கு ஜனநாயகத் தீர்வை முன் வைக்காமல் மேற்கொள்ளும் எந்த வித இராணுவ நடவடிக்கைகளும் எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதற்கு விடுதலைப் புலிகளின் வளர்ச்சிப் போக்கு மிகவும் சிறந்த உதாரணமாகும்.

இன்னொரு விதத்தில் இவர்கள் படுகொலை செய்யப்பட்டது தென்னிலங்கையில் நிலவும் அரசியல் நெருக்கடிகளின் காரணமாக என்று கொள்வோமானால், இத்தகைய ஜனநாயக விரோத அரசியலின் வளர்ச்சிப் போக்கு ஏற்பட காரணிகளாக அமைந்த பின்வரும் நிலைமைகளை அவதானத்தில் கொள்ளல் வேண்டும்.

1. அதிகாரத்திற்கான வேட்கையும், எவ்வகையிலேனும் அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் ஜனநாயக விரோத வழிகளில் அரசு செயற்பட்டமையும்.

2. மாற்றுக் கருத்துகளுக்கு மதிப்பளித்து அவற்றை சகித்துக் கொள்ளும் பண்பின்மை.

3. அதிகாரத் துஷ்பிரயோகத்துக்கும், அநீதிகளுக்கும் எதிராக மக்கள் நீதிமன்றங்களின் மூலம் நடவடிக்கை எடுப்பதை சட்டரீதியாகத் தடைசெய்தமை.

4. கட்டுப்பாடற்ற அதிகாரங் கொண்ட ஜனாதிபதி முறையின் மூலம் நிறைவேற்று அதிகாரங்கள் எதேச்சாதிகாரமான வகையில் பயன்படுத்தப்பட்டமை.

5. நீதிமன்ற சுதந்திரத்தை மீறியமை.

6. அரசாங்கக் கட்சியின் நலன்கருதி தவறிழைத்த அதிகாரிகளைப் பாதுகாத்து ஊக்குவித்தமை.

7. தேர்தல் ஊழல்களையும், மோசடிகளையும் ஊக்குவித்தன் மூலம் மக்களின் ஒருமித்த உண்மையான எதிர்பார்ப்புகளை சுதந்திரமாகப் பிரதிபலிக்கும் நியாயமான தேர்தல் நடைமுறைகளை சீர்குலைத்தன் மூலம் ஜனநாயகத் தேர்தல்களில் மக்களுக்கிருந்த நம்பிக்கைகளை இழக்கச் செய்வதற்கு ஏதுவாகச் செயற்பட்டமை.

8. மக்கள், நாட்டின் நடைமுறை உண்மைகளைத் தெரிந்து கொள்ளாதிருக்கும் வகையில் எதிரணியினரின் அபிப்பிராயங்கள், கருத்துகளுக்கு இடம் கொடுக்காமல் அரச கட்டுப்பாட்டிலுள்ள வெகுஜனத் தொடர்புச் சாதனங்களை தவறான வகையில் அரசினதும், அரச கட்சியினதும் பிரசார சாதனமாகப் பாவித்தமை.

9. எதிரிகளை இல்லாதொழிப்பதற்காக திரைமறைவில் கொலைப் பட்டாளங்களைப் பாவித்து செயற்பட்டமை.

இவ் வகையில் பல்வேறு விதமான ஜனநாயக விரோத செயல்கள் தொடர்ந்ததனால் ஜனநாயக ரீதியில் எதிர்ப்புகளைத் தெரிவித்து வெற்றி கொள்வதில் நம்பிக்கை இழந்த எதிரணி அரசியல் அமைப்புகளில் சில வன்முறை ரீதியில் செயற்பட ஆரம்பித்தன.

இவ்விதம் அரசு பலாத்கார வழிகளில் செயற்படுவதற்கு அரசினால் தொடரப்பட்ட வட-கிழக்கு யுத்தமும், அதனைப் பிரச்சாரப்படுத்துவதன் மூலம் தென்னிலங்கையில் உருவாக்கிக் கொண்ட பலமுமே காரணிகளாகும்.

→13

## தேசிய விடுதலைப் போராட்டம் ஓர் மீளாய்வை நோக்கி.... 15

## மனிதன் இயக்கம்

தமிழர்கள் தன்னாட்சி பெற வேண்டுமாயின் அரசியல் சுதந்திரம்,பொருளாதாரச் சமத்துவம், சமூக சகோதரத்துவம் என்கின்ற உன்னத நிலையை அடைய வேண்டும். அதற்கான தயாரிப்பு வேலைகள் இப்போதே ஆரம்பிக்க வேண்டும். '' இப்படிக் கூறியவர்கள் முன்னைய தமிழ் ஈழ விடுதலை இயக்கம் சிதைந்த பின்னர் அதன் கருத்துக்களை மேலும் வளர்த்துச் செல்லும் வகையில் தோற்றம் பெற்ற மனிதன் இயக்கத்தைச் சேர்ந்தவர்களாவர்.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு இடதுசாரிச் சிந்தனைப் போக்கை உருவாக்கி வைத்தது. துரதிர்ஷ்டவசமாகக் குறுகிய காலத்திலேயே அவ்வமைப்பு சிதைந்து போனதின் பின்னர் இடதுசாரிச் சிந்தனையின் அடிப்படையிலான ஒரு கருத்துப் போக்கை மனிதன் இயக்கமே வளர்த்துச் சென்றது.

இவ் வியக்கம் 1977 இல் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தில் முன்னணி உறுப்பினர்களாகப் பணி புரிந்த ஜெகநாதன், பாலநடராஜா ஐயர் என்பவர்களினாலும், முற்போக்குச் சிந்தனை படைத்த கத்தோலிக்க மதகுருவான அருட்திரு ஜெயசீலன் அடிகளினாலும் தோற்றுவிக்கப்பட்டது. தமது கருத்துக்களை மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்யும் வகையில் ''மனிதன்'' எனும் மாதாந்தப் பத்திரிகையையும் நடாத்தினர். தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் '' எரிமலை '' பத்திரிகையின் பின்னர் தமிழ் மக்கள் மத்தியில் வித்தியாசமான சிந்தனைப் போக்கை வளர்த்த பத்திரிகையாக இதுவே காணப்பட்டது. எரிமலை தொடக்கி வைத்த 'இலங்கை, சிறீலங்கா, தமிழ் ஈழம் என்ற இரு தேசங்களைக் கொண்டது' என்ற கருத்தை மேலும் வளர்த்துச் செல்வதில் மனிதன் கூடிய அக்கறை காட்டியது. தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம், அவர்கள் தனியாகப் பிரிந்து சென்று தனியரசமைக்கக் கூடிய உரிமையும் பலமும் அவர்களுக்கு உண்டு என்பதை ஆதாரங்களுடன் நிறுவியதும் இவ்வமைப்பே ஆகும். இது தொடர்பாக பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளின் கருத்துகளுக்கு தர்க்க ரீதியாகப் பதிலடி கொடுத்து மனிதன் இதழில் சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் சண்முகதாசனின் கட்டுரைக்கு பதிலாக் மகேஸ்வரராஜா எழுதிய கட்டுரை முக்கியமானதாக விளங்கியது.

மனிதன் இதழ்களில் நான்கு இதழ்கள் வெளிவந்ததன் பின்னர் பல்கலைக் கழக மாணவர்கள் பலரும் இவ் வியக்கத்துடன் சேர்ந்து கொண்டனர். அதனால் அவர்களையும் இணைத்து மனிதன் இயக்கத்துக்கு என ஒரு மத்திய குழு உருவாக்கப்பட்டது. இக் குழுவில் மகேஸ்வரராஜா, ஜெகநாதன், விமலதாசன், ஜெயராஜா, மாலினி, சாந்தினி என்போர் அங்கம் வகித்தனர். பால நடராஜா ஐயர் ஈரோஸ் இயக்கத்தில் சேர்ந்து கொண்டதால் இதிலிருந்து விலகிக் கொண்டார். விமலதாசன் மனிதன் பத்திரிகையின் பிரதான ஆசிரியராகவும், மனிதன் இயக்கத்தின் முக்கிய அமைப்பாளராகவும் பொறுப்பேற்றுக் கொண்டார். அருட்திரு ஜெயசீலன் அடிகள் தமது மதம் சார்ந்த பணிகள் காரணமாக ஒரு ஆலோசகராக மட்டும் இருந்து கொண்டார்.

பல்கலைக் கழக மாணவர்களையும் சேர்த்துக் கொண்ட பின்னர் மனிதன் இயக்கம் தான் முன்வைத்த கருத்துக்கள் தொடர்பாக ஆய்வுப் பணிகளையும் மேற்கொண்டு ஆய்வு ரீதியாக கருத்துக்களை முன் வைத்தது. இந்த வகையில் தமிழ் ஈழத்தின் பொருளாதாரம் தொடர்பாக இவ்வமைப்பு முன்வைத்த ஆய்வும், பல்கலைக்கழக தமிழ் விழாவில் நடாத்திய பொருட் காட்சியும் முக்கியமானதாகும். இப் பொருளாதார ஆய்வின் மூலம் தமிழ் ஈழம் பொருளாதார ரீதியாக தனித்து நிற்க முடியும் என்பதை ஆதாரபூர்வமாக எடுத்துக் காட்டினார்கள். இப் பொருளாதார ஆய்வினை நிலவளம், கடல் வளம், பனை வளம், கைத்தொழில் வளம், மனிதவளம், எனப் பாகுபடுத்தி புள்ளிவிபர ரீதியாகவும், வரைபடங்கள் மூலமாகவும் எடுத்துக் காட்டி இவ் வரைபடங்களின் மூலம் உருவாக்கப்படக் கூடிய தொழிற்சாலைகளையும், அதன் உற்பத்தி ஆற்றல்களையும் எடுத்துக்கூறினார்கள். இது தொடர்பான பொருட்காட்சி பின்னர் மனிதன் இயக்கத்தில் சேர்ந்து கொண்ட ஜோதிலிங்கத்தினால் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் லயன் கழகப் பொருட்காட்சியிலும் காட்டப்பட்டது.

தமிழ்ப் பிரதேசத்தின் நிலவளம் பற்றிக் கூறும் போது அங்கு உற்பத்தியாகும் நெல், உப உணவுப் பொருட்களின் அளவைக் குறிப்பிட்டு அவற்றில் தமிழ் மக்களின் நுகர்ச்சியின் அளவையும் குறித்து ஏனையவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்பதைப் புள்ளி விபரரீதியாக எடுத்துக் காட்டினார்கள். இதேபோல் கடல் வளத்திலும், தமிழ் மக்களின் நுகர்ச்சி போக ஏராளமான அளவில் ஏற்றுமதி செய்யலாம் என்பதை விளக்கினர்கள். கடல்வளத்தின் இன்னோர் பகுதியாக கப்பல் போக்குவரத்து, துறைமுகம் என்பன பற்றிக் கூறும் போது சேதுகால்வாய் ஆழமாக்கும் திட்டத்தின் மூலம் காங்கேசன்துறை துறைமுகத்தை சர்வதேச ரீதியான துறைமுகத்தின் தரத்துக்கு உயர்த்தலாம் என்பதை விளக்கினார்கள். இவ் ஆழமாக்கல் திட்டத்தின் மூலம் தூர கிழக்கு நாடுகளிலிருந்து வரும் கப்பல்கள் இலங்கையைச் சுற்றிச் சென்னைக்குப் போவதற்குப் பதிலாக காங்கேசன்துறையினூடாக ஆயிரக்கணக்கான மைல்களை மீதப்படுத்தி சென்னைக்குச் செல்ல முடியும். இது இந்திய அரசுக்கு ஏற்றதாக உள்ளதால் இந்திய அரசும் இத்திட்டத்துக்கு உதவியளிக்க முன்வரும். ஏற்கனவே இத்திட்டத்திற்கான செலவில் பெரும்பகுதியினை இந்திய அரசாங்கம் பொறுப்பேற்று வேலைகளை ஆரம்பிக்க முன் வந்த போதும் இலங்கை அரசின் ஒத்துழைப்பு இன்மையால் அதனை நிறைவேற்ற முடியவில்லை. இத்திட்டம் வெற்றி பெறுமானால் கொழும்புத் துறைமுகத்தின் முக்கியத்துவம் குறைந்து விடும் எனக் கருதி இலங்கை அரசு இதில் போதியளவு அக்கறை காட்டவில்லை. இதைவிட திருமலை துறைமுகத்தை பாதுகாப்புத் தேவைக்குப் பயன்படுத்தலாம் என்றும் திருகோணமலை கடலில் எழும் பேரலையை வைத்து மின் சக்தித் திட்டத்தை உருவாக்கலாம் என்றும் எடுத்துக் காட்டப்பட்டது.

கைத்தொழில் வளம் பற்றிக் கூறும் போது ஏற்கனவே இருக்கின்ற பாரிய கைத்தொழிற்சாலைகளான இல்மனைற் தொழிற்சாலை (திருகோணமலை ) காகிதத் தொழிற்சாலை ( வாழைச்சேனை ) இரசாயனத் தொழிற்சாலை ( பரந்தன் ) சீமெந்துத் தொழிற்சாலை ( காங்கேசன்துறை ) என்பவற்றை மேலும் விரிவுபடுத்துவதோடு பருத்தித்துறையில் கண்ணாடித் தொழிற்சாலை ஒன்றையும் உருவாக்கலாம் என்றும் கூறினார்கள். இதைவிட மீன் பதனிடும் தொழிற்சாலைகளையும், பழம் அடைக்கும் தொழிற்சாலைகளையும் கூட உருவாக்கலாம் எனக் கூறினார்கள்.

இவ்வாறு பொருளாதார விளக்கங்களை மேலோட்டமாகக் கூறாமல் புள்ளிவிபர ஆதாரங்களோடும் விஞ்ஞான ஆதாரங்களோடும் கூறியமையே முக்கியமானதாக விளங்கியது. இந்த வகையில் பல்கலைக்கழகத்தின் கலை, விஞ்ஞான, வர்த்தக பீட மாணவர்களை ஒழுங்காக பயன்படுத்தியிருந்தார்கள் என்றே கூற வேண்டும். தமிழ்ப் பிரதேசத்தின் பொருளாதார வளங்கள் பற்றி இவர்களுக்கு முன்னர் பலர் கூறியிருந்த போதும், இவர்கள் ஆய்வு ரீதியாக அதனை முன் வைத்த போது மக்களால் அதனை ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவும், நம்பிக்கை வைக்கக் கூடியதாகவும் இருந்தது. தமிழ்ப் பிரதேசத்தின் பொருளாதாரம் 'மணிஓடர்' பொருளாதாரம் எனக் கிண்டலடித்த பாரம்பரிய இடதுசாரிகளுக்கும் இவ் ஆய்வு ஒரு பலத்த அடியைக் கொடுத்தது.

இவ் ஆய்வுகளுக்குப் புறம்பாக தேசிய.பொருளாதாரத்தை வளர்க்கும் வகையில் இவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளும் முக்கியமானதாக இருந்தது. அவற்றில் முக்கியமானது, தமிழ்ப் பிரதேசத்தில் அதன் தேவைக்கேற்ற வகையில் உற்பத்தியாகும் பொருட்கள் சிறீலங்காவிலிருந்து வந்தால் அவற்றைப் பகிஷ்கரிக்கும் முயற்சியாகும். இதன் முதன் முயற்சியாக கொழும்பிலிருந்து வரும் யானை மார்க் குளிர்பானங்கள் இவர்களால் பகிஷ்கரிக்கப்பட்டன. இது தொடர்பாக மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்ததோடு தமிழ்ப் பிரதேசத்திலிருந்து உற்பத்தியாகும் பானங்களை பருகும்படி மக்கள் கேட்கப்பட்டார்கள். இம் முயற்சி பெரிதளவு வெற்றியளிக்காவிட்டாலும் கூட 'தேசியப் பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும் என்ற உணர்வை மக்களிடம் ஏற்படுத்துவதாக இருந்தது. இவற்றினை விட போர்க்காலச் சூழ்நிலை ஏற்பட்டால் அதனை சமாளிக்கும் வகையில் மிருக வளர்ப்பு, பண்ணை விவசாயம் என்பன தொடர்பாகவும் ஆய்வு ரீதியான ஆலோசனைகள் மக்களுக்குக் கூறப்பட்டன.

அரசியல் ரீதியான வேலைகளை முன்னெடுக்கையில் பத்திரிகை வேலைகளுக்குப் புறம்பாக தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினால் தொடங்கப் பெற்ற வகுப்புப் பிரச்சார வடிவத்தையும் தொடர்ந்தனர். தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக வகுப்புக்களை நடாத்தியதோடு வகுப்புக்கான குறிப்புக்களை ரோணியோ செய்தும் வினியோகித்தனர். தேசிய விடுதலைக்குத் தடையாக இருந்த கூட்டணியையும் பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளையும் தேசிய விடுதலைத் தளத்தில் நின்று கொண்டு விமர்சித்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணி 1977ஆம் ஆண்டுத் தேர்தலை தமிழ் ஈழத்துக்கான சர்வஜன வாக்கெடுப்பு எனக் கூறிப் பிரச்சாரம் செய்த போது மனிதன் இயக்கம் '' நெருப்பணைக்க வாக்கெடுப்பு '' எனக் கூறி கிண்டலடித்து அதனை நிராகரித்தது. இந்த வகையில் தேர்தல்களுக்கு எதிரான பிரச்சாரத்தை ஆரம்பித்து வைத்த தமிழ் ஈழ விடுதலை இயக்கம் கூட அதனை கைவிட்டு தேர்தல் பிரச்சார வேலைகளில் ஈடுபட்ட போது மனிதன் இயக்கம் தேர்தலுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தமை முற்போக்கானதாக இருந்தது.

பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகள் தொடர்பாக தமிழ் ஈழ விடுதலை இயக்கம் இடதுசாரி அரசியலை படித்துத் தெரிந்து கொள்ள முற்பட்டதே தவிர விமர்சனம் செய்து அச் சிந்தனையின் அடிப்படையில் புதிய அரசியல் வழியினை முன் வைக்க முனையவில்லை. விமர்சிக்கும் அளவுக்கோ, புதிய சிந்தனையினையை முன்வைக்கும் அளவுக்கோ அவர்கள் இடதுசாரி அரசியலைத் தெரிந்திருக்கவும் இல்லை, வளர்ந்திருக்கவும் இல்லை. ஆனால் மனிதன் இயக்கத்தவர்கள் பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகளை இடதுசாரிச் சிந்தனைத் தளத்தில் நின்று விமர்சித்ததோடு இடதுசாரிச் சிந்தனையின் அடிப்படையில் புதிய அரசியல் வழியையும் முன் வைத்தார்கள். இவர்களின் இச்செயற்பாடு தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் இடதுசாரிச் சிந்தனையின் ஒரு படிக்கல் என்றே கூற வேண்டும்.

இச்சிந்தனையின் வளர்ச்சிப் போக்கே ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈரோஸ், போன்ற இடதுசாரிச் சிந்தனையின் அடிப்படையிலான தமிழ் இயக்கங்களின் தோற்றத்திற்கு வழி வகுத்ததோடு இடதுசாரிக் கட்சிகளிலிருந்தே என்.எல்.எப்.டி.,பி.எல்.எப்.டி., பாதுகாப்பு பேரவை போன்ற இயக்கங்கள் தோன்றுவதற்கும் வழிவகுத்தது.

> “1977ஆம் ஆண்டுத் தேர்தலை தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழத்திற்கான 'சர்வஜன வாக்கெடுப்பு' எனக் கூறிப் பிரச்சாரம் செய்த போது மனிதன் இயக்கம் 'நெருப்பணைக்க' வாக்கெடுப்பு என அதனை நிராகரித்தது.”

> தமிழர்கள் தன்னாட்சி பெற வேண்டுமாயின் அரசியல் சுதந்திரத்துடன் பொருளாதார சுதந்திரமும் அவசியமாகும்.

# ஹெசல்வத்தையிலிருந்
# சுதந்திர சதுக்கம் வரை

## ஒரு மலினத்துவவாதியி

அவர் கொல்லப்படுவதற்குச் சற்று முன்பாக ஆமர்வீதி நடைபாதையில் சாரமும் சேட்டுமாக நின்றபடி ஊர்வலத்தை நெறிப்படுத்திக் கொண்டிருந்தது ரூபவாஹினி அவரது கொலையை அடுத்து அறிவிக்கப்பட்ட ஆறுநாள் துக்க தினத்தின் போது அடிக்கடி காட்டப்பட்டது.

இது மட்டுமல்ல, இது மாதிரியாக ரூபவாஹினியில் காட்டப்பட்ட பல நிகழ்ச்சிகள் அவரது ஜனாதிபதிக் காலத்தில் அனேகம். கட்டிட வேலைகள் நடைபெறும் இடங்களில் கட்டிட வேலைகளை எப்படிச் செய்வது என்பது பற்றியோ, கம்உதாவ நிகழ்ச்சிகளில் பாதைகளை எப்படி அமைக்க வேண்டும் என்பது பற்றியோ மணிக்கூட்டு கோபுரத்தின் திறப்பு விழா ஏற்பாடுகள், கூட்டமேடைகள் எப்படி, எப்படி செய்யப்பட வேண்டும் என்றோ அவர் பணிப்புரைகள் வழங்குவது பற்றிய காட்சிகள் நிறையவே தொலைக் காட்சியில் காட்டப்பட்டுள்ளன.

ஜனாதிபதி பிரேமதாசாவின் 'தலையீட்டு' வாழ்வுமுறைக்கான (interventionist life style)சில மிகச் சாதாரண உதாரணங்கள் இவை. அவரது நடத்தையின் மிக முக்கியமான அம்சமான இப்பண்பானது பலராலும் சிலாகித்துப் பேசப்படுகிற அவரது 18 மணி நேர உழைப்பின் அர்த்தமற்ற கால விரயத்தை தெளிவாக்கப் போதுமானதாகும்.

ஒரு நாட்டின் ஜனாதிபதி என்ற முறையில் அவர் செயற்படவென உள்ள தளம் பற்றி அவர் ஒருபோதும் அக்கறை கொண்டிருக்கவில்லை; வானத்துக்கும் பூமிக்குமாக அதிகாரங்களைக் குவித்துக் கொண்டுள்ள பதவியின் மோசமான சர்வாதிகாரத் தன்மையை தெளிவாகப் புரிந்து கொள்ள வைக்கும்படியாக அவரது தன்மைகள் அமைந்திருந்தன. நாட்டின் சகல நிகழ்ச்சிகளும் அவர் அறியாமல் நடக்கமுடியாதளவுக்கு அவரது தலையீடு அனைத்தின் மீதும் இருந்தது. அவரது மலினத்துவ (populist) அரசியல் பண்புக்கும் அதிகார மையமான ஜனாதிபதி பதவிக்கும் இடையிலான உறவின் வளர்ச்சி உருவாக்கிய தவிர்க்க முடியாத நிகழ்வே அவரை நடுவீதியில் பிணமாக்கியது என்றால் மிகையாகாது.

ஜனாதிபதி உருவாக்கி விட்ட மலினத்துவ அரசியல் பண்பு, அதிகார மையமாக இருந்த ஜனாதிபதிப் பதவி மூலம் செய்யப்பட்ட எழுதப்படாத ஒழுல்கு முறைகள் என்பன, கொலை நடந்து சற்று நேரத்திற்கெல்லாம் நாட்டின் அரசுத் தலைவர் கொல்லப்பட்ட இடம் அடையாளம் காணப்பட முடியாதளவுக்கு சுத்தமாக்கப்பட்டு விட்டதிலிருந்து, எவ்வளவு பலமிக்கவையாக விளங்கின என்பதைப் புரிந்து கொள்ளப் போதுமானதாகும்.

கொலை செய்யப்படுவதற்கு இரண்டொரு நாட்களுக்கு முன்பு அவர் லலித் அத்துலத்முதலி கொலை செய்யப்பட்ட அதே கிருலப்பனையில் பேசிய பேச்சொன்றில் அடைத்த குரலில் கூறிய வார்த்தைகள் திரும்பத் திரும்ப வானொலியில் ஒலிபரப்பப்பட்டன. சோக காலமாக அறிவிக்கப்பட்ட ஆறு நாட்களில் நாடுமுழுவதும் ஒலிபரப்பிகளில் திரும்பத் திரும்ப போடப்பட்டன. எல்லா யூ.என்.பி தேர்தல் மேடைகளிலும் இப் பேச்சு ஒலித்தது. ''என்மீது கோபம் இருப்பின் என் உடலுக்கு வெடிவைத்து என்னைக் கொலை செய்யுங்கள். நான் சிறுவயதிலிருந்து கட்டிக் காத்து வந்த எனது நற்பெயரைக் கொலை செய்யாதீர்கள்'' என்ற அவரது இந்தப்பேச்சு, லலித் அத்துலத் முதலியைக் கொலை செய்வதற்காக அரசாங்க அமைச்சர்கள் திட்டமிட்டு செயற்பட்டார்கள் என்ற எதிர்க் கட்சியினரின் குற்றச் சாட்டுக்கு பதில் அளிக்கும் முகமாக பேசப்பட்டதாகும்.

ஜனாதிபதி பிரேமதாசா கட்டிக் காத்த அவரது 'நற்பெயர்' கடந்த ஒருவருட காலத்துள் படுமோசமாக விமர்சிக்கப்பட்டிருந்தது. அவர் கொல்லப்பட்டபோது அதை வெடி கொழுத்தி ஆரவாரத்துடன் ஏற்றுக் கொள்ளவும் ஒருபகுதி மக்கள் தயாராக இருந்தார்கள் என்பதும், அவரது கொலை மிகச் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகிப் போனதும், யூ.என்.பி திட்டமிட்டு செயற்கையாக அனுதாப அலை ஒன்றை உருவாக்க வேண்டிய நிலைமையே இருந்ததென்பதுவும் மறைக்க முடியாத உண்மைகளாகும். அவரது 'பெயர்' பல கொலைகளுடன் - அரசியல் கொலைகளுடன்- தொடர்புபடுத்திப் பேசப்படுவது மிகப் பகிரங்கமாகவே நடந்தது. நாட்டின் சகல நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றுகிற, அரசின் அனைத்துத் திட்டங்களையும் திட்டமிட்டு, நடைமுறைப்படுத்த அதிகாரிகளை நியமிப்பது வரை அனைத்தையும் செய்கின்ற தனி மனிதனாக, நாட்டின் எல்லா ஒழுங்கு மீறல்களையும் -அது தனது கட்சிக்குள்ளாயினும் சரி- ஒழுங்குபடுத்துகின்ற ஒரு தனிமனிதனாக இயங்கியதாக தன்னைக் காட்டிக் கொண்ட பிரேமதாசா, அரசு தொடர்பு சாதனங்கள் மூலம் எல்லாம் எனது கட்டுப்பாட்டில் உள்ளது என்று திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டு வந்த பிரேமதாசா உருவாக்கிய 'நற்பெயர்' தவிர்க்க முடியாமல் நாட்டின் அனைத்து அனர்த்தங்களுக்கும் கூட அவரே பொறுப்பு என்ற அபிப்பிராய அலையைப் பலம் பெறச் செய்தது. நாட்டில் மிக அண்மைக் காலங்களில் நடந்த அனைத்து அரசியல் சார்ந்த படுகொலைகளும், அல்லது முக்கியஸ்தர்களின் கொலைகளும் பிரேமதாசாவின் சூழ்ச்சியே என்று வெளிப்படையாகவே பேசப்பட்டது.

எதிர்க் கட்சிகளும், அரசு சாராப் பத்திரிகைகளும் பிரேமதாசாவுக்கு எதிராகத் தொடக்கிய தாக்குதல், வெகு இலகுவிலேயே பலமான அடித்தளத்தைப் பெற்றுக் கொள்வதில் எந்தச் சிரமமும் இருக்கவில்லை. அவரது 'நற்பெயர்' அவரது 'தலையீட்டு' குணாம்சம் காரணமாக மிக இலகுவிலேயே கேள்விக்குள்ளாக்கப் படுவதாயிற்று. நாட்டின் அனைத்து அனர்த்தங்களுக்கும் கூட மூலகாரணமானவராக அவரே இருக்கின்றார் என்பது பலமாக -குறிப்பாக மேல் மட்டத்தில்- உருவாகி இருந்தது. இத்தகைய ஒருநபர், நிலவும் சமூகத்தின் ஒரு சுமையாக உணரப்படுவதும் அவர் அப்புறப்படுத்தப்படுவது அவசியம் என்பது அமைப்பின் அனைத்து மட்டங்களிலும் ஆதரவைப் பெற்றதாக வளர்ந்திருந்ததும் மிகவும் வெளிப்படையாகவே தெரிந்தன. லலித் கொலை இதை மேலும் உக்கிரப்படுத்தியதுடன், பிரேமதாசா கொலையை ஒரு மிகச் சாதாரணமான ஒன்றாக, இலகுவில் ஜீரணிக்கப்படக் கூடிய ஒன்றாக உருவாக்கி விட்டது. ஒரு இயற்கை மரணத்திற்குரிய தாக்கத்தை விட அது பெரியளவில் எத்தகைய தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை என்றே சொல்ல வேண்டும்.




ஜனாதிபதியாகப் பதவியேற்ற போது

'பிரேமதாசா அரசியல்' 1989இல் அவர் ஜனாதிபதி ஆகியதிலிருந்து தான் அதன் தன்மையை வெளிப்படையாகக் காட்டிக் கொள்கிறது. அவர் தன்னையும் தனது அரசியலையும் நான்கு அடிப்படையான மலினத்துவ கோட்பாடுகளின் மேல் நிலைநிறுத்திக் கொண்டார். தீவிரமான தேசபக்தி, தீவிர ஜனநாயகப் பண்பு, ஏழை மக்களின் நல்வாழ்வு, நேர்மையான ஓய்வொழிச்சலற்ற உழைப்பு என்பனவே அந்த நான்குமாகும். அவரது பாணி தேசபக்தி பௌத்த சிங்கள மரபுவழித் தேசியத்தை அடிநாதமாகக் கொண்டு எழுப்பப்பட்டது. இன ஐக்கியம், அமைதி, நாட்டின் சுபீட்சம், அன்னியத் தலையீட்டு எதிர்ப்பு என்பன இதன் கிளைகளாக விரிந்தன. இக் கோட்பாடுகள் அவரைப் பொறுத்தவரை அவரது மலினத்துவ அரசியல் போக்குக்கு துணை சேர்ப்பவையாகவும் அரசியல் ரீதியில் அவர் மீது பலரை இலகுவில் மயக்கும் சக்தி வாய்ந்தவையாகவும் அமைந்தன.

1989இல் அவர் ஆட்சிக்கு வந்த போது, வடக்கு கிழக்கில் நிலை கொண்டிருந்த இந்தியப் படைகளை வெளியேறக் கோரியது, தெற்கில் ஜே.வி.பியினரின் இந்திய எதிர்ப்பு தேசியவாத அரசியலுக்குச் சாவுமணி அடித்ததுடன் அவர்களை விடத் தீவிர அரசியல் முன்முயற்சியாளராக பிரேமதாசாவை உயர்த்தியது. ஜே.வி.பியையும் புலிகளையும் பேச்சுவார்த்தைக்கு அழைத்தது அவரது ஜனநாயகத்தின் மீதான விருப்பைக் காட்டுவதாகக் கருதப்பட்டது. ஜனசவியத் திட்டம், அவரது அரச தகவல் தொடர்பு சாதனங்களூடான பிரச்சாரம், அமைச்சர்களை பாடசாலை ஆசிரியர் பாணியில் மதிப்பிட்டமை போன்ற நடவடிக்கைகள் அவரது ஏழை மக்கள் சார்பு, நேர்மையான உழைப்பு என்பவற்றிற்கு உதாரணங்களாகக் கூறப்பட்டன.

அரசியலில் புலிகளையும், ஜே.வி.பியினரையும், ஏன் பிற எதிர்க் கட்சிகளையும் விட தீவிர முன்முயற்சி வாய்ந்த பிரேமதாசாவிற்கு இந்தக் கோட்பாடுகள் அவரை ஒரு அரசியல் சாணக்கியர் என்பதை விட மக்கள் தலைவர் என்ற தரத்திற்கு உயர்த்தின. உண்மையில் அவர் விரும்பியதும் அதைத்தான். அரசியல் சாணக்கியம் மிக்க தலைவர்களை விட, மலினத்துவ அரசியல் மூலம் பதவியில் நீண்டகாலம் தாக்குப் பிடித்த எம்.ஜி.ஆர் இவரது ஆசி வழங்காத குருவாக இருந்தார். எம்.ஜி.ஆரின் பல 'ஏழை மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை' ஒத்ததே இவரது ஜனசவிய திட்டம். ஆளுயர கட்டவுட், தனிநபர் புகழ்மாலை, விளம்பரம், அரச தொடர்பு சாதனங்களை முழுக்க முழுக்க தனது நடவடிக்கைகளை நோக்கியே குவியப்படுத்தியது என்பன இவரது மலினத்துவ அரசியலின் வெற்றிக்கான அடிப்படைகளாகும். இவரது அரசியற் கோட்பாடுகளான மேற்குறித்த நான்கு அம்சங்களும் -அவை வெறும் கோட்பாடுகள் என்ற அளவிலேயே மககள் மத்தியில் பிரபலப்படுத்தப்பட்டன- அவரது எதிராளிகள் அனைவரையும் அரசியல் ரீதியில் மண் கவ்வ வைத்தன. புலிகள்,ஜே.வி.பி.,பிறபாராளுமன்ற எதிர்க்கட்சிகள் அனைத்திடமும் இருந்த அனைத்து 'அரசியல் நிலைப்பாடுகளையும்' தனது ஜனரஞ்சகத் தன்மை வாய்ந்த பேச்சுக்களாலும் அறிவிப்புக்களாலும் செல்லாக்காசாக்குவதில் வெற்றி பெற்றார். அவர்களை அரசியல் அநாதைகள்



# து

## ள் அரசியல் போக்குகள்.



ஆக்கினார். பேச்சுவார்த்தைக்கு வரமறுத்த ஜே.வி.பியை- மக்களின் அங்கீகாரத்துடன்- அடக்கினார். முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர்கள் இந்நடவடிக்கைகளின் போது கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. பேச்சுவார்த்தைக்கு 'நிபந்தனைகள் எதையும் விதிக்காமல்' அழைத்த பிரேமதாசா, 'பேச்சுவார்த்தையின் போது பேசப்படுபவைகளை வெளியிடக் கூடாது' என்பதை மட்டும் கேட்டுக் கொண்டு புலிகளுடன் பேசினார். சர்வதேச அங்கீகாரத்துடன் புலிகளைத் தாக்குவதற்கு வடக்கு கிழக்கை இரத்தக் காடாக்கும் யுத்தத்தை நடாத்துவதற்குரிய நிலமைகளை உருவாக்கினார்.

ஜே.வி.பி. அவரது 'தேசபக்த' இந்திய எதிர்ப்பு அரசியலின் முன்னால் தோற்றுப் போனது என்றால், புலிகள் அவரது 'ஜனநாயகத்தின்' முன்னால் தோற்றுப் போனார்கள். பிரேமதாசாவை கண்ணியவான் என்று கூறுமளவுக்கு அவர்களை அவர் ஆட்கொண்டார். அரசியல் ரீதியாக புலிகளைப் பலவீனப்படுத்திய அவர் நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணத் தயார் என்று கூறி 'பாராளுமன்றத் தெரிவுக் குழுவை' அறிவித்ததன் மூலமாக, தமிழ் பாராளுமன்ற கட்சிகள், எதிர்க் கட்சிகள் எல்லாவற்றிற்கும் அரசியல் மூடுவிழா நடாத்தும் நிலையை உருவாக்கினார். அவரது பிரபலமான ஜனசவிய, கம்உதாவ, ஆடைத் தொழிற்சாலை போன்ற திட்டங்கள், கசினோ ஒழிப்பு, இஸ்ரேலிய நலன்புரி மன்றம் வெளியேற்றம் போன்றவை அவரது எல்லா அரசியல் எதிரிகளையும் அடியற்றவர்களாக்கியது. பிரேமதாசாவின் புத்திசாதுரிய மிக்க மலினத்துவ அரசியல் அவரது ஆட்சிக் காலத்திற்கு தேவையான அமைதியை உருவாக்கித் தரவே செய்தது. அரசியல் ரீதியாக எந்த எதிர்ப்புமில்லாத ஒருவராக அவர் தன்னை உருவாக்கிக் கொண்டார்.

ஜனாதிபதியின் இந்திய எதிர்ப்பு, தேசபக்தி என்பன வெறும் கண்துடைப்பு என்று கூற ஒரு எதிர்க்கட்சிக்கும் -ஜே.வி.பிக்குக் கூட- அரசியல் ஆளுமை இருக்கவில்லை. நாட்டின் திறந்த பொருளாதாரக் கொள்கை அந்நிய முதலீட்டாளர்கள் இலங்கையைச் சுரண்ட இடமளிக்கும் ஒன்று என்பதும் இது எந்த வகை தேசபக்தி என்றும் அவரை யாரும் கேட்கவில்லை. நாட்டில் அவசரகாலச் சட்டத்தை தொடர்ந்து வைத்திருப்பது எந்த வகை ஜனநாயகம் என்பது யாருக்கும் முக்கியமாகப் படவில்லை. அதற்கெதிராக பாராளுமன்றத்தில் புள்ளடி போடுவதோடு சரி. தோட்டங்களை கம்பனிகளிடம் வழங்கியது, அரச கூட்டுத் தாபனங்களை தனியார் மயமாக்கியது எல்லாம் யாரும் கேள்வி கேட்கும் விடயங்களாக இருக்கவில்லை.

பௌத்த மதம், சிங்கள மொழி என்பவற்றை உயர்த்திப் பிடித்தது, பிரபாகரனை இந்தியாவிடம் கையளிக்க முடியாதென்றது ( ஆம் என்றால் மட்டும் கொடுத்திருக்க முடிந்திருக்குமோ என்னவோ?) என்பவை அவரது தேசபக்திகள் என்றால், பாராளுமன்ற தெரிவுக் குழுவும், நடமாடும் செயலகங்களும் அவரது ஜனநாயகத்தின் வெளிப்பாடுகள் என்றால் தனியார் மயமாக்கலில் தொழிலாளி ஒருவருக்குப் பங்கு கிடைப்பது அவரது ஏழை மக்கள் நலம் பேணல் என்றால், மந்திரிகளைப் பதவி நீக்கம் செய்வது முதல் அரச நிறுவனங்களின் அத்தியட்சகர்களை நீக்குவது நியமிப்பது வரை அவரே கவனிப்பது அவரது நேர்மையான உழைப்பாயிற்று. ஊனமுற்றோருக்கு நிதி வழங்குவது அவரது முக்கிய கவனிப்புக்குரிய விடயம் ஆயிற்று.

எதைச் செய்தாலும் அதை ஒரு மாபெரும் கேளிக்கை நிகழ்ச்சியாக்கி, பெரும் விளம்பரத்துடன் செய்வது அவரது மலினத்துவ அரசியலிற்கு முக்கியமான ஒன்றாக இருந்தது. கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவில் கம்உதாவ கொண்டாட்டங்கள் செய்யப்பட்டன; நாடெங்கும் மணிக்கூட்டு கோபுரங்கள் திறக்கப்பட்டன. ஆடைத் தொழிற்சாலைகள் திறப்பதும், அதில் ஜனாதிபதி துணி வெட்டுவதும் திரும்பத் திரும்ப ஒளிபரப்பப்பட்டது. ஊனமுற்ற சிறுவர்களுக்கு உதவுவது போன்ற நிகழ்ச்சிகள், கிராமங்களில் உள்ள வறிய மக்களுடைய வீடுகளுக்குப் போவது போன்ற நிகழ்ச்சிகள் அடிக்கடி காட்டப்பட்டன. அவரைப் புகழ்கின்ற பாடல் கசட்டுகள் ரூபவாஹினியிலும், றேடியோவிலும் அடிக்கடி ஒலிபரப்பாகின...

தனது 'நற்பெயரை' உருவாக்குவதில் அவர் மிகக் கவனமாக இருந்தார்.

அவர் போன்ற அரசியல் முன்முயற்சியுள்ள ஒரு தலைவர், தனது பெயரைத் திட்டமிட்டு பிரபல்யமாக்கி நிலைத்து நிற்கவைப்பதில் தீவிரமாக உழைத்த ஒருவர், இலங்கையில், மலினத்துவ அரசியலை பலமாக்கிய ஒரு மலினத்துவவாதி எந்த அரசியல். பொருளாதார கொள்கைப் பலமுமற்ற எதிர்க் கட்சிகளின் பிரச்சாரத்தின் முன்னால் இயற்கை மரணமென அங்கீகரிக்கப்படும் அளவில் கொல்லப்பட்டது எப்படி என்பது ஒரு சிந்தனைக்குரிய கேள்வியாகும்.


நாட்டின் மிக அடிமட்ட நிலையிலிருந்து வந்தவர் பிரேமதாசா. முறைசார் கல்வியூடாக தன்னை உருவாக்கிக் கொண்டவர் அல்ல அவர். அவரது இளமைக் காலம் வறுமையும் துன்பமும் மிகுந்ததாக இருந்தது என்று அவர் பற்றிய குறிப்புகள் கூறுகின்றன. முறைசார் கல்வியை மட்டுமல்ல, வசதியான வாழ்வின் ஒரு அம்சத்தையும் அவர் இளமையில் பெற்றுக் கொள்ள முடியவில்லை. இலங்கையின் அரசியலில், யூ.என்.பியில் இத்தகைய பின்னணியுடன் அவர் முன்னுக்கு வந்தார் என்பது வெறும் விபத்து அல்ல. அவரது உழைப்பு மட்டுமல்லாமல் யூ.என்.பிக்குள் நடந்த சேனநாயக்க பாம்பரைக்கு எதிரான நடவடிக்கைகளும் இதற்கு முக்கிய காரணமாகும்.

1970இல் தேர்தலில் தோல்வியுற்றதில் இருந்து 1977இல் யூ.என்.பி கட்சியை ஆட்சிக்குக் கொண்டு வருவதற்காக கட்சியில் நடந்த இரண்டு முக்கியமான விடயங்களில் ஒன்று ஜே.ஆர் தலைமையிலான சேனநாயக்க பரம்பரை எதிர்ப்பு வெற்றி பெற்றது; புதிய திறந்த பொருளாதாரக் கொள்கை திட்டமிடப்பட்டது என்பவையே அவை. இந்த இரண்டிலும் திரு. பிரேமதாசாவின் பங்கு கணிசமானது என்கிறார்கள்.

ஜே.ஆரின் மேட்டுக்குடி தலைமை, பிரேமதாசாவின் உழைப்பு, அவரது மலினத்துவ அரசியலால் ஏற்பட்ட செல்வாக்கு என்பவற்றால் வேறுயாரிடமும் அடுத்ததாக கொடுக்கப்பட முடியாமல் போயிற்று. கட்சியினுள் அவரது உழைப்பை தெரிந்தவர்கள் அவரது பின்னணிக்காக மட்டும் ஒதுக்க முடியவில்லை. பிரேமதாசா தவிர யாரிடம் பதவி போயிருந்தாலும் கட்சி அப்போதே உடைந்திருப்பதுடன் மேட்டுக் குடித் தலைமை சிறுபான்மையாகவே போயிருக்கும்.

திரு. பிரேமதாசா தனது தலையிடும் பண்பு, ஜனாதிபதிப் பதவி தந்த அதிகாரம் என்பவற்றைப் பயன்படுத்தி கட்சியுள் தன்னை எதிர்க்கக் கூடிய அனைத்து மேட்டுக்குடி தலைமையையும் ஓரம்கட்டினார். அதிகாரங்களைப் பிடுங்கினார். வழமைபோல் தனது எல்லா நடவடிக்கைகட்கும் ஒரு மலினத்துவ காரணம் சொல்வது போல் இதற்கும் அவர் காரணம் சொன்னார். கட்சிக்குள் இவர் செய்ய நினைத்த ஒழுங்குகள் -தன்னை எதிர்ப்பவர்களைத் தனது ஜனாதிபதி அதிகாரத்தைப் பாவித்து ஓரம் கட்டுவது- இவருக்கு எதிராகத் திரும்பின. யூ.என்.பி அரசிற்கு மாற்று அரசியலையோ பொருளாதாரக் கொள்கைகளையோ வைக்கத் திராணியற்ற எதிர்க் கட்சிகள் இவரது தனிநபர் சர்வாதிகாரத்தின் மீது குறிவைத்து அரசியலைத் தொடங்கின. இவரது தனிநபர் சர்வாதிகாரம், கட்சிக்குள் அதிகாரம் மறுக்கப்பட்டவர்களினால் முன்னெப்போதையும் விடப் பெரிதாக உயர்த்திப் பிடிக்கப்பட்டது. அவர்கள் இவருக்கெதிராக ஒழுக்க வழுவுரை பிரேரணையை கொண்டு வந்தார்கள். அது தோற்றுப் போனதுடன் பிரேமதாசாவுக்கு எதிரான தாக்குதல் கொஞ்சம் அரசியல் முலாம் பூசப்பட்ட ஜனாதிபதி முறைமைக்கு எதிரான தாக்குதலாக மாற்றம் பெற்றது. இதற்கு நாட்டின் பலமட்டங்களிலும் - பாரம்பரிய மேட்டுக் குடிகள் முதல், எதிர்க் கட்சிகள், பிற ஜனநாயக சக்திகள் அனைவர் மத்தியிலும் தத்தமது நோக்கங்களுக்காக- ஆதரவு பெருகிற்று. இந்தப் போக்குக்கு எதிராக பிரேமதாசாவின் கொள்கைகள் வேர் கொண்டுள்ள நான்கு கோட்பாடுகளாலும் தாக்குப் பிடிக்க முடியவில்லை. அவரது கல்வி, அவரது சமூகப் பின்னணி, அவரது அதிகார மோகம், அவரது தனிப்பட்ட குணநலன்கள் என்பவற்றைச் சுற்றி எழுப்பப்பட்ட இந்தப் பிரேமதாசா எதிர்ப்பு அரசியலை எதிர்கொள்ள அவருக்கு உதவியது அவரது அதிகாரம் மட்டுமே. இது மேலும் மேலும் நிலைமையை மோசமாக்கிற்று.

அவரது நான்கு கோட்பாடுகளின் போலிமையை மூடி மறைத்து அவரை உயர்த்திப் பிடித்த அவரது தனிப்பட்ட தனிநபர் விளம்பர உலகு தகர்க்கப்பட தொடங்கியதும் அடிப்படை கோட்பாடுகளும் அம்பலமாகுவது தவிர்க்க முடியாது போயிற்று. இதனை அவர் இரண்டு வழிகளில் எதிர் கொண்டார். ஒன்று மேலும் மேலும் அதிகமாக மக்கள் முன் செல்வது; புதிய புதிய மலினத்துவ திட்டங்களுடன் மக்களில் ஒருவனாகத் தன்னைக் காட்டிக் கொள்வது. (உ+ம் 1500 கிராம எழுச்சித் திட்டம்) ஜனாதிபதி அதிகாரமூலம் முடிந்தளவு எதிர்க்கட்சிகளை, அவர்களுக்கு சார்பான தொடர்பு சாதனங்களை கட்டுப்படுத்துவது. இது அவர் நினைத்ததற்கு எதிர் மாறாகவே போயிற்று.




நாட்டில் நடந்த முக்கிய கொலைகள் அனைத்துக்கும் ஜனாதிபதிக்கும் தொடர்பு இருப்பதாக எதிர்க் கட்சிகள், பத்திரிகைகள் சூசகமாகத் தெரிவித்தன. பிரேமதாசா அரசு ஒரு 'கொலைகார அரசு' என்ற அபிப்பிராயம் சனரஞ்சகப்படுத்தப்பட்டது. இந்தப் பிரச்சாரம் எதிர்க் கட்சிகட்கு மிகவும் தேவையான ஒன்றாக இருந்தது. லலித்தின் கொலையுடன் எதிர்க் கட்சிகள் வெளிப்படையாகவே அரசைக் குற்றம் சாட்டத் தொடங்கி விட்டன.

இவற்றை வெல்ல தனது வழமையான முன்முயற்சி நடவடிக்கைகளை ஜனாதிபதி எடுக்கவே செய்தார். சர்வதேச ஆணைக்குழு விசாரணை, ஸ்கொட்லண்ட் யாட் விசாரணை என்ற அறிவிப்புகள் இவற்றின் விளைவுகளே. ஆனால் இலங்கைப் பொலிஸின் நடவடிக்கைகளும் அரசு, அரசு சார்பு தவிர்ந்த அனைத்துக் கட்சிகளும் பத்திரிகைகளும் நடாத்திய பிரச்சார வேகத்திற்கு முன்னால் அவரால் ஈடுகொடுக்க முடியவில்லை.

நாட்டில் -குறிப்பாக மேற்கு மாகாணத்தில்- பிரேமதாசா எதிர்ப்பு மிகப் பெரிதாகவே வளர்ந்து விட்டது. அவரை அப்புறப்படுத்துவதில் ஐக்கியப்பட்ட எல்லா சக்திகளும் தத்தமது நோக்கங்களுடன் தீவிரமாகச் செயற்பட்டன; பிரேமதாசா கொல்லப்பட்டார். றட்ணசிறி ராஜபக்ச சொல்லியது போல ''முதலில் அவரது நற்பெயர் கொல்லப்பட்டது, பிறகு அவர் கொல்லப்பட்டார்.''

அவரது எந்த அரசியல் ரீதியான அறிவிப்பும் போலவே தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்போம் என்ற அறிவிப்பும் இருந்தது. மிகவும் கவர்ச்சியாக, புலிகளே அவரை கண்ணியவான் என அழைக்க வைக்கிறதாக இருந்தது அது. அவரது பெயரைப் பாதுகாப்பதற்கான அனைத்து நிகழ்ச்சிகளும் நடந்தன. யுத்தமும் நடந்தது. எதிலும் மாற்றமில்லை. தமிழ் மக்களின் மீதான யுத்தம் சர்வதேச ரீதியில் நியாயப்படுத்தப்பட்டது.

அவர் எல்லாம் தருவோம் என்றார்.

ஆனால் ஒன்று கூடத் தருவதற்காக அவர் முயலவில்லை. ஆனால் இன்றுவரை தருவதாக சொன்னது தான் பேசப்படுகிறது. தரவில்லை என்பது பற்றி ஒருவரும் பேசுவதில்லை. இது பிரேம்தாசாவின் மலினத்துவ அரசியலிற்கு கிடைத்த மாபெரும் வெற்றி.

'நாட்டில் இனப்பிரச்சினையை தீர்க்க முயன்ற ஒரே தலைவரும் கொல்லப்பட்டு விட்டார்' என்ற நற்பெயருடன் அவர் போய்ச் சேர்ந்து விட்டார்.

இறுதியாக அவரது தனிப்பட்ட உழைப்பைப் பற்றிச் சொல்ல வேண்டும். இலங்கை அரசியல் வரலாற்றில் பிரேமதாசா போன்ற

→ 13

- சஞ்ஜித் -



# டி யு என் எப்


# என்ன செய்யப் போகிறது இனி?

**சிவமூர்த்தி**

சுதந்திர காலத்தில் இருந்து இற்றைவரை இலங்கையின் அரசியற் களமானது பல்வேறு கட்சிகளின் தோற்றத்தினையும் அவற்றில் சிலவற்றின் சிதைவினையும் கண்டு வருகிறது. ஆயினும் 1956 வரை இலங்கையின் அரசியற் போக்கினை தீர்மானிக்கும் சக்தியாக ஐ.தே.கட்சியும் 1956ன் பின் ஸ்ரீ.ல.சு.கட்சியுமே விளங்கி வருகின்றன. இவ்விரு கட்சிகளும் தனித்து ஆட்சியமைக்க முடியாத சந்தர்ப்பங்களில் சிறிய வலதுசாரி, இடதுசாரிக் கட்சிகளுடன் தம் கூட்டினை ஏற்படுத்துகின்றன.

1947 - 1956 காலப் பகுதிகளில் நிலவிய தனிக்கட்சிப் போக்கிலும் இரு கட்சி அதிகாரப் போக்கிலும் 1956 தேர்தல் ஒரு மௌனப் புரட்சியை ஏற்படுத்தி இரு கூட்டுக் கட்சி முறைமையினை ஏற்படுத்தியது. அவ்வாறே 1992இல் உருவான ஜ.ஐ.தே.மு இரு கூட்டுக் கட்சி ஆதிக்கப்போக்கை உடைத்து இலங்கையின் அரசியலில் ஒரு திடீர் புரட்சியை அல்லது பிரிவினைக் கோட்டை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது உண்மையே. ஆனால் இன்றைய மாகாண சபைத் தேர்தல் முடிவுகளும் நிலவுகின்ற அரசியல் சூழ்நிலையும் இனிவரும் காலங்களில் அக் கட்சியின் நிலை பேற்றினையை கேள்விக்கு இடமாக்கி உள்ளது என்பதனை நாம் மறுக்க முடியாது.

பொதுவாகவே சுதந்திரத்திற்கு முன் 1930 களில் சூரியமல் இயக்கத்துடன் ஆரம்பித்த ல.ச.ச.கட்சி, சுதந்திரத்தின் பின் தேசிய காங்கிரஸ், முஸ்லீம் லீக், சிங்கள மகா சபை ஆகியன இணைந்து உருவாக்கிய ஐ.தே.க, பண்டாரநாயக்காவின் தலைமையில் பிரிந்து சென்ற சிங்கள மகாசபையால் உருவாக்கப்பட்ட ஸ்ரீ.ல.சு.க முதலிய கட்சிகள் யாவுமே தமக்கென சில



அடிப்படைக் கோட்பாடுகளைக் கொண்டு இருந்தன. கூடவே சுதந்திரத்திற்கு முற்பட்ட கால நீண்ட தொடர்ச்சியினையும் கொண்டு இருந்தன.

ஆனால் ஜ.ஐ.தே.முன்னணியின் தோற்றம் தற்செயலானது. ஒரு சடுதியான நிலைமாற்றம் தவிர அது ஒரு கோட்பாட்டு ரீதியான உருவாக்கம் அல்ல. வெறுமனே பிரேமதாசா என்ற தனிநபரின் பலவீனங்களின் மீது கட்டப்பட்ட ஒரு மண் வீடு. கட்சியினுடைய கோட்பாடுகள் நடைமுறைகளுக்கு அப்பால் பிரேமதாசா எதிர்ப்புக் காய்ச்சலும் தனித்துவமான பிரபல்யமான திறமைத்துவ அரசியலுமே இக் கட்சியின் திடீர் வீக்கத்தினைத் தீர்மானித்தன.

1977இல் ஐ.தே.கட்சியின் வெற்றியைத் தீர்மானித்தவர்கள், ஜே.ஆரின் நம்பிக்கைக்கு உரியவர்கள், பிற்கால அரசியல் வாரிசுகள் என்றெல்லாம் போற்றப்பட்டவர்களே லலித் அத்துலத்முதலி, காமினி திசநாயக்கா, பிரேமச்சந்திரா ஆகியோர். இதில் லலித் அத்துலத்முதலி அல்லது காமினியே ஜே.ஆரின் பின் அரசியலில் தீர்மானகரமான சக்திகளாக வருவர் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் பிரேமதாசா அவர்களின் விடாமுயற்சிக்கும் கடின உழைப்புக்கும் முன்னால் இவர்களால் நின்றுபிடிக்க முடியவில்லை. அதனால் பிரேமதாசா உயர்குழாமினரின் அரசியல் ஆதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து கட்சித் தலைமையினையும் நாட்டின் தலைமையினையும் கைப்பற்றிக் கொண்டார்.

இந்த அதிகாரக் கைப்பற்றல் உயர் குழாமினரை வஞ்சிப்பதற்கு பயன்பட்டது. குறிப்பாக தனது தலைமைத்துவத்திற்கு பொறி வைக்கக் கூடிய லலித், காமினி முதலானோரை ஓரம் கட்டுவதில் பிரேமா முயன்றார். விளைவு காமினியின் அமைச்சுப் பொறுப்பு பறிமுதலானது. தொடர்ந்து லலித்தின் அதிகாரம் குறைக்கப்பட்டு தன் அதிகாரத்திற்கு உட்பட்ட உயர் கல்வி அமைச்சின் அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

இவ்வாறு அதிகாரத்தில் இருந்து புறக்கணிக்கப்பட்ட இவ் உயர்குடிப் புத்திஜீவித் தலைவர்கள் பிரேமதாசாவின் மீது கட்சிக்குள்ளாகவே நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்தனர். ஆனால் அது பிரேமாவின் ஆதிக்க அரசியல் தந்திரோபாயத்தின் முன் தோற்றுப் போனது. விளைவு, பிரேரணைக்குத் தலைமை தாங்கியவர்கள் கட்சிக்கெதிரான விரோதப் போக்குகளைக் கடைப்பிடித்தனர் என்ற போர்வையில் தூக்கி எறியப்பட்டனர். தொடர்ந்தும் கட்சியில் தொங்கிக் கொண்டு தலைமையைப் பிடிக்கலாம் என வழக்குத் தொடர்ந்தார்களாயினும் அதுவும் தோல்வியில் முடிந்தது.



தம்மாலேயே உருவாக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதித்துவ முறைமை தம்மையே பழிவாங்கிவிட்டநிலையில் அரசியல் அனாதைகளான இவர்கள் மாற்று வழியின்றி ஜ.ஐ.தே.முன்னணிக் கட்சியைத் தோற்றுவித்தனர். அதனது அடிநாதமாக பிரேமதாச என்பது விளங்கியது..

தாம் ஐ.தே.கவுக்கு எதிரானவர்கள் அல்ல எனவும் தாராளமயப் படுத்தலையே தாமும் பின்பற்றுவதாகவும் கருத்து வெளியிட்டனர். மாறாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையையும், தனிநபர் சர்வாதிகாரப் போக்கினையும் அகற்றுவதோடு ஜனநாயகத்தை மேம்படுத்துவது என்பதுமே அவர்களின் மந்திரங்களாகின.

இம் மந்திரங்களின் பின்னால் பிரேமதாசாவால் வஞ்சிக்கப்பட்டவர்களும், எதிரானவர்களும் இவ்வணியில் ஒன்று திரண்டனர். பிரேமதாசாவின் கல்வித்தரம், வாழ்க்கைப் பின்னணி, சாதி, தனிநபர் பலவீனங்கள், அரசியல் படுகொலைகள், ஜே.வி.பி அழிப்பு, புலிகளுடனான உறவு, அரசாங்கத்தில் தமிழர், முஸ்லீம்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் முதலான விடயங்கள் இவர்களின் பிரச்சார வடிவங்களாயின. பிரேமா எதிர்ப்பு வாதத்திற்கு இனவாதக் கருத்துகளும் தூபமிட்டன. ஐ.தே.கட்சிக்கு அளிக்கப்படும் ஒவ்வொரு வாக்கும் வடகிழக்கு இணைப்புக்கு அளிக்கப்படுபவை என லலித் தனது பிரச்சாரக் கூட்டத்தில் குறிப்பிட்டார். இது கடந்தகால இனவாத அரசியல் பாரம்பரியத்தையே மீண்டும் நினைவுபடுத்தியது.

உயர்குடிப் பிறந்தோரின் கையை விட்டு நழுவிய அரசியல் தலைமையானது மீண்டும் மேட்டுக் குடியை பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாலும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகக் கல்விசார் பின்னணியை உடையவர்களாலும் மீண்டும் கைப்பற்றப்படுவதைப் பலரும் உள்ளூர விரும்பினர். எனவே இவ் விருப்பங்களின் வெளிப்பாடுகளாக மேற்கிளம்பிய லலித் அத்துலத் முதலி திறமையான முதலாளித்துவ நிர்வாகியாகப் போற்றப்பட்டார். வர்த்தக வாணிபத்துறை அமைச்சராக விளங்கி தேசிய பந்தோபஸ்தின் காவலனாக உயர்த்தப்பட்டுப் பின் உயர்கல்வி அமைச்சிலும் புரட்சியை உண்டு பண்ணியவர் எனப் புகழப்பட்டார். வசீகரத் தோற்றம் உடைய காமினியும் கல்வியாலும் மகாவலி அமைச்சினாலும் புகழ் பெற்றார்.

இந்த வகையில் ஐ.தே.கட்சிக்கு மாற்றான பலமான அரசியல் தலைமை இன்மையும் ஸ்ரீ.ல.சு.கட்சியினால் ஏற்பட்ட அரசியல் இடைவெளியும் பிரேமாவின் மீது ஏற்பட்ட அதிருப்தியும் இணைந்து இம் மேட்டுக் குடியினரின் அரசியல் தலைமைத்துவத்திற்கு குறுகிய



கால இடைவெளியில் அதிக வாக்குகளைப் பெற்றுக் கொடுத்தன. ஆயினும் கொள்கையின்றி இவர்களுக்குக் கிடைத்த வாக்குகளும் எதிர்மாறாக ஐ.தே.கட்சியின் கொள்கைக்குக் கிடைத்த வெற்றியாகவே கருதப்பட வேண்டும் என்பதனை மறத்தல் கூடாது.

இக் கட்டத்தில் ஒரே காலத்தில் ஏற்பட்ட இரு அரசியல் கொலைகள் நிலவுகின்ற அரசியல் போக்கினையே பெரிதும் மாற்றி விட்டது எனலாம். ஜ.ஐ.தே.முன்னணித் தலைவரின் கொலையில் அரசின் கரங்கள் பின்னணியிலுள்ளது என்ற சந்தேகம் எல்லா மட்டங்களிலுமே வலுப்பெற்று வந்தவேளை பிரேமாவும் கொல்லப்பட்டார். இதனால் லலித் கொலையினால் ஏற்பட்ட உணர்வலையை பிரேமாவின் கொலை சமப்படுத்தியது.

இந்நிலையில் ஐ.தே.கவுடன் மீள இணைவோம் என ஜ.ஐ.தே. முன்னணியின் ஒரு சாராரும் பிரிந்தவரை மீண்டும் இணைப்போம் என ஐ.தே.கட்சியின் ஒரு சாராரும் பலமாக விவாதிக்கத் தொடங்கியுள்ளனர். ஆனால் காலத்தின் தேவை என்றுமே ஒட்டமுடியாத இடதுசாரிக் கூட்டு, ஸ்ரீ.ல.சு.கட்சியுடன் சேர்ந்து மேல்மாகாண ஆட்சியையும் ஜ.ஐ.தே.முன்னணி அமைத்துள்ளது. இந்நிலையில் ஜ.ஐ.தே.மு, ஸ்ரீ.ல.சு.க கூட்டு நிலைக்குமா அல்லது தனிக்கட்சி நிலை தொடருமா அன்றி ஐ.தே.க வுடன் இணையுமா என்ற கேள்விகள் குழப்பத்தை உண்டு பண்ணலாம்.

வரலாறு விஜய குமாரணதுங்கவின் பிரபல்ய அரசியலை அவரின் மரணத்துடன் அழித்து விட்டது. லலித்தின் கொலையும் ஜ.ஐ.தே. முன்னணியின் அழிவைத் தீர்மானிக்கிறதோ இல்லையோ பிரேமாவின் கொலை நிச்சயமாக ஜ.ஐ.தே. முன்னணியின் வரலாற்றுத் தேவையை இல்லாமலே ஒழித்து விடும் என்பது வெளிப்படை.

இந்த யதார்த்தத்திற்கு அப்பாலும் கட்சி நிலைபெற வேண்டும் என இத் தலைவர்கள் விரும்பினால் இரண்டே இரண்டு வழிகள் தான் உள்ளன. ஒன்று ஐ.தே.கவிற்கு மாற்றான பலமான அரசியல் கொள்கைகளை முன் வைத்தல்; மற்றையது ந.ச.ச.க, ல.ச.ச.க, கம்யூனிஸ்ட் கட்சிகளைப் போல முண்டு கொடுக்கும் கட்சிகளாக வாழ்க்கையை ஓட்டுவது. இதில் ஒன்றை தெரிவு செய்து கொள்ளட்டும்.

# இந்திய வம்சாவளியினரை ஒரே தேசியத்துள் இணைத்துவிட முடியாது.

மலையகள்

சரிநிகர் பங்குனி இதழில் மலையகத் தேசியம் தொடர்பாக என்னால் எழுதப்பட்டுள்ள கட்டுரைக்கு புதிய ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் தம்பையா எழுதிய கட்டுரை அவருடைய பழைய பாரம்பரிய இடதுசாரிக் கட்சியின் கண்ணோட்டங்களோடு ஒப்பிடும் போது முற்போக்கானதாக இருந்தாலும் கூட மலையகப் பிரச்சினையின் ஆழத்தையும் ஒரு தேசியத்தின் சரியான தன்மைகளையும் தெளிவாக புரிந்து கொள்ளத் தவறியுள்ளார் என்றே கூற வேண்டும். மலையகத் தேசியத்திற்குள் இணைக்கப்படக் கூடியவர்கள் யார்? இந்திய வம்சாவளி மக்கள் அனைவரும் ஒரே மாதிரியான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கிறார்களா? மலையகப் பிரச்சனைக்கான தீர்வு என்ன? என்பது தொடர்பாக குழப்பகரமான கருத்துகளையே அவர் கொண்டுள்ளார். இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளியினர் என்பதற்காக அவர்கள் எல்லோரையும் ஒரு தேசியத்திற்குள் இணைத்து விடமுடியாது. ஒரு மக்கள் கூட்டத்தின் விருப்புகளையும் அவர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளையும் அப்பிரச்சினைக்கான தீர்வுகளையும் அடிப்படையாகக் கொண்டே அம் மக்கள் கூட்டத்தின் தேசியத்தை நிர்ணயிக்க முடியும். இந்த வகையில் பார்க்கும் போது மலையகத்தில் வாழ்கின்ற மக்களையும் மலையகத்தோடு தொடர்புடைய ஏனைய இடங்களில் வாழ்கின்றவர்களையும் தவிர, கொழும்பு போன்ற நகர்ப்புறங்களில் வாழ்கின்ற நகர சுத்தித் தொழிலாளர்களையோ உடப்பு, நீர்கொழும்பு, சிலாபம் போன்ற வடமேல்மாகாண பகுதிகளில் வாழ்கின்ற மக்களையோ மலையகத் தேசியத்திற்குள் இணைத்து விட முடியாது. அதுவும் வடமேல் மாகாணத் தமிழ் பேசும் மக்கள் இந்திய வம்சாவளியினர் அல்ல. அவர்கள் வடகிழக்கு வாழ் தமிழ் மக்களைப் போல நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தை உடையவர்கள். அவர்களுக்கு உரிய பிரச்சினைகளும் தனித்துவமானவை. ஏனைய இந்திய வம்சாவளியினர் எல்லாருக்கும் பொதுவாக இருக்கின்ற பிரஜாஉரிமைப் பிரச்சினை கூட இவர்களுக்குக் கிடையாது. அவர்களில் பெரும்பாலாருக்கு மலையகம் பற்றி எதுவும் தெரியாது. மலையகம் பற்றி அவர்களுக்கு அக்கறையும் கிடையாது. இந்நிலையில் மலையகத் தேசியத்தில் அவர்களும் இணைக்கப்பட வேண்டும் எனக் கூறுவது வேடிக்கையானது.

மலையகத்திற்கு வெளியே வாழும் நகர சுத்தித் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் பிரஜாஉரிமைப் பிரச்சினையைத் தவிர்ந்த ஏனைய விடயங்களில் மலையக மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளிலிருந்து வேறுபடுகின்றார்கள். அவர்களில் பலரும் கூட மலையகத்தைப் பெரிதாக அறிந்திருக்கவில்லை. மலையகம் எமது தேசம் என்ற உணர்வும் கூட அவர்களுக்குக் கிடையாது. எனவே அவர்களையும் மலையகத் தேசியத்தினுள் இணைக்க முடியாது. தம்பையா கூறிய டைசியின் கோட்பாட்டின் படி கூட எதிர்காலத்திலாவது வசிக்கும் எண்ணம் இருந்தால் தான் அவர்களது வசிப்பிடமாகும். இங்கு மலையகத்திற்கு வெளியே வாழ்கின்ற நகரசுத்தித் தொழிலாளர்களுக்கோ, வடமேல் மாகாண மக்களுக்கோ எதிர்காலத்தில் கூட மலையகத்தில் வசிக்கும் எண்ணம் கிடையாது. இதனால் அவர்களை அத் தேசியத்திற்குள் அடக்க முடியாது. ஒரு தேசியத்திற்குள் வர விரும்பாத மக்கள் கூட்டத்தை அத் தேசியத்திற்குள் அடக்க நாம் முற்படுவோமாயின் அது பலவந்தமான இணைப்பாகவே முடியும். அது நடைமுறையில் வெற்றியைத் தர மாட்டாது. ஈ.பி.ஆர்.எல்.எப் உம், ஈரோஸ் உம் வடக்கு கிழக்கு தேசியத்திற்குள் மலையகத்தையும் அடக்கும் முயற்சியில் இறங்கினர். அவர்களால் கூறப்பட்ட ஈழம் என்பது மலையகத்தையும் உள்ளடக்கிய ஈழமாகவே விளங்கியது. இவர்களின் இணைப்பு பலவந்த இணைப்பாக இருந்தமையினாலும் மலையக மக்கள் எதிர் நோக்கிய பிரச்சினைகளும் அவர்களின் விருப்பும் வேறாக இருந்தமையினாலும் நடைமுறையில் மலையக மக்கள் ஈழத் தேசியத்துடன் இணைந்து கொள்ள முடியவில்லை. வடமேல் மாகாணத் தமிழ் மக்களின் நிலையும் மலையகத்திற்கு வெளியே வாழும் நகரசுத்தித் தொழிலாளர்களின் நிலையும் இதைப் போன்றதே.

இவ்வாறாயின் மலையகத்திற்கு வெளியே வாழ்கின்ற வடக்கு,கிழக்கு அல்லாத தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு என்ன? என்ற கேள்வி எழுகின்றது. இக் கேள்விக்குரிய விடை ஆய்வுக்குரியது. இது தொடர்பாக அவர்களின் பிரச்சினைகளை பூரணமாக ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். அவர்களுடைய குறிப்பான பிரச்சினைகள் என்ன? அவர்கள் என்னவாகத் தங்களை அடையாளப் படுத்திக் கொள்ள விரும்புகிறார்கள்? என்பதையெல்லாம் ஆய்வு செய்ய வேண்டும். எல்லா மக்களையும் சமத்துவமாக இணைக்கக் கூடிய இடதுசாரி இயக்கத்தின் பெரும் தோல்விக்குப் பின் வர்க்க ரீதியான சிந்தனைகள் புறந்தள்ளப்பட்டு இனரீதியான சிந்தனைகள் மேலோங்கிய நிலையில் இவ் ஆய்வு மிகமிக அவசியம். இவ் ஆய்வின் பின்னரே அவர்களுக்கு பொருத்தமான அரசியல் தீர்வை முன்வைக்க முடியும்.

மலையக மக்களுக்கான தீர்வு தொடர்பாகவும் தம்பையாவிடம் குழப்பமான கருத்தே நிலவுகின்றது. மலையக மக்களின் பிரதான பிரச்சினை ஒரு வர்க்கப் பிரச்சினை என்ற பாரம்பரிய இடதுசாரிகளின் கருத்தாதிக்கத்திலிருந்து அவர் இன்னும் விடுபடவில்லைப் போலவே தெரிகின்றது. மலையக மக்களின் பிரதான பிரச்சினை வர்க்கப் பிரச்சினை அல்ல. அது ஒரு தேசிய இனப் பிரச்சினை. அவர்கள் எதிர் நோக்குகின்ற எல்லாப் பிரச்சினைகளையும் அவர்கள் ஒரு தேசிய இனம் என்ற வகையிலேயே எதிர் நோக்குகின்றனர். தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது அவர்கள் தங்களுடைய பிரச்சினைகளை தாங்களே தீர்த்துக் கொள்கின்ற ஒரு நிர்வாக அலகு மூலமே சாத்தியமாகும். எனவே மலையக மக்களுக்குத் தனியான நிர்வாகப் பிரிவு தேவை. இதற்குக் குறைந்த எந்த ஒரு தீர்வும் அவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்கப் போவதில்லை.

## இனியும்....

யும் வாங்குவது போல.

இப்போது நடக்கின்ற இந்த மாகாண சபைத் தேர்தலில் வாக்களிக்கப் போகிற மக்கள் இவற்றையெல்லாம் சிந்திக்கா வண்ணம் வேறு விடயங்களால் அவர்கள் திசை திருப்பப்பட்டுள்ளார்கள். தலைவர்களது கொலைகள் போன்ற உணர்வூட்டல் விடயங்களே தீர்மானிக்கும் அம்சங்களாகப் போகின்றன. மக்களைத் தாம் ஒரு ஜனநாயக சூழலில் வாழ்கின்றதான பிரமையுடன் வாழ வைப்பதற்காகவும் அந்தப் பிரமையுருவாக்கும் தளத்தில் நின்று தாம் விரும்பியபடி விரும்பியதை செய்து விட்டுப் போகவும் ஆளும் வல்லமை பெற்ற பொருளாதாரத்தில் மேலோங்கிய சக்திகள் திரும்பத் திரும்ப தேர்தலை வலியுறுத்துகின்றன.

தேர்தல்களின் வெற்றிகள், பெரும் பணமுதலைகள், கம்பனிகள், பல் தேசிய மற்றும் நிதி நிறுவனங்களினால், அவைகளின் பணபலத்தால் தீர்மானிக்கப்படுகின்றன. தப்பித்தவறி யாராவது பிரதிநிதி அவர்களது நலன்களுக்கு விரோதமாகப் போனால் அவர் தூக்கி எறியப்படுகின்றார். அவர்களுக்குச் சாதகமான முறையில் 'மக்களின் பிரதிநிதிகள்' சட்டங்களை இயற்றுகின்றனர்; ஆட்சி நடாத்துகின்றனர். நிதி நிறுவனங்களின் கட்டளைகளை சிரமேற் கொண்டு இங்கு நடைமுறைப்படுத்துகின்றனர். உண்மையில் மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் இவர்களுக்கே பிரதிநிதிகளாக இயங்குகின்றனர். அனேகமான மூன்றாம் உலக நாடுகளின் பட்ஜட்டுகள், விலைவாசி ஏற்றங்கள், மானியக் குறைப்புக்கள் அனைத்தும் உலக வங்கி போன்ற நிதிநிறுவனங்களினாலேயே தீர்மானிக்கப்படுகின்றன என்பது ஊரறிந்த உண்மையாகும்!

இந்த நிலையில், ஒரு இலங்கைப் பிரஜை, தான் போடுகிற வாக்குக்கு ஏதாவது அர்த்தம் உள்ளதா என்று சிந்திப்பது அவசியமாகின்றது.

திரு. குமார் பொன்னம்பலம் அவர்கள் சொன்னது போல, எந்த மாகாணங்களின் பிரச்சினையைத் தீர்க்கவென இந்த மாகாண சபை முறைமை கொண்டுவரப்பட்டதோ அந்த மாகாணங்களில் தேர்தல்கள் நடக்கவில்லை. மற்றைய ஏழு மாகாணங்களிலும் நடக்கின்றது. மாகாண சபைத் தேர்தல் மட்டுமல்ல, தமிழ் மக்களைப் பொறுத்தவரை, எந்தத் தேர்தல்களும் பயனுள்ள முடிவைத் தரமுடியாது என்ற முடிவின் பின்னரே வடக்குக் கிழக்கில் ஆயுதப் போராட்டம் தோன்றியது. ( அவ்வாயுதப் போராட்டக் குழுக்களில் ஒருசில திரும்பவும் தேர்தல்கள் மூலமாக வரும் பிரதிநிதிகளை வைத்துக் கொண்டு தமிழ் மக்களின் பிரச்சினைகட்கு தீர்வு காணலாம் என்று நம்புகின்றன என்பது வேறு விடயம்.) ஆனால் இன்று வரை தமிழ் மக்களுக்கு எந்தத் தீர்வும் முன்வைக்கப்படவில்லை.

மாகாண சபைத் தேர்தலில் குதித்திருக்கும் முக்கிய கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சி, யூ.என்.பி என்பன இன்றுவரை தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வையும் முன்வைக்கவில்லை. குறைந்த பட்சம் கலைக்கப்பட்ட மாகாண சபை பற்றிக் கூட ஒரு வரி கிடையாது இந்த நிலையில் தமிழ் மக்களின் நிலை என்ன?

வடக்கு கிழக்கில் மாகாண சபைத் தேர்தலையும், பாராளுமன்றத் தேர்தலையும் நடாத்துவதற்கு இந்திய அரசு தீவிரமாக முயன்றது.

வடக்கு கிழக்கில் ஜனநாயகம் நிலவுவதாகக் காட்ட துப்பாக்கி முனையில் வேட்பு மனுதாக்கல் செய்து வாக்கெடுப்பு நடாத்தப்பட்டதும் இதைப் பறை சாற்றவே. இல்லாத அமைதியையும் ஜனநாயக வாழ்வையும் நிலவுவதாகக் கூறி உலகத்தின் கண்ணில் மண்ணைத் தூவவே.

இன்று இலங்கை அரசும் செய்ய நினைப்பதும் அதுவே. வடக்கு கிழக்கு தவிர்ந்த மற்றெல்லாவிடங்களிலும் அமைதியும் ஜனநாயகமும் நிலவுவதாக அது காட்ட முயல்கிறது. வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் தமிழ் மக்கள் பூரண நிம்மதியுடன் வாழ்வதாக அது கூறிக் கொள்ள விரும்புகிறது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்தத் தேர்தலில் வாக்களிப்பது ஒரு அர்த்தமற்ற செயலாகும். தமிழ் மக்களின் ஜனநாயக வாழ்வுக்கு; கௌரவத்திற்கு மதிப்பளிக்காத இந்த அரசியற் கட்சிகளின் போலி ஜனநாயகத் தேர்தல்களில் வாக்களிப்பது தம்மைத் தாமே ஏமாற்றுவதாகும்.

வடக்கு கிழக்கைச் சாராத இந்த ஏழு மாகாணங்களில் வாழ்கின்ற தமிழர்களது எதிர்கால வாழ்க்கையின் உறுதிப்பாடும் வடக்கு கிழக்கிற்கான அரசியற் தீர்வின் தன்மையுடன் பிணைக்கப்பட்டுள்ளதை யாரும் மறந்துவிட முடியாது.இவ்வளவு கால அனுபவம் இதையே எமக்குப் போதித்துள்ளது.

வடக்கு கிழக்குப் பிரச்சினையை விட்டாலும் கூட, இவ்வளவு கால வாக்களிப்பு அனுபவம் எதைத் தான் காட்டுகிறது? இந்த வகையில் ஏமாற்றப்பட்டுக் கொண்டே எவ்வளவு காலம்தான் தள்ளுவது?

தமிழ் மக்களைப் பொறுத்தவரை, காலங்காலமாக நடந்து வந்த அனைத்துத் தேர்தல்களும் அவர்களது அரசியல் ஜனநாயக உரிமைகளை ஏய்க்கவே பயன்பட்டு வந்துள்ளன. தமிழ் மக்கள் வாக்களித்தாலும் சரி, வாக்களிக்காவிட்டாலும் சரி அது மொத்தத்தில் எத்தகைய மாற்றத்தையும் ஏற்படுத்தியதில்லை; ஏற்படுத்தப் போவதும் இல்லை.

இந்தத் தேர்தல்கள் எந்தப் பயனும் அற்றவை என்று தெளிவாகத் தெரிந்ததன் பின்னரும் இன்னொரு தடவையும் தமிழ் மக்கள் வாக்களிக்கத்தான் வேண்டுமா?

இந்தப் போலி ஜனநாயகத்தின் ஏமாற்றுக்குப் பலியாகத்தான் வேண்டுமா?

இந்தப் போலி ஜனநாயக முறைமையின் வஞ்சகத் தன்மையை நிராகரிக்கவும், தமிழ் மக்களின் கௌரவத்திற்கு இழுக்கு ஏற்படுத்தும் இலங்கை அரசின் நடவடிக்கைகளை அது குறிப்பிடும் ஜனநாயக வழியில் எதிர்க்கவும் உள்ள ஒரே வழி இத் தேர்தல்களை தமிழ் மக்கள் பகிஷ்கரிப்பதே ஆகும்.

இனியும் நாம் ஏமாற்றப்படத் தயாரில்லை என்று இதன் மூலம் நிரூபிப்பதே ஆகும்!

## வரலாற்றில் தவறு..

கடந்த மார்ச் '' சரிநிகர் '' இதழில் ''தேசிய விடுதலைப் போராட்டம் ஒரு மீளாய்வு'' என்ற தொடர் கட்டுரையில் அன்னபூரணா எழுதிய சில விடயங்கள் வரலாற்று நோக்கில் பிழையானவை. தமிழ் ஈழம் என்ற பெயரை முதலில் பயன்படுத்தியவர்கள் தமிழ் ஈழ விடுதலை இயக்கமே என்பது அவரது வாதமாகும்.

உண்மையில் இப் பதத்தை முதன் முதலில் (எனக்கு அறிந்தவரை) பயன்படுத்தியவர் வவுனியா முன்னால் எம்.பி அடங்காத் தமிழர் செ. சுந்தரலிங்கமே. அவர் ஆங்கிலத்தில் எழுதிய நூலிலும் இப் பதப்பிரயோகத்தை வெளியிட்டதுடன் '' தமிழ் ஈழ விடுதலைக் கீதம் '' என்ற கவிதை ஒன்றையும் ஆங்கிலத்தில் வெளியிட்டார். அவரின் பின்பு தமிழ் ஈழக் கோரிக்கையினை வலியுறுத்தியவர்களில் தமிழரசுக் கட்சியில் இருந்து பிரிந்து சென்றவரும் முன்னர் தீவுப் பகுதி எம். பியாகவிருந்த வி. நவரத்தினமும் ஆகும். அவர்களால் நடாத்தப்பட்ட ''விடுதலை'' என்ற பத்திரிகையும் தமிழ் ஈழம் என்ற சொற்பிரயோகத்தைத் தாராளமாக அள்ளி வழங்கியுள்ளது என்பதையும் செல்வி(?) அன்னபூரணா அவர்களுக்குச் சொல்லி வைக்க விரும்புகின்றோம். அக் காலத்தில் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சுயாட்சிக் கழகத்தில் பிரச்சாரப் பீரங்கிகளாக இருந்த சிவஞானசுந்தரம் (அகால மரணம் அடைந்த தமிழ் ஈழ மாமன்றத் தலைவர்) இந்நாள் டெலோ இயக்கப் பேச்சாளர் ஸ்ரீகாந்தா ஆகியோரும் அந்நாளில் சுயாட்சிக் கழகத்திற்காக உழைத்தவர்கள். 1967, 1968ம் ஆண்டு காலப் பகுதிகளில் நடாத்தப்பட்ட கூட்டங்களில் இப்பதப் பிரயோகத்தை அவர்கள் முன்னெடுத்துச் சென்றனர். எனவே தமிழ் ஈழம் என்ற பதத்தை முதன் முதலில் உபயோகித்தவர்கள் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினரே என்பது தவறானதே.

இருப்பினும் தமிழ் மக்களின் வரலாற்று நோக்கில் இக் கட்டுரை ஒரு நல்ல பங்களிப்பைச் செய்துள்ளது. நூல் உருவில் வெளிவருமாயின் வருங்கால வரலாற்றுக்கு உதவி புரிவதாக அமையும்.

திக்கவயல். சி. தர்மகுலசிங்கம்.
கொழும்பு - 05.

## 'காமினியும் வடிகட்டின பொய்யும்'

சரிநிகர் இதழ் 22 ( மார்ச் 1993 ) 2ம் பக்கத்தில் '' சற்றடே றிவியூ '' ஆசிரியராகவிருந்த காமினி நவரத்ன நிர்வாகத்தினரால் வெளியேற்றப்பட்டது தொடர்பாக கூறியிருப்பவை உண்மைக்குப் புறம்பானவை. '' வடிகட்டாத பொய் ''.

'' சற்றடே றிவியூ '' கடைசி இதழ் அக்டோபர் 10, 1987இல் வெளிவந்தது. அக்டோபர் 17ம் திகதி இதழ் அச்சிடப்பட்டாலும் வெளிவரவில்லை. அக்காலத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள நிலைபரங் காரணமாக தொடர்ந்து வெளியிட முடியவில்லை. அத்துடன் இந்திய அமைதி காப்புப் படையினர் தமக்கெதிரானதாகக் கருதிய வெளியீடுகளுக்கு அனுமதி அளிக்கவில்லை. சிறு காலத்துக்குப் பின் வெளியிட அனுமதி கோரிய விண்ணப்பத்திற்கு பதில் கிடைக்கவில்லை. அதிகாரிகளைச் சந்தித்த போது வெளியீட்டை ஆரம்பிக்கலாமென்றும், ஆனால் இலங்கை இந்திய ஒப்பந்த எதிர்ப்புக் கட்டுரைகள் இடம் பெறக் கூடாதென்றும் மறைமுகமாகத் தெரியப்படுத்தினார்கள். இந்தச் சூழ்நிலையில் வெளியிடுவதில் பயனில்லை. சென்னையிலிருந்து சிவநாயகமும் அவசரப்படவேண்டாம். காலந்தாழ்த்தி வெளியிடலாமென விதந்துரைத்தார்.

செப்டெம்பர் 15ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட காமினி மீண்டும் அவ்விடம் அதன் பின் செல்லவில்லை. டிசம்பர் 15ம் திகதி வரைக்கும் நாட்டைவிட்டு பிற தேசங்களில் பிரயாணஞ் செய்தார். யாழ்ப்பாணத்தை விட்டுச் செல்லு முன் புலிகளால் கைது செய்யப்பட்டு நான்கு தினங்கள் சிறைப்படுத்தப்பட்டிருந்தார்.


1988ம் ஆண்டு பெப்ரவரி ஆரம்பத்தில் '' சற்றடே றிவியூ சிறப்பு மலர் '' என்ற இதழொன்றை கொழும்பில் வெளியிட்டார். வெளியீட்டு நிர்வாகத்தினரிடமிருந்து இதற்கு அனுமதி பெறவில்லை. வெளியீட்டின் பின் நிர்வாகி ஒருவரைச் சந்தித்துப் பேசிய போது எமது வெளியீடு யாழ்ப்பாணத்திலிருந்து அச்சிடப்பட்டு வெளிவரவேண்டும் என்பது வற்புறுத்தப்பட்டதுடன் அவர் சொந்த எண்ணத்தில் வெளியிட்டது தவறு என்றும், இனிமேல் அப்படிச் செய்ய வேண்டாம் என்றுங் கூறப்பட்டது. இது 12/2/88 எழுதிய கடிதம் மூலம் ஊர்ஜிதமாயிற்று. யாழ்ப்பாணத்திலிருந்து நிர்வாகி இவ்விதமாகவே காமினிக்குக் கடிதம் எழுதினார். ஆனால் காமினி இன்னோர் இதழையும் கொழும்பில் வெளியிட்டார்.

இதன்பின் வெளியீட்டுக்குப் பொறுப்பானவர்கள் வாழாவிருக்க முடியவில்லை. 19/3/88 அன்று பொது நிர்வாகி ( நீதிமன்றால் நியமிக்கப்பட்டவர் ) பதிவு செய்து கடிதமொன்றை அனுப்பினார். அதில் தவறுகள் செய்யப்பட்டதை குறிப்பிட்டு புத்திமதி, எச்சரிக்கை ஆகியவற்றை மீறி நிருவாகத்தினரின் அனுமதியின்றி கொழும்பில் வெளியிட்டமைக்காக ஆசிரியர் பதவியினின்றும் விலக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இந்திய எதிர்ப்போ, அவர்தம் படைகள் எதிர்ப்போ இந்த விடயத்தில் எவ்விதமும் இடம் பெறவில்லை.

வி. கணபதிப்பிள்ளை
கொழும்பு - 03.

## வாசகர் செ(ற)வ்வடி



## சூரியதீபனின்...

டும் போது அவன் அதை எதிர்த்துப் போரிடுகிறான். அவனது பேனா அவனது ஆயுதமாகிறது.

சூரியதீபன் அவர்கள் பத்திரிகையாளர்களை மிரட்டும் விதத்தில் எழுதியிருப்பது ஒரு அரசியல்வாதியின், அரசாங்கப் பொலிஸின் மிரட்டலைப் போல உள்ளது.

கருத்துக்களுடன் முரண்பாடு இருந்தால் அதை எழுதலாம்; விமர்சிக்கலாம். ஆனால் மிரட்டுவது எந்தவகையான ஜனநாயகம் ?

இத்தகைய மிரட்டல்களுக்கு சரிநிகர் அஞ்சப் போவது கிடையாது. ஏனென்றால், கொழும்பில் சரிநிகர் வெளிவருவது யாருடைய ஜனநாயகப் பிச்சையாலும் அல்ல. பத்திரிகையாளர்களின் பிறப்புரிமை மீதுள்ள - சுதந்திர வெளிப்பாட்டிலுள்ள - உறுதியான பிடிப்பால்.

யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகளை பத்திரிகையாளர்களை அடித்தும் மிரட்டியும் கொன்றும் புலிகள் நிலைநாட்டிய தாம் 'பலமானவர்கள்' என்ற சாதனையை கொழும்பில் 'சூரியதீபனும்' செய்ய நினைத்தால், தாராளமாகச் செய்யட்டும், அதன் மூலம் தாம் பலமானமானவர்தான் என்று அவர் நிரூபிக்கட்டும்.

இலங்கையில் கடைசியாக வெளிவந்த ஒரேயொரு ஜனநாயகக் குரலையும் நசுக்கிய சாதனையாளருக்கான பெயரை அவர் பெற்றுக் கொள்ளலாம்.

ஆனால் சரிநிகர் அழியப் போவதில்லை.

அதுவரும்; நூறுநூறாய்; ஆயிரம் ஆயிரமாய்...

ஒரிரு பத்திரிகையாளர்களின் குடும்பங்கள் தெருவில் நிற்கப் போவதால் பத்திரிகையாளர்களின் ஜனநாயகத்துக்கான குரல் நின்றுவிடப் போவதில்லை. அது உலகம் முழுதும் ஒலித்துக் கொண்டேதான் இருக்கும்!

## புத்தளம் வரலாறும் மரபுகளும்... - சில குறிப்புகள்.




இலங்கை மக்களில் சிலர் தம்மிடம் அராபிய இரத்தமே ஓடுகின்றதென்பர். வேறு சிலர் குமரி வரலாறு கற்பனையெனக் கூறி நகைப்பர். இந் நிலையில் நாம் வாழும் நாட்டில் ஒரு புத்தளத்தான் வரலாற்றின் ''புத்தளத்தைத்'' தோண்டி நம் முன் வைக்கின்றார். அதில் புத்தளம் மக்களின் வாழ்வியற் கோலங்களையும், அக் கோலங்களில் ஒளிவிடும் வாழ்வியற் பண்பினையும், தொன்மையின் சிறப்பினையும் விளக்க முயன்றுள்ளார்.

'' மனித இனத்தின் முதல் உற்பத்திக்குரிய நிலம்- இலங்கை உட்பட்ட குமரிக்கண்டமே என்பது பெறப்படும். இங்கிருந்து பல்கிப் பெருகி(ய) மக்களின் மூலமே; அவர்களின் மொழி - பழக்க வழக்கங்கள் - கலாசாரங்கள், நாகரீகங்கள் உலகின் ஏனைய பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டன. அவர்கள்;' இடம் - காலம் - சூழல் போன்ற தாக்கங்களால் பல்வேறாகப் பிரிந்ததால், ஒன்றுபட்ட சமுதாயத் தன்மை மறைந்து விட்டதென்பதை நாம் சிந்திக்க வேண்டும்'' என ஆசிரியர் குமரி வரலாற்றைத் தெளிவுபடுத்துவதோடு அராபியரும் பூதரும் குமரி மக்கள் வழிவந்தவரே என்பதனையும் கோடிட்டுக் காட்டுகின்றார்.

தெதுறு ஓயா எனப்படும் ஆற்றின் பெயர் 1930ம் ஆண்டில் பிரித்தானிய ஆட்சியில் வெளியிடப்பட்ட இலங்கைப் படத்தில் பஃறுளி ஆறு அனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அயலில் ஓடும் பற்றுளி ஓயாவும் பற்றுளி ஆறு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை பற்றியும் ஆசிரியர் ஆய்வு செய்திருந்தால் குமரித் தகவல்கள் இன்னும் பல கிடைத்திருக்கும்.

''தமிழ் எங்கள் மொழி, இஸ்லாம் எங்கள் வழி'' என்று கூறும் ஒரு செந்தமிழ் ஆசிரியரின் குரல், நாம் அனைவரும் தமிழர்களே என்று நிறுவியுள்ளதையும், அதற்கும் அப்பால் நாம் அனைவரும் ஒரே மூலத்தில் தோன்றிப் படர்ந்த மனிதர்களே எனக் கூறிய செம்மையும் மகிழ்ந்து இன்புறத்தக்கது.

பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடக்குக் கொண்ட நாட்டின் பஃறுளி வளம் செய்த எஞ்சிய நிலமே பொன்பரப்பி உட்பட்ட புத்தளம். அதற்கு பஃறுளி (தெதுறு ஓயா) ஆறே சான்றாகும். இதனையும் குறிப்பிட்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

தமிழர்களின் வழிபாடு - பழக்க வழக்கங்கள், முஸ்லீம் மக்களிடம் அடிநிலைப் பண்பாக அமைந்துள்ளதனையும், தமிழ் மக்களின் தாயத்தாரே அதாவது தாய்வழிப் பரம்பரையினரே, இலங்கை - தென்னிந்திய முஸ்லிம்கள் என்பதனையும் நிறுவியதோடு அராபியத் தொடர்பும்- தமிழ்த் தொடர்பும் பின்னிப் பிணைந்திருந்ததென்பதையும் நூல் ஆசிரியர் விளக்கிக் கூறியுள்ளார். ஆயினும் வாழ்த்துரையில் திரு ந. அன்பழகன் ''புத்தளம் பிரதேசம், பெரும்பான்மையினராக முஸ்லீம்கள் வாழ்வதால் இஸ்லாமிய மதரீதியான கண்ணோட்டத்திலேயே உருவாக்கிவிட்டார். மேலும் வடமேற்குப் பிரதேசம் தமிழர் பிரதேசம் என்பதை உறுதிப் படுத்த மதரீதியான கண்ணோட்டத்தில் எழுதாமல் பொதுப்படையிலான கண்ணோட்டத்திலேயே எழுதப்படவேண்டும் என்பது உண்மை'' என்ற கூற்று சிந்திக்கத் தக்கது.

வரலாற்றாசிரியன் சற் பொருள் தேடலில் ஆர்வமுடையவனாக இருந்தால் ''மதம்'' கடந்த அறிநிலையில் நின்று நோக்குதல் வேண்டும். அத்தகைய வரலாற்றாசிரியர்களை இலங்கையில் மட்டுமல்ல உலகினில் கூட விரல்விட்டு எண்ணிவிடலாம். இந்நூலாசிரியர் தன்னை அத்தகையவரில் ஒருவராக உயர்த்திக் கொள்ளல் வேண்டுமென எல்(ஒளி) ஆன எல்லாம் வல்ல அல்லாவை வேண்டுகின்றேன்.

மொழிவெறி - இனவெறி - மதவெறி கொண்ட இந்நாட்டில் தமிழ் படிக்கத் தெரிந்த அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டிய ஒரு நூல் ''புத்தளம் வரலாறும் மரபுகளும்''.

பண்டிதர்
இணுவையூர் கா. செ. நடராசா
பீ.ஏ (சிறப்பு)

# இலங்கையில் அரசியற்படுகொலைகளும்...

ஒட்டு மொத்தமாகச் சொல்லப் போனால் வட-கிழக்குப் பிரதேசங்களில் அரசினால் முன்னெடுத்துச் செல்லப்பட்ட இனவாத யுத்தமும், அந்த யுத்தத்திற்கு முழுமையான ஆதரவை வழங்கியதோடு இனவாத முரண்பாட்டிற்கான அரசியல் தீர்வை எதிர்த்து நின்ற பேரினவாத சக்திகளுமே இப்படுகொலை அரசியலுக்கு அத்திவாரமிட்ட சக்திகளாகும்.

இப்படுகொலைகளை செய்தவர்கள் யார் என்பதை விட இப்படுகொலைகள் ஏற்படுவதற்கு சாதகமான அரசியல் நிலைமைகளை அவதானத்தில் கொண்டு இவ்வகையான அழிவுகளிலிருந்து நாட்டை மீட்டெடுப்பது எப்படி என்பதே இன்று விடை காணப்பட வேண்டிய முக்கியமான கேள்வியாகும்.

இன்றை நிலையில் இருவிதமான செயற்பாடுகளின் மூலம் நிலைமைகளை சீர்திருத்த முயற்சிக்கலாம்.

ஐக்கிய தேசியக் கட்சியானது ஜனாதிபதி பிரேமதாசாவின் படுகொலையினால் ஏற்பட்ட விபரீதத்திலிருந்து மீண்டு ஆட்சியை நிலைப்படுத்தியுள்ளது. ஜனாதிபதியின் எஞ்சியுள்ள இருபது மாத காலத்தையும் ஆளக் கூடிய விதத்தில் இருக்கின்றது. ஆனால் முன்னைய ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜயவர்தனா, ஆர். பிரேமதாசா போன்று மேலாதிக்கம் செலுத்துகின்ற எதேச்சாதிகாரப் போக்குள்ள தலைமை இல்லாமல் போய் சமநிலையிலான தலைமை ஒன்று ஐ.தே.க அரசுக்குள் உருவாகியுள்ளது.

மறுபுறம், இப்படுகொலைகளின் காரணமாக மக்களின் மனநிலை மேலெழுந்திருப்பதையும், கொலையாளிகளாகத் தமிழர்களைக் கூறுவதை பெரும்பான்மையான சிங்கள மக்கள் நிராகரிக்கின்ற தன்மையையும் காணக் கூடியதாக இருக்கின்றது.

எதிரணிப் பக்கத்தில், இன்று நிலவும் ஜனநாயக விரோத அரசியல் போக்குக்கு மாற்றாக இடதுசாரிக் கட்சிகளினால் மாற்றுத் தீர்வைக் காண முடியாது இருக்கின்றது. ஜனநாயகமயம் என்னும் நோக்கில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி செயற்பட ஆரம்பித்தாலும், அதனுடைய சக்தி, செயற்பாடுகள் இன்னும் தெளிவாகத் தென்பட வில்லை. பிரதான எதிர்க்கட்சியாக விளங்கிய சிறீலங்கா சுதந்திரக் கட்சியானது இன்னும் பேரினவாத மாயைக்குள் சிக்குண்டு, உட்கட்சி மோதல்களுடன் தவித்துக் கொண்டிருப்பதனால் அது ஐ.தே.க. அரசுக்கு ஒரு உடனடி மாற்றுத் தீர்வாக அமைய முடியாது. இந்நிலையில் இந்நாட்டு ஜனநாயக சக்திகளுக்கு இருக்கும் வழிவகைகள் என்ன என்பதை சிந்தித்துச் செயற்படல் வேண்டும். இரண்டு வழிகளில் செயற்படலாம்.

ஒன்று, இப்படுகொலைகளின் மூலம் மேலெழுந்துள்ள சாதகமான நிலைமைகளைப் பயன்படுத்தி இலங்கையின் இனவாத முரண்பாட்டுக்கு ஜனநாயகத் தீர்வு உட்பட மக்களின் அடிப்படை உரிமைகளையும், நீதித்துறைச் சுதந்திரம், வெகுஜனத் தொடர்பு சாதனங்களின் சுதந்திரம், நீதியானதும் நியாயமானதுமான தேர்தல்கள், நிறைவேற்று அதிகாரப் பிரயோகத்திற்கான கட்டுப்பாடு போன்ற அடிப்படை அம்சங்களை உறுதி செய்கின்ற வகையில் பரந்த ஜனநாயக மரபுகளை மீள்விக்கக் கூடிய புதிய அரசியல் மாற்றத்தையும் அதற்குத் தேவையான யாப்பியல் சீர்திருத்தத்தையும் மேற்கொள்ளும் வகையிலும், இனவாத, பிற்போக்குவாத பலாத்கார சக்திகளைத் தோற்கடித்து மிதவாத, ஜனநாயக சக்திகளை வலுப்படுத்துகின்ற வகையில் ஐ.தே.க அரசுக்கு தாக்கத்தை (pressure)ஏற்படுத்தும் வகையில் எல்லா ஜனநாயக சக்திகளும் ஒருங்கிணைந்து வெகுஜனப் போராட்டத்தை ஏற்படுத்தல் வேண்டும்.

இரண்டாவது, முதலாவதாகக் கூறப்பட்ட நடவடிக்கைகள் சாதகமான பலனை அளிக்காவிட்டால், அவ்வரசு உடனடியாக இராஜினாமா செய்வதையும், பிரதம நீதியரசரின் தலைமையில் எல்லா அரசியல் கட்சிகளும், எல்லா இன மக்களும் பிரதிநிதித்துவம் வகிக்கும் வகையிலான பாரபட்சமற்ற காபந்து அரசொன்றை அமைத்து அதன் கீழ் இலங்கையின் பல்லினப் பாங்கையும் அரசியல் பன்முகத் தன்மையையும், பரந்த ஜனநாயக மரபுகளையும் உறுதி செய்கின்ற அரசியல் அமைப்பையும், அரசியல் யாப்பையும் தயார் செய்யக் கூடிய யாப்பியல் சபை (constitutional counsil)ஒன்றை அமைத்து அதன் மூலம் இலங்கைக்கு சாதகமான தீர்வை ஏற்படுத்தும் வகையில் வெகுஜனக் கோரிக்கையை முன் வைத்து போராட வேண்டும்.

எவ்வாறாயினும், இலங்கையில் ஜனநாயகம் நிலை கொள்ள வேண்டுமானால், ஜனநாயகத்திற்கான அர்ப்பணிப்புள்ள மக்கள் சக்திகளை ஒன்றிணைத்து இந்நாட்டிலுள்ள இனவாத, பலாத்கார, ஜனநாயக விரோத சக்திகளை அரசியல் ரீதியாக தோற்கடித்து இலங்கையில் வாழும் பல்வேறு இனங்களினது சமத்துவமும், நீதியும் உறுதிப்படுத்தப்படுகின்ற பரந்த ஜனநாயக வரையறைகளைக் கொண்ட பல்லினப்பாங்கான ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்புவதில் தான் தங்கியிருக்கின்றது.

# ஹெசல்வத்தையிலிருந்து....



உழைப்பாளி ஒருவர் இருந்ததில்லை; அவர் போன்ற சாதனையாளர் இருந்ததில்லை என்று அவரது எதிராளிகள் கூட ஒப்புக் கொள்கின்றனர். ஆனால் அவரது உழைப்பு, அவரது திட்டங்களை அவர் நடைமுறைப்படுத்துவதில் காட்டிய தீவிரம் என்பன, அவற்றுள் புகழ் பெற்ற வீதி அமைப்புகள், வீடு கட்டுதல்கள், ஆடைத் தொழிற்சாலைகள் என்பவற்றை கூர்ந்து கவனிக்கும் ஒருவருக்குத் தெளிவாகத் தெரியும். அவர் திட்டங்களை கூறுவதிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் காட்டிய தீவிரத்தை அவற்றின் பயன்பாடு, ஸ்திரத்தன்மை, எதிர்காலம் என்பவற்றில் ஒருபோதும் காட்டியதில்லை. அவர் கட்டிய பத்து இலட்சம் வீடுகள் விரைவாகக் கட்டப்பட்டனவேயன்றி அவை பயன்பாடு நோக்குடன் கட்டப்பட்டவையா என்பதை திரும்பிப் பார்த்தால் புரிந்து கொள்ளலாம். தயார் நிலைக் கற்களைக் கொண்டு அடுக்கி எழுப்பப்பட்ட அவற்றுக்கு வெள்ளை பூசப்பட்டு வீடு என்று பெயர் சூட்டப்படுவதை இட்டு அவர் ஒருபோதும் அக்கறைப்பட்டதில்லை; அவை தொடர்ந்து பயன்படுகின்றனவா என்பது பற்றி அவர் கவனிப்பதும் இல்லை.

தனது எந்தக் கவர்ச்சித் திட்டமும் நடைமுறையில் பலமாக விளங்குகிறதா என்று அவர் கவனிப்பதும் கிடையாது. அவற்றைப் பார்க்க ஜனாதிபதியோ ரூபவாஹினிக் கமராவோ போவதில்லை.

எதிர்க் கட்சிகளினதும் அவற்றின் தலைவர்களதும் பிழைப்புவாத, நாற்காலி அரசியலின் முன்னால் பிரேமதாசா உழைப்பாளி என்று பெயர் எடுத்ததில் வியப்பில்லைத் தான்!

இறுதியாக, அவர் மறைந்து விட்டார். தன்னை ஒரு அசோகனாக காண முயன்ற அவரது கனவு பலிக்காவிட்டாலும் ஒரு ஜனாதிபதியாகவே மறைய வேண்டும் என்ற விருப்பின்படி அவர் ஜனாதிபதியாகவே மறைந்து விட்டார். சாதாரண மனிதன் ஒருவனாலும் ஆட்சிக்கு வரமுடியும் என்று அடிக்கடி கூறும் இலங்கை 'சனநாயக' வாதிகளின் நடைமுறை உதாரணமாக விளங்கிய அவர், அந்த ஜனநாயகத்தின் போலித்தனத்தைப் புரிந்து கொள்வதற்கான ஒரு நடைமுறை உதாரணமாகவும் இருந்து மறைந்து விட்டார்; இலங்கை அரசியலில் ஒரு தனிச்சக்தியாக தான் மட்டுமே இலங்கையை இயக்குவதாக நம்ப வைத்துக் கொண்டிருந்த அவர், நாட்டில் ஒரு மயிர் கூட மாற்றமடையாமல் இருக்கவிட்டு போய் விட்டார்.

இப்போது அவர் இல்லை.

ஆனால் அது இருக்கிறது.

அவர் மாற்றத்துடன் எல்லாம் மாறும் என்று நினைத்து அவரைக் கொன்றவர்களை, மரணத்தின் போதும் ஏய்த்துவிட்டு அவர் போய் விட்டார்! 'பிரேமதாசா மறைந்தார்; பிரேமதாசா வாழ்க என்ற பழைய மேற்கோளின் புதிய வடிவத்தை எப்போதுதான் புரிந்து கொள்ளப் போகிறோம் நாம்.

## சுதந்திர இலக்கிய விழா - 1993

**சுதந்திர இலக்கிய விழா அமைப்பினர் இவ்வாண்டும் சிறந்த படைப்புக்களைத் தெரிவு செய்து பரிசு வழங்கத் தீர்மானித்துள்ளனர். போட்டிகள் இரு பிரிவாக நடைபெறும்.**

போட்டி:1

1. அச்சில் வெளிவந்த படைப்புகளுக்கான போட்டி:

சிறுகதை, நாவல், கவிதை, மொழிபெயர்ப்பு இலக்கியம் ஆகிய தலைப்புகளில் 1991 ஜனவரிக்கும் - 1992 டிசெம்பருக்கும் இடையில் அச்சில் வெளிவந்த படைப்புக்களாக இருத்தல் வேண்டும்.

போட்டி:2

2. இளம் எழுத்தாளர்களுக்கான போட்டி:

சிறுகதை, கவிதை, பாடல் ஆகிய தலைப்புகளில் இருக்கும் இப்படைப்புக்கள் ஏற்கனவே சஞ்சிகை, பத்திரிகை போன்றனவற்றில் வெளிவந்தனவாகவோ, புதியனவாகவோ இருக்கலாம்.

போட்டிகளுக்கான பொது விதிகள்:

1. இலங்கைப் பிரஜைகளாக இருத்தல் வேண்டும்.
   (வெளிநாடுகளில் வதியும் இலங்கையரும் பங்குபற்றலாம்)
2. வயதெல்லை கிடையாது.
3. ஒருவர் ஒரு போட்டியில் மட்டும் பங்குபற்றலாம்.
4. எத்தனை படைப்புகளை வேண்டுமானாலும் அனுப்பி வைக்கலாம்.
5. நடுவர்களின் தீர்ப்பே முடிவானது.
6. 1993 ஜூலை 31ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

படைப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி:
59 OLD COTTAWA ROAD
MERIGANA
NUGEGODA.

## தலைப்புக்கு மறுப்பு

மார்ச் சரிநிகரில் வெளியான ''முஸ்லீம்களின் அராபியப் பாரம்பரியம் ஒரு கற்பனைச் சகதி'' என்ற கட்டுரையின் தலைப்பு ''முஸ்லீம்களும் அராபியப் பாரம்பரியமும்'' என்றே அதன் ஆசியரால் இடப்பட்டிருந்தது. சரிநிகரால் வழங்கப்பட்ட தலைப்பே ''முஸலீம்களின் அராபியப் பாரம்பரியம் ஒரு கற்பனைச் சகதி'' என்பதாகும். கட்டுரையாசிரியரால் இடப்பட்ட தலைப்பே பொருத்தமாக இருந்திருக்குமென கட்டுரையாளர் தெரிவித்துள்ளார்..

## சோகம் அற்ற தீவு

இலங்கை சோகம் அற்ற தீவு என முன்னர் வந்த யாத்திரீகர்கள் எழுதினர். இப்போது சோகம் உள்ள தீவு. ரயில்வேக் கடவையில் 40 பேர் இறந்த பின்னர் கடவை அமைக்கப்படும். கசிப்புக் குடித்து ஆட்கள் பலர் இறந்த பின்னர் மரண விசாரணை தொடரும். பாதாள மலையில் பலரும் இறந்த பின்னர் '' ஓவர்லோட் '' சட்டம். அமுல் நடாத்தப்படும். இப்படிப் பல. காடு வெட்டிக் குடியேற்றங்கள் உண்டானதன் பிரச்சினையே இன்றைய இனப் பிரச்சினையின் முக்கிய தடைக்கல். ஒரு வருடத்தில் இரண்டு வீதம் காடழிகின்றது எனப் பத்திரிகைகள் அழுகின்றன. இனப் பிரச்சினையால் ஒரு வருடம் எத்தனை வீதம் மனிதன் அழிகின்றான் எனச் சிந்திக்க எவரும் இல்லை. மாங்காய் வடிவமான தீவில் எத்தனை பக்கத்தில் கடல் அலைகள் ஓட்டை போட்டு, வீடுகளையும் நிலங்களையும் கடல் விழுங்குகின்றது! கவலைப்படுவார் யாரும் இல்லை. தமிழ் அரசாங்க மொழியாம்! பிறப்புச் சேட்டிபிக்கற் தமிழில் இருந்தால் ஐரோப்பிய மொழியொன்றில் மொழி பெயர்ப்பு வேண்டுமாம்! பிரசா உரிமை பெறத் தகுதியுள்ள மலையகத் தமிழனுக்கு பிரசா உரிமைச் சான்றிதழ் வேணுமாம்! ஒன்றுமே விளங்கவில்லையே! ஸ்ரீ பிரேம ஜெயம்.

**திக்கவயல் தர்மகுலசிங்கம்**

# தலைநகரில்: இரண்டு தமிழ் நாடகங்கள்

**90**களில் ஆரம்பத்தில் பார்த்த இரண்டு சிங்கள நாடகங்களைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். ஒன்று; தவலபீஷண, மற்றையது; மானஸவிலா.

தவலபீஷண பிரதி ஜேர்மனிய நாடகாசிரியர்: பீரெஃக்டினுடையது. சிங்களத்தில் மொழி பெயர்த்திருந்தார்கள். நெறியாள்கை செய்தவர் சிங்களத்தின் குறிப்பிடத்தக்க நெறியாளர்களுள் ஒருவரான! தர்மசிறி பண்டாரநாயக்கா. தவலபீஷண 90ம் ஆண்டின் சிறந்த நாடகமாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தது எனினும் அரசினால் வழங்கப்பட்ட இப்பரிசை தர்மசிறி பண்டாரநாயக்கா நிராகரித்திருக்கிறார் என்பது வேறுவிடயம். தமக்குத்தாமே மாலைசூட்டிக் கொள்ளும் தமிழ்க் கலையுலகில் இதனைப் புரிந்து கொள்வது சற்றுக் கடினம் தான்.

மற்றையது 'மானஸவிலா' இது ஒரு நாடகமல்ல ஒபேரா (opera) என்கிறார் அதனைதயாரித்த பிறேமசிறி ஹேமதாச. 'குளத்து மீன்களும் கொக்கும்' கதை அற்புதமான ஒபேராவாகி இருந்தது. அவரது இசையில் பாடல்களும், ஆடல்களும் வலுவூட்டின. பாடல்களை சுனில் விஜயசிறிவர்த்தனா எழுதியிருந்தார், மானலவிலா சிறுவர்களுக்கான படைப்பா என்றால் ஓம், இளைஞர்களுக்கானதா? ஓம், ஒரு மதியூகமான அரசியல் படைப்பா ஓம்.

இந்த எல்லா விபரிப்புகளுக்கும் விரிந்து கொடுக்கிற படைப்பு அது. நம்மூர் சங்காரம் தோற்றது போங்கள்.

இந்தப் பின்னணியில் தமிழ்நாடகமொன்றைப் பார்க்க வேண்டும் என்கிற அவா மேலெழுந்தது. கொழும்பு மாநகரின் அவசச் சூழலுள் நேரமொதுக்கி பத்திரிகைக் குறிப்பொன்றில் ஆறுமணிக்கு ஆரம்பமாகும் எனக் குறிப்பிட்டிருந்த நாடகத்திற்கு 5.45க்கே போயிருந்தேன். (எப்போதும் பத்து, பதினைந்து நிமிடங்கள் முந்திப் போவது எனது வழக்கம் காரணம் இரண்டு; ஒன்று, குறித்த நிகழ்ச்சிக்கென்று சென்று நுழைவுச் சீட்டு இல்லையென்று திரும்பி வருவதை என்னால் சகித்துக் கொள்ள முடிவதில்லை. இரண்டு; சினிமா என்றால் கூட அதன் ஆரம்பத்த லைப்புகளை (Titiles) ஒன்றும் விடாமல் பார்த்து விடுகிற மனோபாவம்)

ஆறுமணியாயிற்று, ரீ குடித்து முடிந்தது. ஆறே கால், சிகரெட் பிடித்தாயிற்று, ஆறரை, ஒட்டப்பட்டிருந்த சிங்கள நாடகங்களுக்கான போஸ்டர்களை எனக்குத் தெரிந்த அரைகுறைச் சிங்களத்தில் வாசித்தாயிற்று. ஆறேமுக்கால் நாடகம் ஆரம்பமாக இருப்பதாக அடிக்கடி அறிவிப்பு ஒலித்தது. யாரோ ஒருவர் நாடகம் பற்றி மைக்கைப் பற்றியபடி அறுஅறென்று அறுத்தார். உள்ளுக்குள்ளிருந்து இன்னொருவர் சைகை காட்டினார் போதுமென்று - கொஞ்சம் நாகரீகம் தெரிந்த மனிதனாக இருக்கக் கூடும்.

ஒருபடியாக நாடகம் ஆரம்பித்தது. ஆரம்பிக்க முதல் பின்னால் இருக்கும் ரசிகப்பெருமக்களை முன்னால் வந்தமரும்படி ஒருவர் ஒலிபெருக்கியில் கத்தினார். பின்னால் திரும்பிப் பார்த்தேன் எனக்குப் பின்னால் ஒருவரும் இல்லை. பிறகு தர்ன் புரிந்தது என்னைத் தான் ரசிகப் பெருமக்கள் என்று சொல்கிறார் என்று. முன்னால் வந்தமர்ந்தேன், மொத்தம் பார்வையாளர்கள் ஐம்பதுக்குள் தான்.

பதினைந்து இருபது நிமிடங்கள் போயிருக்கும். திடீரென நாடகம் இடைநிறுத்தப்பட்டது. மண்டப விளக்குகள் எல்லாம் ஒளியைக் கக்கின. மேடையில் ஆசனங்கள் போடப்பட்டன. அமைச்சர் வந்தார், மேடை மீதமர்ந்தார். கூட வே கொஞ்சம் வாலில்லாத வால்கள். அமைச்சர் நாடகத்தை வளர்க்கப் பேசினார், நாடகத்தை வளர்த்ததற்காகப் பேசினார். பொன்னாடை போர்த்தினார். பொற்கிளி வழங்கினார். அமைச்சரால் போர்த்தப்பட்டவர்கள் திரும்ப அமைச்சருக்குப் போர்த்தினர். மண்டபத்துக்கு குளிரூட்டி பூட்டியிருந்தார்கள். எனக்கோ உள்ளுக்குள் அவிந்தது. நான் வெளியே போனேன்.



இன்றைக்கு இந்த குறிப்பெழுதிக் கொண்டிருக்கும் வரை அந்த நாடகத்தைப் பற்றி எனக்கெதுவும் தெரியாது தெரிந்து கொள்ள நான் அக்கறைப்படப் போவதுமில்லை.

கொழும்பின் இந்தவாறான தமிழ்நாடகச் சூழலில் தான் ஏப்ரல் 24ந் திகதி மாலை 6.30 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் இரு தமிழ் நாடகங்களை புதிய நாடகக் குழுவான 'அரங்காடிகள்' அரங்கேற்றினார்கள்.

ஒன்று இப்போதைக்கேது வழி
இரண்டாவது அபசுரம்

இப்போதைக் கேது வழி குழந்தை ம.சண்முகலிங்கத்தின் பிரதி. ஒரு பாடசாலை நாடகத்திற்குரிய நேர, கால, விடயத்தோடு இப்பிரதி எழுதப்பட்டிருக்கிறது. அவரது பிரதிகளில் காணப்படும் வழமையான குறைகளோடும், நிறைகளோடும் இப்பிரதியும் இருக்கிறது. அவருடைய பிரதிகளின் இறுதியிலே காணப்படும் 'பிரச்சாரம் சற்றுத் தூக்கலான' அம்சம் இதிலும் இல்லாமலில்லை. வசந்தன் தான் குடிக்கவோ துூள் அடிக்கவோ மாட்டேன் என்று பிரதிக்ஞை செய்யும் இறுதிக் காட்சிகளில் இது சற்று வெளிப்படையாகத் தெரிகிறது.

மறுபுறத்தில் குழந்தையின் பலம்; நமது தமிழ்ச் சமூகத்தின் நாடியைச் சரியாகப் பிடித்து வைத்திருப்பதில் தங்கியிருக்கிறது. அவர் நாடகத்தின் இறுதியில் சாகடிப்பது குடிகாரனையோ, தூளடிப்பவனையோ அல்ல. மாறாக எந்நேரமும் படிபடி என்று பிள்ளைகளை அதட்டுகிற, வெள்ளைக்காற் சட்டை உத்தியோகத்திலும், அதன் பவிசிலும் தன் பெருமையைக் காண விழைகிற தந்தையைத் தான் அவர் சாகடிக்கிறார். இதனூடாக எல்லாவற்றையும் விட இந்தப் போதை மிக மோசமானது என்கிறார் குழந்தை.

இந்தப் பிரதியை நெறியாள்கை செய்திருப்பவர் அ.ரவி. பார்வையாளரின் பார்வைப் புலனை வசப்படுத்தும் அம்சம் வலுவாக இருந்தது இந்த நாடகத்தில். நாடகத்தின் வேகம் பார்வையாளனைக் தன் பின்னால் இழுத்துக் கொண்டு போயிற்று.

கணபதிப்பிள்ளையின் நடிப்புக்கும் மற்றவர்களின் நடிப்புக்கும் இடையிலிருந்த இடைவெளி பார்வையாளரின் கவனம் முழுவதையும் கணபதிப்பிள்ளையில் குவிக்க ஏதுவாயிற்று. நெறியாளர் இந்த இடத்தில் சற்று அவதானமாயிருந்திருக்க வேண்டும். (தமிழ் சினிமா உலகில் சிவாஜியைப் போன்ற நல்ல ஒரு நடிகன் வேறெவருமில்லை. ஆனால் அவரது மிகைக நடிப்பை நெறிப்படுத்தக் கூடிய ஒரு நெறியாளரும் தமிழ் சினிமா உலகில் இல்லாதது மிகத் துரதிஷ்டம். நெறிப்படுத்தப்பட்ட நடிப்பை பார்க்க விரும்பினால் தற்போது கொழும்பு திரையரங்குகளில் ஓடிக் கொண்டிருக்கும் 'குருகெதர' என்கிற சிங்களப் படத்தைப் பார்க்கவும். தனக்குள்ளே விகாரப்பட்டுப் போன, வெளித்தோற்றத்தில் ஒழுங்கும், கண்ணியமும், கட்டையுமுள்ள பாடசாலைத் தலைமையாசிரியராக அசோக் பீரிஸ் மிக அற்புதமாக நடித்திருக்கிறார்).

செல்லத்தின் பேச்சோசை ஏன் ***'புதியதொரு வீடு கண்ணாத்தையை'*** ஞாபகமூட்டுகிறது என்பது எனக்கு புரியவில்லை. இசைக்கு என்ன நடந்தது? இசை பல இடங்களில் தமிழ் சினிமாப் படங்களின் பின்னணி இசையை ஞாபகமூட்டியது. இசை ஈழத்தின் பழம்பெரும் இசையமைப்பாளர் எஸ்.கே பரராஜசிங்கம் என்று குறிப்பிட்டிந்தார்கள். பழம்பெரும் நதிகள் எல்லாம் வற்றிவருவது போல - அண்மையில் கதிர்காமம் போயிருந்தேன். மாணிக்க கங்கையில் நீர் இல்லை. மணல் நிறைந்திருந்தது – அவரது இசையருவியும் வற்றிற்றோ என்னவோ?

மொத்தத்தில் நெறியாளர் பிரதியை ஒப்புவித்துள்ளார்; சிறப்பாக ஆனால் அதற்கப்பாலும் அவர் வளர வேண்டும், வளர்க்க வேண்டும்.

மற்றறையது அபசுரம் இந்தப் பிரதியை எழுதியிருப்பவர் நா.சுந்தரலிங்கம் 1968 இல் முதலில் மேடையேறியது இப்போது அரங்காடிகள் மேடையேற்றி இருக்கிறார்கள். தமிழில் வெளிவந்த ஒரேயொரு அபத்த வகை நாடகம் இது பிரதியைப் பொறுத்தவரை மிகவும் காத்திரமான பிரதி. இதன் உயிர் நாடி வசனம் என்றால் கூட மிகையில்லை

பொதுவர் பாத்திரத்தை ஏள வாங்கி நடிந்திருந்தார். அரசியல்வாதியின் தன்மை அருளரில் இன்னமும் வந்திருக்க வேண்டும். தியாகர் வெறும் சிரிப்பு நடிகர் என்ற இடத்திற்குப் போய்விட்டது. அந்தப் பாத்திரத்தின் அர்த்தப்பாட்டைக் குறைத்து விட்டது. புரொபசர் முதலில் நடித்தார், பிறகு படித்தார். சிவாயர் நடிக்க முயன்றிருக்கிறார்.

மேடை சரியாகப் பயன்படுத்தப் பட்டிருக்க வில்லை. சில கர்ட்சிகளில் மேடையின் ஒரு பகுதி வெறுமையாகக் காணப்படுகிறது இன்னும் சில இடங்களில் நடிகர்கள் நின்ற நிலையில் வசனத்தை மாறி மாறிப் பேசுகின்றனர். அசைவுகள் அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

நான் நாடகத்தில் மிகவும் ரசித்த ஒரு காட்சி சிவாயர் மின்விசிறியை மறைத்துக் கொண்டு கடதாசிகளை ஸ்ரூலில் வைத்து விட்டு அது பறக்காமலிருக்க தன்னுடைய குருவினுடைய அற்புதம் அது என்கிற நினைப்பில் இறுமாப்புடன் நிமிர்ந்து பார்க்கிறாரே அது மிக அற்புதமாகத் தான் இருந்தது.

இந்த நாடகத்தில் நெறியாள்கைக்குப் பதிலாக ஒத்திகை மேற்பார்வை சோ.தேவராஜா என்று போட்டிருந்தார்கள் ஏனென்று புரியவில்லை பின்னர் விசாரித்ததில் "இந்நாடகத்தில் நான் முன்னர் நடித்திருந்தேன் அதையே நான் மீளவும் இப்போ செய்கிறேன். இதில் என்னுடைய நெறியாள்கை என்று குறிப்பிடக்கூடியதாக எதுவுமில்லை. நான் வெறும் ஒத்திகை மேற்பார்வையாளனே" என்ற தன்னடக்கத்துடன் குறிப்பிட்டிருக்கிறார். திருடிவிட்டே எனதுபடைப்பு என்று முத்திரை குத்துகிற உலகில் ஒரு நல்ல மனிதர், ஒரு நல்ல நெறியாளராக வர வேண்டும் என்பது எனது அவா.

இந்நாடகத்திற்கும் இசை குறித்தும், ஒளியமைப்ப குறித்தும் கவனத்திற் கொள்வது நல்லது.

அருபன்

கொழும்புச் செட்டியார்களின் கோலாகலமான கல்யாணத்திற்காகக் கட்டப்பட்ட கல்யாண மண்டபத்தை ஒலி, ஒளி, , சாயிபாபா பஜனை போன்ற நிகழ்ச்சிகளைத் தவிர அவ்வப்போது, நன்நோக்குடன் செயற்படும் அரங்காடிகள் போன்ற அமைப்புகளுக்கு பத்தாயிரம் ரூபா நாள் வாடகையில் கொடுத்துதவுவது புண்ணியம் தான். இந்தப் புண்ணியத்தில்தான் கொழும்புதமிழ்நாடக உலகு தங்கியிருப்பது தான் துரதிர்ஷ்டம். →





**சேரன்**

# கேள்வி

நிலவு கிழிந்து தூங்குகிறது
வேலியில்.
நள் யாமம்;
உதிர்ந்து கொண்டிருக்கும் இலைகளின் மேல்
நடந்து திரிகின்றனர்
உயிர் திருகும் எம தூதர்.

அடிவளவின் கிணற்றுக்குள்
காலம் காலமாகப் புதையுண்டு கிடந்த
பூதங்களும்
இப்போது சிலிர்த்துக் கொண்டு
கிளம்புகின்றன.

துயிலில் தொலையாது
துயரில் கரையும் இன்றைய இரவில்
இதயத்தைப் பிடுங்கி
மேசை மீது வைத்து விடுகிறேன்
குருதி சொட்டச் சொட்டப்
பெருகும் அதன் ஒலிக் குமுறலில்
கொஞ்ச நேரம் நடுங்குகிறது மேசை...

வெளியுலகின் காற்று வாங்கிக்
குளிர்ந்து போய்விடுகிறது இதயம்

அப்போது,
விட்ட இடத்திலிருந்து என்னுடைய
கவிதையைத் தொடங்குகிறேன்

இன்றையைப் போல
என்றைக்கும் ஒரு கவிதைக்காக
நான் உழன்றது கிடையாது
வெளியில்
நெடு நாளாய் அலைந்தது இக் கவிதை

அதனுடைய ஆரம்பமே
ஒரு கேள்விதான்.
கொல்லப்பட்ட நண்பர்களைப் பற்றி
காணாமல் போன நண்பர்களைப் பற்றிய
ஒரு பெரிய கேள்வி அது.

கேள்வியில் பிறப் பெடுத்த
இந்தக் கவிதை
திடீரென்று என்னை விட்டுப் பிரிந்து செல்கிறது
நெய்யப்படாத வார்த்தைகளுடன்
அறிவால் நெறிப்படுத்தப் படாத
மிகையுணர்ச்சியும் சேர்ந்து
பிரவாகம் எடுக்க
இந்தக் கவிதை பிரிந்து செல்கிறது...

பௌர்ணமி நிலவிலும்
ஒளி தேயாமல் இருளில் கிடக்கிற
அந்த மாடி வீட்டைச் சுற்றிச் சுற்றி வருகிறது..
இறுகப் பூட்டப்பட்டிருக்கும்
அதனுடைய பழங்காலக் கதவின் மீது
மூர்க்கமாக மோதுகிறது
இறுகிய யன்னல்களுக்கு அருகே சென்று
உன்னிப்பாகக் கேட்கிறது...

வெளிச் சுவரில் தெறித்திருக்கும்
குருதிச் சுவட்டருகில் நின்று உருகுகிறது...
வீட்டின் வெளிப்புறம்
ஓங்கிய மரங்களில்
இன்னும் ஒட்டிக் கொண்டிருக்கும்
அவலக் குரல்களில் தேடுகிறது
இரவுகளில்
கடற்கரையில் காலடிச் சுவடுகளைப்
பின் தொடர்ந்து செல்கிறது
தாழம் புதர்களுள் ஒளிந்திருந்து
குருதியில் நனைகிறது..

அலைகளுக்கு மேல் அலைகிறது
அவை புரட்டி விடும் உடல்களைத்
திருப்பித் திருப்பித் தேடுகிறது

கண்கள் இல்லா உடல்களுக்குக்
கண்களையும்
முகம் சிதைந்த உடல்களுக்கு
முகங்களையும் தேடிச் சினக்கிறது...

தெருவில் வீசப்பட்டுள்ள
ஒற்றைச் செருப்பின் மீது
வீட்டுப் படிகளில் வீசியெறியப்பட்ட
மூக்குக் கண்ணாடி மீது
தெரு முனையில் புரட்டி விடப்பட்ட
மோட்டார் சைக்கிளின் மீது
தயங்கித் தயங்கித் நிற்கிறது

தகப்பன் தொலைந்த பிறகு
பிறந்த குழந்தைகளின்
பளிங்கு போன்ற விழிகளில்
எதிரொலிப்பது என்ன என்று தெரியாமல்
குழம்புகிறது...
தாய்மாரின் கண்ணீர்த் துளிகளை
ஏந்திக் கொண்டு செல்கையில்
தலை குப்புற வீழ்கிறது


தூக்கு மரங்களின் கீழ்,
புதை குழிகளின் மேல்,
முகாம்களின் கோடிப்புறங்களில்,
மேசைமீது இப்போதும்
அப்போது போலவே கிடக்கும்
மூடப்படாத பேனையருகில்,
முற்றுப் பெறாத கடித வரிகளில்

சுவரில் தூங்கும் படங்களில்
அறையில் சிந்தியிருக்கும் ஆடைகளில்
பூவாத பூவரசுகளில்
ஈரப் பனையில்
ஓரக் கூந்தலின் ஒற்றை மலரில்

நின்று பம்பரம் போலச் சுழல்கிறது...

காற்றிலும் வெளியிலும்
மூடப்பட்ட எல்லி இரும்புக் கதவுகளிலும்
புகை கசியும் எல்லாத் துப்பாக்கிகளிலும்
அறைந்து கேட்கிறது

எங்கள் குழந்தைகளுக்கு என்ன நடந்தது?



ஏப்ரல் - 11 காலையில் தினகரனைப் புரட்டிக் கொண்டிருந்தேன். 'புல்லட் பொக்ஸை' கண்கள் மேய்ந்தன. சரிநிகர் புலி ஆதரவுப் பத்திரிகை என்று சூரியதீபன் கண்டு பிடித்திருந்தார். கொலம்பஸ் இந்தியாவைக் கண்டுபிடித்தாகக் கூறியது மாதிரி. (அவர் கண்டு பிடித்தது இந்தியாவை அல்ல அமெரிக்காவை என்பது ஒரு விடயம், இரண்டாவது அவரது கண்டு பிடிப்பின் நோக்கம் வெறுமனே புதிய நாடுகளைக் காண்பது என்பது அங்கிருந்து சுரண்டிக் கொண்டு போவது தான்).

என்ன செய்வது? இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது திம்புவிலிருந்து பாராளுமன்றத் தெரிவுக் குழுவரை வந்து சேர்ந்திருக்கிறது. உலக்கை தேய்ந்து உளிப்படியான மாதிரி. இந்தச் சூழலில் தமிழ் மக்களுடைய குரலாக ஒலித்தால் புலிசார்பு என்று முத்திரை குத்தி விடுவதில் ஒன்றும் வியப்பில்லை .மக்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு என்பதற்குப் பதிலாக அமைப்புக்களின் நலன்களுக்குத் தீர்வு என ஒவ்வொரு தலைமையும் நினைக்கிறது. 'தலைமையின் தவறுகளை மக்கள் இப்போது சுமக்கிறார்கள்; தாங்க மும ாச போது புதிய வரலாற்றுப் பக்கங்களை எழுதுவார்கள்' என்று எங்கோ படித்த ஞாபகம்.

ஏப்ரல் 18: இந்த வாரமும் சரிநிகரைத் தாக்கியிருக்கிறார் சூரியதீபன் புலிசார்புப் பத்திரிகை என்ற முத்திரை குத்தலை யாரும் நம்பாததால் கோபம் மூக்குவரை போயிருக்கிறது போலிருக்கிறது. இம்முறை இலக்கை மாற்றியிருக்கிறார். அன்னபூரணா மீது கொடுக்கப்படும் காட்டப்படும், புரியும், தகரும் என்கிற மிரட்டுகிற வார்த்தைகளில் கோபம் கொப்பளிக்கிறது.

அன்னபூரணா அவரையோ அவரது சகபாடிகளைப் பற்றியோ இது வரை எதுவும் எழுதியதாக இல்லை. வரலாற்றில் இவர்களுடைய 'புரூட்டஸ்' பாத்திரமும் வந்து விடுமோ என்கிற பயம் போலும். சூரியதீபனார் முன்னர் கனவுக் கட்சியிலிருந்தவர், இப்போ அவரது கனவு பச்சையானதில் உல்லாசமாயிருக்கிறார் என்று எழுதினோமா? இல்லையே.

சரி, மற்றப்பக்கத்தில் பத்திரிகைச் சதந்திரம் பூரணமாக உள்ளதாக எல்லா தொடர்பு சாதனங்களும் வாய்கிழியக் கத்துகிற ஐ.தே.க ஆட்சிக் காலத்தில் அதன் அரசு சார்புப் பத்திரிகையில் இவ்வாறு வெளிப்படையாக மிரட்டல் வருவதென்றால்... என்று யோசிக்கிறீர்களா?

தவறு எங்கள் பக்கத்தில் தான், விளங்கிக் கொண்டதில் தவறு. அவர்கள் ப.சுதந்திரம் இருக்கிறது என்று சொன்னார்கள். கூடவே அவர்களுக்கும், அவர்கள் சார்ந்தவர்களுக்கும், குறிப்பாக அதிகாரத்தை கையில் வைத்திருப்பவர்களுக்கும் என்று நீங்கள் தான் விளங்கிக்



கொள்ள வேண்டும். இனி, அவர்கள் சொல்வார்கள், நீங்கள் கேட்பீர்கள். அவர்கள் மேய்ப்பர்கள். நீங்கள் மந்தைகள் எப்போது அவர்கள் மேய்ப்பர்கள் ஆனார்கள் என்று கேட்கிறீர்களா?

அவர்களிடம் தான் கேளுங்களேன்.

மே 19: யாழ்ப்பாணத்தில் தில்லையைப் புலிகள் கொன்றிருக்கிறார்கள் என்றொரு தகவல். தில்லை, செல்வி, மனோ, டொமினிக் என்று புலிகளின் சிறையிலிருப்பவர் பட்டியல் மிகப் பெரிது. சிறைபிடிக்கப்பட்டு வருடங்களும் இரண்டுக்கு அதிகம்.

இப்போ, தில்லையின் வீட்டிற்கு மே 7ம் திகதி சென்று தாம் அவருக்கு மரணதண்டனை வழங்கியதாகக் கூறி அவரது உடைகளைக் கொடுத்திருக்கிறார்கள்.

மக்களின் நலன்கள் குறித்து இதயசுத்தியோடு செயற்படுவர்கள் துரோசிகளாக்கப்படுவதும், துப்பாக்கிக் குண்டுகள் பரிசளிக்கப்படுவதும் வரலாற்றில் புதிய விடயங்கள் அல்ல.

மனித விழுமியங்களின் இறுதித் துளியும் சிந்தி விழுகிற இந்தச் சூழலில் ஒரு கொலை சாதாரணமாகவே நடந்து விட்டிருக்கிறது. எந்தச் சலசலப்புமில்லாமல்.



## தலைநகரில்...

அடுதத முறை அரங்காடிகள நாடகத்திற்கான ஓர் அரங்கைத் தேடுவது நல்லது. ஏனெனில் நாடகத்தின் ஒலி, ஒளி பிசிறல்களுக்கு அரங்கும் ஒரு காரணம்.

அரங்காடிகள் ஒரு புதிய அமைப்பு பெரும்பாலானவர்கள். புதியவர்கள் மிகுந்த பிரயாசையுடன் இரண்டு நாடகங்களை மேடையேற்றியிருக்கிறார்கள். மேற் சொன்ன குறைபாடுகளுக்கு மத்தியிலும் இந்தச் சாதனை மதிக்கப்பட வேண்டியது தான்.

தலை நகரில் நல்ல தமிழ் நாடங்களுக்கான ஆரம்பம் இது.





முகவரி
மாற்றத்தைக்
கவனியுங்கள்!

சரிநிகர்
இல 18/2 அலோ சாலை,
கொழும்பு 3.
தொலைபேசி: 576704

காசோலை காசுக்கட்டளை தபாற்கட்டளையை
MIRJE, 18/2 ALOE AVENUE, COLOMBO 03
என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சரிநிகர்





## எதிர்க் கட்சியின் பலவீனத்தின் மீது

# யு. என். பியின் அரசியல் வெற்றி

இரண்டு படுகொலைகளைக் காரணம் காட்டி எங்கே அரசு தேர்தலை நடத்தாமல் இரத்துச் செய்து விடுமோ அல்லது ஒத்திப் போட்டு விடுமோ, ஜனநாயகப் பாரம்பரியத்தையே சிதைத்து விடுமோ என்றெல்லாம் எதிர்க் கட்சிகள் பயந்ததற்கு மாறாக, வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏழு மாகாணங்களிலும் தேர்தலை நடாத்தி முடித்திருக்கிறது அரசு; ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக.

நடந்து முடிந்த தேர்தல்களில் ஆறு மாகாணங்களில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. மேல் மாகாண சபையை மட்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி கைப்பற்றியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாற்றீடு எனக் கருதப்பட்ட ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி வெறும் 53 இடங்களை மட்டுமே பெற்று மூன்றாவது நிலையில் உள்ளது.

தென் மாகாணத்திலும், வடமேல் மாகாணத்திலும் பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் கூட்டுச் சேர்வதனூடாக ஆட்சியைக் கைப்பற்றுதல் இயலும். ஆக மூன்று மாகாண சபைகள் எதிர்க் கட்சிகளிடம் போகும். ஏனைய நான்கிலும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியமைக்கும்.

ஏழு மாகாணங்களிலும் தாமே ஆட்சியமைப்போம் என மும்முனைப் போட்டியில் ஈடுபட்ட மூன்று கட்சிகளும் கூறினாலும் ஆறு மாகாண சபைகளையும் ஐக்கிய தேசியக் கட்சி கைப்பற்றும் படியாக எதிர்க் கட்சிகள் தோல்வியடைந்திருக்கின்றன. குறிப்பாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியால் அதன் தலைவரையே வேட்பாளராக நிறுத்திய மேல் மாகாணத்திலோ, அல்லது காமினி போட்டியிட்ட மத்திய மாகாணத்திலோ அல்லது பிரேமச்சந்திரா போட்டியிட்ட வடமேல் மாகாணத்திலோ கூட வெற்றியைத் தமதாக்கிக் கொள்ள முடியாமற் போயிருக்கிறது.

எதிரணிகள் இவ்வாறு தோல்வியைத் தழுவக் காரணம் என்ன? ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றி அதற்கும் அதன் கொள்கைகளுக்கும் கிடைத்த வெற்றி. மக்கள் ஐக்கிய தேசியக் கட்சியை அதன் கொள்கைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்; ஜனாதிபதி பிரேமதாசாவையும் அவரது நிறைவேற்று அதிகார ஜனாதிபதித்துவ முறைமையையும் அங்கீகரித்திருக்கிறார்கள் என்று சொல்லலாமா என்று கேட்டால் எதிர்க் கட்சியினர் 'இல்லை' என்றுதான் பதிலளிப்பார்கள். மக்களுக்கு ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி மீது அதிருப்தி இருந்தது. மக்கள் மாற்று அரசு ஒன்றை அமைக்க விரும்பினார்கள். தீர்வு காணப்படாத வடகிழக்குப் பிரச்சினையும், தொடரும் யுத்தமும், அதி

- அநாமிகா -

கரித்த யுத்தச் செலவும் உயரும் வாழ்க்கைச் செலவும் அதிருப்தியை உண்டாக்கின. தாராள மயமாக்கலும், திறந்த பொருளாதாரமும் அவர்களது கொள்வனவு ஆற்றலைக் குறைத்தது. குறைந்த விலைக்குத் தமது உழைப்பை விற்றார்கள். கூடிய விலை கொடுத்து அத்தியாவசியப் பொருட்களை வாங்கினார்கள். அவர்களால் வாழ்க்கையைச் சுமக்க முடியவில்லை. அதிருப்தி இந்தவாறாக இருந்தும் எதிர்கட்சிகளால் ஆட்சியமைக்க முடியவில்லை. ஏன்?



ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலை. அதில் உருவான உணர்ச்சி அலை; அனுதாபம் என்றும், அரசியல் தலைவர்களின் கொலைகளால் திட்டமிட்டபடி தமது தேர்தல் பிரச்சாரத்தை மேற்கொள்ள முடியவில்லை என்றும், எதிர்க் கட்சிகள் தொடர்பு சாதனங்களைப் ( ரூபவாஹினி, வானொலி ) பயன்படுத்த அரசு அனுமதி வழங்கவில்லை என்றும் கூறக் கூடும்.

உண்மை தான், தொலைக் காட்சியையும், வானொலியையும் பயன்படுத்த அரசாங்கம் அனுமதிக்கவில்லை என்பதும், ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலையால் ஏற்பட்ட அனுதாப அலையைத் தமது வெற்றிக்குச் சாதகமாகப் பயன்படுத்தியது என்பதும் (இதில் ரூபவாஹினியினதும், வானொலியினதும் பங்கு மிக அதிகம்) ஆனால், மறுபுறத்தே லலித் அத்துலத் முதலி கொல்லப்பட்டதன் விளைவாக எழுந்த அனுதாப அலை என்னவாயிற்று. அது ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கு உதவவில்லையா?

இங்குதான் இந்தப் படுகொலைகள், அதன் உணர்வலைகள் தொடர்புசாதன பலமின்மை என்பவற்றிற்கும் அப்பால் சென்று ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிராக இந்த எதிர்க்கட்சிகள் வைத்த மாற்று என்ன என்கிற விடயத்தைச் சிறிது அலச வேண்டியிருக்கிறது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியினர் முன்னர் ஐ.தே.கட்சியில் இருந்தவர்கள். அவர்கள் கட்சியில் இருந்த காலத்திலேயே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஜே.ஆர் கொண்டு வந்தார். 89இல் ஜனாதிபதி வேட்பாளராக பிரேமதாசாவைக் காமினியும், லலித்துமே தெரிவு செய்திருந்தனர்.

77இல் அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையை, அதனூடாக நாடு சுரண்டப்படுவதை இவர்கள் எதிர்க்கவில்லை. பொருளாதாரக் கொள்கையின் அடிநாதமாக தனியார் மயப்படுத்தல் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மானியங்கள் படிப்படியாகக் குறைக்கப்பட்டன. பாதுகாப்புச் செலவீனம் அதிகரித்தது. வேலையின்மை, வறுமை என்பன வளர்ந்தன. அதிருப்தி வளர்ந்தது. அரசுக்கெதிரான ஆயுதப்புரட்சியாக அது வெடித்தது. வடகிழக்கில் இன ஒடுக்குமுறையால் ஆயுதக் குழுக்கள் உருவாகின. தெற்கில் ஜே.வி.பி.உருவாகியது. நாடு இரத்தக் காடாகியது. இவ்வளவும் ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில் நடந்தது. முன்னர் ஜே.ஆரும், பின்னர் பிரேமதாசாவும் ஜனாதிபதியாயிருந்தார்கள். காமினியும், லலித்தும் அமைச்சரவையிலிருந்தார்கள்.

தன்னுடைய அதிகாரத்திற்கு தடையாக இவர்கள் இருவரும் இருப்பார்கள் என உணர்ந்த பிரேமதாசா இவர்களை ஒதுக்கத் தொடங்கிய போது தான் பிரச்சினை வந்தது. இம்பீச்மென்ற் வந்தது. இவர்கள் பிரேமதாசாவை ஒதுக்கி விட்டு ஐ.தே.கட்சியை கைப்பற்றப் பார்த்தார்கள். அவர் இவர்களை ஒதுக்கி விட்டு கைப்பற்ற முயன்றார். இந்த மோதலில் இவர்கள் வெளியேற்றப்பட அவர் வென்றார். இவர்கள் வெளியில் வந்து பிரேமதாசா இல்லாத ஐ.தே.கட்சியை உருவாக்கினார்கள்.

அதுதான் ஜ.ஐ.தே.முன்னணி. அந்த ஜனநாயகம் மக்களுக்கானதல்ல. அது அவர்களுக்கு மட்டும், அவர்கள் ஆட்சியிலிருந்து சுரண்டுவதற்கு மட்டுமானது.

ஐ.தே.கட்சிக்கு மாற்றான கொள்கை எதனையும் அவர்கள் முன்வைக்கவில்லை. பிரச்சாரம் செய்யவில்லை. மக்களிடம் எடுத்துச் செல்லவில்லை. திறந்த பொருளாதாரக் கொள்கை பற்றியோ, தாராள மயமாக்கல் பற்றியோ எதுவும் பேசவில்லை. மேடையில் நின்று, கூட்டத்திலிருந்த இளைஞனை அழைத்து "நீ எதுவரை படித்திருக்கிறாய்", "பத்து" "பரவாயில்லை பிரேமதாசாவை விடக் கூடப் படித்திருக்கிறாய்" என்கிறது தான் மாற்றாக இருந்தது.

ஆக, ஜ.ஐ.தே.முன்னணியினர் பிரேமதாசா இல்லாத ஐ.தே.கட்சியை உருவாக்க முனைந்தனர். இவர்களின் பின்னால் வந்தவர்கள் எல்லாம் பிரேமதாசாவின் படுகொலைக்குப் பிறகு ஐ.தே.கட்சிக்கே வாக்களித்திருக்கிறார்கள். அந்த ஐ.தே.கவை இறக்கி இந்த ஐ.தே.கவை ஏற்றிச் சிரமப்படுவதற்குப் பதிலாக அதுவே தொடர்ந்திருப்பது இலகு என்று.

ஐ.தே.கட்சியில் எவ்வாறு பிரேமதாசாவைச் சுற்றி கட்சி கட்டப்பட்டிருந்ததோ அவ்வாறே ஜ.ஐ.தே. முன்னணியில் லலித்தைச் சுற்றி உருவாக்கப்பட்டிருந்தது. லலித் தான் சிங்களத் தேசியத்தின் இன்னொரு வீரபுரன் அப்புவாக சித்தரிக்கப்பட்டிருந்தார் என்பதும் அவரது கொலையுடன் அது வெற்றிடமாகிப் போனதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

* * * *

* * * * * * *

ஸ்ரீ.ல.சு.கட்சி தலைமையிலான கூட்டும் தோல்வியைத் தழுவியதற்கு ஏறத்தாழ இதே காரணங்களே இருந்தன. திறந்த பொருளாதாரக் கொள்கையைக் கைவிட்டு முன்னைய 70களுக்குப் போக அவர்கள் தயாரில்லை. அது அவர்களால் முடியவும் முடியாது. தனியார் மயமாக்கல் பற்றி திட்டவட்டமாக எதுவும் சொல்ல அவர்களால் முடியவில்லை. ஆட்சிக்கு வந்தால் நாட்டை சுபீட்சமாக்குவோம் என்று மட்டுமே சொல்ல முடிந்தது. சந்திரனிலிருந்து அரசி கொண்டு வந்த கதையாகவே மக்கள் இதையும் பார்த்தனர். நம்பத் தயாராகவில்லை.

ஜனாதிபதி ஆட்சியை ஒழித்து பாராளுமன்ற ஆட்சியை உருவாக்குவதே அவர்களுடைய மாற்றாக இருந்தது. ஜ.ஐ.தே.முன்னணியினரும் இதைத்தான் சொன்னார்கள். பாராளுமன்ற ஆட்சிமுறை வந்தவுடன் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்து விடும் என்பதை மக்கள் நம்பவில்லை. அவர்களுக்கு அனுபவம் இருந்தது. அனுபவத்திலிருந்து கற்றிருந்தார்கள்.

70இல் ஐ.தே.கட்சி தோற்கடிக்கப்பட்டதும் மீளவும் ஆட்சியமைக்கும் நோக்குடன் ஐ.தே.கட்சியினர் மாற்றுத் திட்டம் ஒன்றைத் தயாரித்தார்கள். அதனை நோக்கி மக்களை வென்றெடுக்க உழைத்தார்கள். ஆனால் எதிர்க் கட்சிகளால் மாற்றுத் திட்டம் ஒன்றை உருவாக்க முடியவில்லை.

நாட்டின் பிரதான பிரச்சினையாக இருக்கிற இனப் பிரச்சினை பற்றி எந்தக் கட்சிகளும் எந்தத் தீர்வையும் வைக்கவில்லை.

திறந்த பொருளாதாரக் கொள்கையூடாக நாடு குட்டிச் சுவராகிக் கொண்டிருக்கிறது. பாதுகாப்புச் செலவீனம் அதிகரித்துச் செல்கிறது. மானியங்கள் வெட்டப்படுகின்றன. வேலையின்மை, உயர் கல்வி வாய்ப்பின்மை, இளைஞர் மட்டத்தில் மீள அதிருப்தியை கிளப்பி வருகிறது. விலைவாசி அதிகரிப்பிற்கு மக்களால் ஈடுகொடுக்க முடியவில்லை. பத்திரிகைகளில் எழுத முடியவில்லை என்கிற வாறான அதிருப்திகள் வளர்ந்து வந்த போதும் அவற்றிற்கான மாற்று ஒன்றை வைக்க முடியாததனால் அவை தோல்வியைத் தழுவின.

ஆக வழமைபோல எதிர்க் கட்சிகளின் பலவீனத்தின் மீது ஐ.தே.கட்சி மீளவும் ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. ●

சரிநிகர் மாத இதழ் இல.19/2 அலோசாலை, கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில்
வெளியிடுபவர்: ச.பாலகிருஷ்ணன். அச்சுப்பதிவு:334, காலி வீதி, இரத்மலானை நவமக அச்சகம்.